
# பிள்ளைகளின் அன்பு நலன் கருதி . . .



'பீஸ்' இயக்கத்தின் ஆவணக்குறிப்பு
(சுற்றாடலையும் எங்குமுள்ள
பிள்ளைகளையும் பாதுகாத்தல்)

## மொறீன் செனெவிரத்ன

# பிள்ளைகளின் அன்பு நலன் கருதி . . .

'பீஸ்' இயக்கத்தின் ஆவணக்குறிப்பு

(சுற்றாடலையும் எங்குமுள்ள பிள்ளைகளையும் பாதுகாத்தல்)

*மொறீன் செனெவிரத்ன*

# பிள்ளைகளின அன்பு நலன் கருதி . . .

## 'பீஸ்' இயக்கத்தின் ஆவணக்குறிப்பு

'பீஸ்' இயக்கத்தின் பத்தாண்டுத்தொடர்ச்சியான பிரச்சாரம்
பற்றிய ஒரு சொந்தக் கருத்துரை

**மொறீன் செனெவிரத்ன**

*"உந்தன் கலசத்தில் நிறைந்து வழிந்தோடும் கண்ணீர்*
*வெள்ளத்தை அறியாத இந்நாட் பிள்ளையே"*
*(வோல்டர் சவேஜ் லன்டோர்)*

சுற்றாடலையும் எங்குமுள்ள பிள்ளைகளையும் பாதுகாத்தல்
'பீஸ்' – தபாற் பெட்டி எண் : 58, மௌன்ட் லெவீனியா

© மொறீன் செனெவிரத்ன
2001

இலங்கைத் தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு

செனெவிரத்ன, மொறீன்
பிள்ளைகளின் அன்பு நலன் கருதி / மொறீன் செனெவிரத்ன; மொழிபெயர்ப்பாளர் புஷ்பா சிவகுமாரன் - கல்கிசை : ஆசிரியர், 2001.
ப. 84; ச.மீ. 21.

ISBN 955-8309-04-4 விலை : இலவசம்

i. 362.76 டிடிசி ii. தலைப்பு
1. மொழி சிவகுமாரன், புஷ்பா 2. சிறுவர் துஷ்பிரயோகம்
3. சமூகக் குறைபாடுகள்

முன் அட்டை எண்ணக்கருவும் வடிவமைப்பும் :
ருக்ஷான் ராஜபக்ஸ

First Impressions +941644401
என்ற நிறுவனத்தினால் தட்டச்சாக்கப்பட்டு அச்சேற்றப்பட்டது

## சமர்ப்பணம்

*இலங்கையில் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்தல்,*
*வர்த்தகஞ்சார் பாலியல் ரீதியில் சுரண்டுதல் என்ற பொங்கிவரும்*
*வெள்ளத்திற்கு அணைபோடும் முகமாக, 'பீஸ்' இயக்கத்துடன் சேர்ந்து*
*பணியாற்றிய அனைவருக்கும் இந்நூல்*
*சமர்ப்பிக்கப்படுகின்றது.*

◆ ◆ ◆ ◆

*"சிந்தனை மிகு அர்ப்பண உணர்வுடைய பிரஜைகளைக்*
*கொண்ட சிறு குழு ஒன்று தன்னும் உலகையே மாற்றியமைக்க முடியும்*
*என்பதை ஒரு போதும் சந்தேகிக்காதே. உண்மையில்*
*அது மட்டுமே எப்பொழுதும்*
*இதைச் சாதித்துள்ளது"*

*மார்கிரட் மீட்*
*(மனித இனவியலாளர்)*

# உள்ளடக்கம்

பக்கம்

பாதுகாப்பிற்கான உரிமைகள் ........ 1

வரைவிலக்கணங்கள் ........ 2

நமது சின்னம் ........ 3

ஆசிய சுற்றுலாப்பயணத்துறையில் பிள்ளை விபச்சாரத்திற்கு முடிவு கட்டும் (ECAPT) சர்வதேச இயக்கத்தின் கதையிலிருந்து ........ 5

முதலில் சில வார்த்தைகள் ........ 7

ஆசிய சுற்றுலாப்பயணத்துறையில் பிள்ளை விபச்சாரத்திற்கு முடிவு கட்டும் – (ECAPT) சர்வதேச இயக்கத்துடனான இணைப்பு .... 21

ஐக்கிய நாடுகள் அமையத்தின் முகவரகங்கள் அரசாங்க முகவரகங்கள் என்பவற்றுடனும் நன்கொடை வழங்குவோருடனுமான இடைச்செயற்பாடு ........ 24

சட்டப் பரிந்துரை, கண்காணிப்பு என்பவற்றிற்குப் 'பீஸ்' இயக்கத்தின் பங்களிப்பு ........ 33

'பீஸ்' இயக்கத்தின் செயற்பாடுகளின் விரிவெல்லை ........ 40

மலரும் மொட்டுக்கள் ('பிபென குஸும்') வலையமைப்பு ........ 48

நம்மால் மறக்க முடியாது ........ 52

## இணைப்புக்கள்

பக்கம்


ஒன்று : சட்டச்சீர்திருத்தங்கள் ........ 57

இரண்டு : கட்டாயக் கல்வி ........ 59

மூன்று : பெண்களையும் பிள்ளைகளையும் கடத்தும் பிரச்சினை தொடர்பாகப் பிராந்தியங்களில், தொடக்கி வைக்கும் வேலைகள் ........ 61

நான்கு : பிள்ளைகளையும் இளைஞரையும் யுவதியரையும் பாதுகாப்பதில் ESCAP வகிக்கும் பங்கு ........ 63

ஐந்து : பீஸ் இயக்கத்தின் தனித்தன்மைவாய்ந்ததொரு செயற் திட்டம் பியூரோ இன்டர்நஷனல் கத்தலிக் டி லோஃபோ கூட்டு நிகழ்ச்சித் திட்டம் ........ 65

ஆறு : பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்வோர் செயற்படும் விதம் ........ 69

ஏழு : பிள்ளை விபச்சாரம் இடம்பெறக்கூடிய பெரும் அபாயம் நிலவும் பிரதேசங்களில் வாழும் தாய்மாருக்கு ஆலோசனைக் கல்வி வழங்குதல் ........ 74

எட்டு : பாலியல் ரீதியாகச் சுரண்டப்பட்ட பிள்ளைகளுக்குப் புனர்வாழ்வளித்துப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் ........ 77

ஒன்பது : 'பீஸ்' இயக்கமும் இலங்கை நீதிபதிகளின் நிறுவகமும் நீதித்துறை அலுவலர்களுக்காகக் கூட்டாக ஒழுங்கு செய்த கருத்தரங்கு பற்றிய சிந்தனைகள் ........ 80

'பீஸ்' இயக்கத்தின் பிரசுரங்களும் விடியோக்களும் ........ 82

# பாதுகாப்பிற்கான உரிமைகள்
# பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய சமவாயத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது

## உறுப்புரை 34

*பாலியற் சுரண்டல்*

*விபச்சாரம், இழிபொருள் சார் நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்துதல் என்பன உட்பட, பாலியற் சுரண்டல், விபச்சாரம், துஷ்பிரயோகம் என்பவற்றிலிருந்து, பிள்ளைகளை அரசு பாதுகாக்க வேண்டும்.*

இச்சமவாயத்தை ஏற்றுக்கொண்ட நாட்டுத் தரப்புக்கள், சகல விதமான பாலியற் சுரண்டல்களிலிருந்தும் பாலியற் துஷ்பிரயோகத்திலிருந்தும் பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளன. இந்நோக்கங்களை நிறைவேற்றும் முகமாக, பின்வருவனவற்றைத் தவிர்க்கும் பொருட்டு நாட்டுத் தரப்புக்கள், விசேடமாக, பொருத்தமான சகல தேசிய, இரு தரப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளன:

(அ) ஒரு பிள்ளையை வலுக்கட்டாயமாகத் தூண்டி, சட்ட விரோதமாக, பாலியற் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல்;

(ஆ) விபச்சாரத்தில் அல்லது சட்ட விரோதமான ஏனைய பாலியல் நடவடிக்கைகளில் பிள்ளைகளைச் சுரண்டிப் பயன்படுத்துதல்.

(இ) இழிபொருள் சார் நிகழ்ச்சிகளிலும் இழிபொருள் இலக்கியங்களிலும் பிள்ளைகளைச் சுரண்டிப் பயன்படுத்துதல்.

## உறுப்புரை 39

*மறுசீரமைப்புச்சார் கவனிப்பு*

*ஆயுதமேந்திய மோதல்கள், சித்திரவதை, புறக்கணிப்பு, துன்புறுத்தல், சுரண்டல் என்பவற்றிற்காளாகிய பிள்ளைகள் குணமடைந்து தேறுவதற்கும் அவர்களின் சமூக ஒருங்கிணைப்பிற்கும் பொருத்தமான சிகிச்சை அளிக்கப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு அரசிற்குண்டு.*

எந்தவொரு வகையையேனும் சார்ந்த புறக்கணிப்பு, சுரண்டல், அல்லது துஷ்பிரயோகம், சித்திரவதை அல்லது கொடுரம் மிக்க, மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்துகின்ற விதத்தில் நடத்தப்படுதல் அல்லது தண்டனை வழங்குதல் அல்லது ஆயுதமேந்திய மோதல்கள் என்பவற்றிற்கும் ஆளாகிய ஒரு பிள்ளையின், உள ரீதியானதும் உடல் ரீதியானதுமான மீட்பையும் ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துவதற்குப் பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் நாட்டுத் தரப்புக்கள் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய மீட்பும் ஒருங்கிணைப்பும் பிள்ளையின் உடல், தன்மானம், கௌரவம் என்பவை ஓம்பப்படும் ஒரு சூழ்நிலையில் இடம் பெற வேண்டும்.

## உறுப்புரை 25

*'தகவிடம் பற்றிக் காலத்திற்குக் காலம் செய்யப்படும் மீளாய்வு'*

*கவனிப்பு, பாதுகாப்பு அல்லது சிகிச்சை என்பவற்றிற்காக, அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தகவிடத்தைப் பெற்ற பிள்ளைக்கு, அத்தகவிடம் கிரமமாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று கோரும் உரிமையும் உரித்தாகும்.*

கவனிப்பு, பாதுகாப்பு, அல்லது சிகிச்சை என்ற தேவைகள் கருதி, தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் பிள்ளைக்கு வழங்கப்பட்ட தகவிடம் தொடர்பாகவும் அத்தகவிடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய சூழ்நிலைகள் தொடர்பாகவும் பிள்ளை பெற்றுள்ள உரிமையை அரசுத் தரப்புக்கள் அங்கீகரிக்கும்.

## வரைவிலக்கணங்கள்

"ஒரு பிள்ளை பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படுகின்றது அல்லது ஒரு பிள்ளை தெருவில் வாழ்ந்தவாறு தன் பாலியற் தன்மையை விற்கின்றது என்பதை அறியும் போது, அது பெருமளவு மனத்துயரத்தைத் தருகின்றது. இத்தகைய ஈராயிரம் பிள்ளைகள் அல்லது மூவாயிரம் பிள்ளைகள் இருக்கின்றனவெனின், அது தாங்கொணாத் துயரத்திற்குரிய விஷயமாகும். நாம் செயற்படுவதற்கு, ஆயிரக்கணக்கான இத்தகைய பிள்ளைகள் பற்றிய எண்ணிக்கைகளை அறிந்துகொள்ள அல்லது, குற்ற உணர்வுச் சுமையை நீக்கும்படி அதிகாரம் படைத்தவர்களைக் கோர வேண்டியதில்லை. நாம் கண்ட ஒரு பிள்ளை, அல்லது நாம் அறிந்த ஒரு பிள்ளை அபாயத்திற்குள்ளாகியிருந்தால், உண்மையில், அப்பிள்ளை நமது பொறுப்பாகும் ......................"

*(ஜூடித் என்னியூ : பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுதல்)*

◆ ◆ ◆ ◆

தனது பாலியற் தன்மையை விற்கும் அல்லது வாடகைக்கு விடும் ஒருவர், 18 வயதிற்குட்பட்டவராக இருப்பின், அதுவே, *பிள்ளை விபச்சாரம்* எனப்படும். இது தீர்மானத்தையும் கட்டுப்பாட்டையும், ஒரு விதத்தில், பிள்ளையின் சார்பில், பிள்ளையின் மேல் திணிப்பதால் (பிள்ளைகளுக்காகச் செயலூக்கத்துடன் உழைப்பவர்கள், பொதுவாக,), இச்சொற் பிரயோகத்தைத் தவிர்த்துக் கொண்டு வந்துள்ளனரெனினும், விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள, 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் அனைவரும், சட்டப்படி எவ்வாறிருப்பினும், உண்மையில், நடைமுறையில், பாலியல் ரீதியாகச் சுரண்டப்படுகின்றவர்கள் என்றே கருதப்படுகின்றது.

வயது வந்தவர்களுடைய பாலியல் வேட்கையைத் திருப்தி செய்வதற்காக, (18 வயதிற்குட்பட்ட) பிள்ளைகளைப் பயன்படுத்துதலையே, *பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுதல்* என்கின்றோம். பிள்ளைக்கும் வயதுவந்தவர்களுக்குமிடையிலுள்ள சமமற்ற பலமும் பொருளாதாரத் தொடர்புமே இச்சுரண்டலின் அடிப்படையாக அமைகின்றது. பிள்ளை, அவனது/அவளது இளமைக்காகவும் பாலியல் தன்மைக்காகவும் சுரண்டப்படுகின்றது. பெரும்பாலும், இலாபங்கருதி, மூன்றாந்தரப்பொன்றினால், இச்சுரண்டல், ஒழுங்கு செய்யப்படுகின்றது.

# நமது சின்னம்

'ஏரியில் மலர்ந்திடும் கமலத்தை
எவ்விதத்திலும் நீர் கறைப்படுத்துவதில்லை
மாறாக அழகும் நறுமணமும் கமழ்ந்திடச் செய்யும்'

பௌத்த சிந்தனையின், மிகச் சிறந்த வெளிப்பாடுகளுள் ஒன்றிலிருந்து, நாம், நமது சின்னத்தைத் தேர்ந்தெடுத்துள்ளோம். பௌத்த சமயப் புனித நூல்களில், சேற்றில் மலர்ந்து ஒளி வீசும் தூய்மையான தாமரை மலருக்குப் புத்தர் அடிக்கடி ஒப்பிடப்படுகிறார்: எண்ணற்கரிய தீமைகள் நிறைந்ததாக உலகம் இருந்த போதிலும் புத்தர், தூய்மை கொடாதிருந்தார்.

தாமரை, கீழைத்தேச மலர்களுள் ஒன்று. இது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரோ, அதற்கும் முன்னரோ, நைல் நதியின் சதுப்பு நிலங்களில் வளர்ந்ததாக நம்பப்படுகின்றது. நீலோற்பலம் இலங்கையின் தேசியப் மலர்ச்சின்னமாகும். 2500 ஆண்டுகளுக்கு முன்னர், நமது நாட்டில் பௌத்தம் இடம் பெற்ற நாள் முதல், பௌத்த சமயச் சடங்குகள், அரங்க அமைப்பு, ஓவியம், சிற்பம் என்பவற்றில் தாமரை மலர் இடம் பெற்று வந்துள்ளது.

தண்டிலிருந்து முற்றாகத் துண்டிக்கப்படாத, ஆனால் தண்டு முறிந்த தாமரை மொட்டை, 'பீஸ்' (சுற்றாடலையும் எங்குமுள்ள பிள்ளைகளையும் பாதுகாத்தல்) தனது அடையாளமாகவும் சின்னமாகவும் பயன்படுத்துகின்றது. இது போலவே, பிள்ளை, பாலியல் ரீதியாகச் சுரண்டப்பட்டு, அதற்கு உரித்தான பிள்ளைப்பராயம் மறுக்கப்பட்டு, மானுடமாக வாழும் உரிமை மறுக்கப்பட்டு, உள, உடல், அதிர்ச்சிகளுக்காளாக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு, காய்ந்து கருகிச் சிதைவுறும் வண்ணம் தூக்கி எறியப்படுகின்றது.

ஓரங்கட்டப்பட்ட இத்தகைய பிள்ளைகளுக்கு, எதிர்காலம் பற்றிய ஒரு நம்பிக்கை உண்டா? உண்மை விறைப்பானது: நம்பிக்கை மிகக்குறைவு. அவனோ, அவளோ, ஒரு போதும் முற்றாக மலர முடியாது. தண்டிலிருந்து ஏறத்தாழத் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ள தாமரை மொட்டைப் போன்று வாடி வதங்கி, இறக்க வேண்டியது அவனுக்கு/அவளுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பு.

ஆனால், வாழ்வில் இடம்பெறும் தவிர்க்க முடியாத நிகழ்வு மரணம் என்று நாம் நம்புகின்றோம். இதர தாமரை மொட்டுக்கள் பிறக்கும். "உலர்ந்த விதை, புதிய மலர்களுக்கு வாழ்வு கொடுக்கின்றது."

பாலியல் சுரண்டலின் பொருட்டுப் பிள்ளைகளை அடிப்படையாகக் கொண்ட வியாபாரத்தைத் தடுத்து நிறுத்த முடியுமேயானால், அதை ஒழித்துக் கட்ட முடியுமேயானால், உலகம் முழுவதிலும் பரந்து வாழும் கோடிக்கணக்கான பிள்ளைகளுக்கு ஒளி மயமான நம்பிக்கையும் வாழ்வும் உண்டு : மலரும் நாளையத் தாமரைகள்.........

## ஆசிய சுற்றுலாப் பயணத்துறையில் பிள்ளை விபச்சாரத்திற்கு முடிவு கட்டும் (ECPAT) சர்வதேச இயக்கத்தின் கதையிலிருந்து . . . . .

கட்டாயத்தின் பேரில், வியாபாரஞ்சார் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பிள்ளை படும் தாங்கொணாத் துன்பம், பற்பல எல்லைகளைக் கடந்து மக்களால் உணரப்பட்டுள்ளது. வேறு நிலைமைகளில், ஒருவருடன் ஒருவர் பேசக்கூட மாட்டாத, தாராளக் குழுக்களைச் சேர்ந்தோரும் பழைமை பேணும் குழுக்களைச் சேர்ந்தோரும் பிள்ளைகளுக்காகப் பணியாற்றும் பொது நோக்கத்தை ஏற்றுக்கொண்டு, பிள்ளை விபச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முயலும் இவ்வியக்கத்துடன் ஒன்றிச் செயற்பட முன்வந்துள்ளனர்.

விபச்சாரத்திற்காகப் பிள்ளைகளை வழங்கும் நாடுகளுக்கும் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்யும் வாடிக்கையாளர்களை வழங்கும் நாடுகளுக்கும் இவ்விவாத விடயம் தர்மசங்கடத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. இரு தரப்பினரதும் நன்மை கருதி, நாடுகளுக்கிடையே இடம்பெறும் இந்த ஒத்துழைப்பினால் ஏற்படக்கூடிய விளைவு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

திருப்திகரமான தீர்வுகளைக் காண்பது, மிக மிகக் கடினம் என்பதை நாம் உணர்ந்திருக்கின்றோம். பிள்ளைகளைக் கடத்தி, அதன் பின்னர், அவர்களை, விபச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபடச் செய்யும், வலையமைப்பாக அமைந்து இணைந்து இயங்கும் சக்திகள், மிகச் சிக்கார்ந்தவையாகும்.

★ விவசாயிகள் மீதும் சேரிவாழ் மக்களின் மீதும் வறுமை ஏற்படுத்தும் பாரதூரமான நெருக்குதல்கள் நமக்குத் தெரிந்தவையே. எனினும், பிள்ளை விபச்சாரத்திற்கு இது ஒன்றே காரணமல்ல என்பதை நாம் உணரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

★ பல பெற்றோர்களின் மனப்பான்மைகளிலும் செயல்களிலும் நுகர்வானது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள விதத்தை நாம் உணர்கின்றோம்.

★ பெரும்பாலான சமூகங்களின் மரபுகளில் ஆணாதிக்கம் பின்னிப் பிணைந்துள்ளமையையும் அது ஒரு சக்தியாகத் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றமையையும் கண்டு, நாம் அதிர்ச்சிக்குள்ளாகின்றோம்.

★ பிள்ளைக் காமுகர்களும் பாலியற் துஷ்பிரயோகிகளும் தம்வசப்பட்ட நிர்க்கதியான பலியாடுகளை ஈவிரக்கமற்ற விதத்தில் நடத்துவதையும் அவர்கள் மீது, சில சமயங்களில் வன்முறைகளைப் பிரயோகித்தலையும் காண்கின்றோம்.

★ எதிர்த்து நிற்கும் வல்லமையைக் குறைக்கும் விதத்தில், போதை வஸ்துக்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் விதத்தையும் நாம் கவனிக்கின்றோம்.

★ அதிகாரம் மிக்க, நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க வேண்டிய பதவிகளிலுள்ளோர், பிள்ளைகளை வைத்துச் செய்யப்படும் வியாபாரத்திலிருந்து நன்மையடையத் தயாராக இருக்கின்றனர் என்பதை நம்ப முடியாதிருக்கும் போதும் நம்ப வேண்டியுள்ளது.

மனித உரிமைகளை உதாசீனஞ் செய்து அவமதிக்கும் இப்பரந்த சக்கரத்தை நாம், எங்கு, உடைக்க ஆரம்பிக்க வேண்டும்?

இதற்கு எளிதான பதில்கள் ஏவும் இல்லை. எனினும், ஒவ்வொரு பரப்பிலும் நறுக்கி, முழுமையானதும் பல்துறை அடிப்படையில் அமைந்ததுமான தீர்வைக் கண்டுபிடிப்பதே நமது இலக்காகும். இவ்வுணர்வுடன் நாம் பின்வருபவற்றுடனும் பின்வருவோருடனும் ஒத்துழைக்கின்றோம்: சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர்களுடன் ஒத்துழைப்பதன் மூலம், குற்றஞ் செய்வோரைக் குற்றச் செயல்களிலீடுபடுவதிலிருந்து தடுத்தல்; அபாயத்தை எதிர் நோக்கும் பிள்ளைகளுக்கு உதவும், அரசாங்கச்சார்பற்ற உள்ளூர் அமையங்களுடன் ஒத்துழைத்தல்; பல்வேறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்களிலும் உல்லாசப் பயணத் துறையினருடன் ஒத்துழைத்தல்; சட்டங்களை மாற்றி அமைக்கும் முயற்சியில் அரசியல்வாதிகளுடன் ஒத்துழைத்தல்; பிள்ளைகளுக்கு உதவுவதில் கரிசனை கொண்ட, சகல மட்டங்களிலுமுள்ள மக்களுடன் ஒத்துழைத்தல்.

தமது குழந்தைப் பருவம் மறுக்கப்பட்டு, வயது வந்தோரினால், பாலியல் பொருட்களாகத் தாம் பயன்படுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு வாழும் பல பிள்ளைகளைக் கொண்டதோர் உலகை, நாம் சகித்துக்கொள்ள முடியாது. இந்நம்பிக்கையே நாம் இன்று வரை நின்று நிலைப்பதற்கு நமக்கு உதவியுள்ளது. இந்நிலைமையை நாம் மாற்றி அமைக்கலாம் என்ற எதிர்பார்ப்பும், சகல பிள்ளைகளும் மரியாதையுடன் நடத்தப்பட்டு அவர்கள் மீது அன்பு செலுத்தப்படும் நூற்றாண்டாக இப்புதிய நூற்றாண்டு விடியும் என்ற எண்ணமும் நம்மை இப்புதிய நூற்றாண்டிற்குள் இட்டுச் செல்லும்.

*றொன் ஓ' கிரடி*
*(The ECPAT Story என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)*

## முதலில் சில வார்த்தைகள்

ஆரம்பத்தில், அதாவது 1988 – 1989 வாக்கில், இதைத் தனிப்பட்ட முறையில் ஓர் அறைகூவலாக நான் எடுத்தேன் என்றால், அது, இலங்கையில், அச்சு ஊடகத்தில், பிள்ளைகளினதும் பெண்களினதும் பிரச்சினைகளை அலசி ஆராயும், சில பல ஆண்டு அனுபவம் படைத்த பத்திரிகையாளராகிய எனக்கு வழங்கப்பட்ட ஓர் ஒப்படையேயாகும்; அதாவது, ஒரு பணி. நான், கையேற்று, ஆழமாக அணுகி, 'ஆரம்பத்திலிருந்து தொடங்கி', ஆய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய ஒரு விடயம் என்று கூறுவதற்கும் இல்லை. இலங்கையில் பிள்ளை விபச்சாரம் (மிக ஆரம்ப காலத்திலிருந்தே, அதாவது குறைந்தது கடந்த 40 வருடங்களிலேனும் சிறுவர் விபச்சாரம்) நிலவியமை பற்றி நான் ஏற்கெனவே அறிந்திருந்தேன். இது, மிக மோசமான நிலையிலிருந்தது; நாட்டின் சில பிரதேசங்களில் இதை மிகத் தெளிவாகக் காணக்கூடியதாகவும் இருந்தது. ஏனைய பிரதேசங்களில், இது பெரும்பாலும் மூடி மறைக்கப்பட்டது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு, இதைச் சட்ட விரோதமாக்குவதற்கு, ஏதாவது செய்யப்பட்டதேயானால், அது மிகச் சிறிய அளவிலேயே செய்யப்பட்டது.

வேண்டிய தரவுகளைச் சேகரித்து விடய ஆய்வுகளை, ஆழமான ஆய்வொன்றிற்காக மேற்கொள்ளும்படி மூன்றாம் உலக சுற்றுலாப்பயணத் துறை பற்றிய முழு மொத்தமான கூட்டிணைப்பு (ECTWT) என்னை அழைத்த போது, இப்பிரச்சினையுடன் நெருங்கி மோதும் சந்தர்ப்பம் எனக்கு வழங்கப்பட்டபோதிலும், சரியாகச் சொல்லப் போனால், எட்டு வருடங்களுக்கு முன்னர், 1980 இல், இலங்கையில், முதன்முதலாக, இப்பிரச்சினை பற்றிப் பிரசுரிக்கப்பட்டமை தொடர்பான சிந்தனை எனக்குச் சலிப்பை ஏற்படுத்தியது.

1980 இல் அருவருப்பான, பயங்கரமான, பேச முடியாத தீமைகளைக் கொண்ட கதை வெளியாகியது. ஸ்விற்சர்லாந்தில் லௌஸானிலுள்ள டெரே டி ஹோம்ஸிற்கான ஆராய்ச்சியாளர், டிம் பொண்ட், தனது ஆய்வைப் பிரசுரித்தார், கணிசமான அளவு கட்டுப்படுத்தப்பட்ட, பெரிதும் மருத்துவ அடிப்படையிலமைந்த இவ்வாய்வு, வடக்கு, தெற்கு ஆகிய இரு திசைளிலும் பரபரப்பான செய்தியாக, ஊடகங்களின் மூலம் பிரசித்தி பெற்றது.

1980 இல், இலங்கை தேசிய சுற்றுலாப்பயண அமையமாகிய, 'இலங்கைச் சுற்றுலாப்பயணச் சபையில் நான் விளம்பரத்திற்கும் சந்தைப்படுத்துதலுக்குமான பணிப்பாளராக நியமிக்கப்பட்டேன்.

டிம் பொண்டின் ஆய்வு, நம்மைப் பீரங்கி தாக்குவது போல் தாக்கியது. அரசாங்கம் ஸ்தம்பித்து நின்றது. சபையைச் சேர்ந்த பல அலுவலர்கள், தங்ககக்காரர்கள், பிரயாண முகவர்கள், சுற்றுலாப்பயண வழிகாட்டிகள், இலங்கை உல்லாசப் பயணத்துறையின் திடீர் வளர்ச்சிக் காலத்தையும், அத்துறை மணம் பரப்பிக்கொண்டிருந்த காலத்தையும் (1970 களின் நடுப்பகுதியிலிருந்தேனும் நம்ப முடியாத 27% ஆண்டு வளர்ச்சி வீதம் பதிவு செய்யப்படலாயிற்று) தவிர, இத்துறையில் வேறென்ன நடக்கின்றது என்பது பற்றி அறியாதவர்களாக இருந்தமையால் முதலில் வாயடைத்துப் போய் நின்றனர். இத்துறையினர், சற்றேனும் நின்று, இது பற்றிக் கவனஞ் செலுத்தவோ, சிந்திக்கவோ இல்லை. பிள்ளைகள் பாலியற் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றார்களா? கடற்கரைச் சிறுவர்கள், இயல் மீறிய பாலுணர்ச்சியாளர்களுக்கு வாடிக்கையாளர்களாகச் 'சேவை' செய்கிறார்களா? சுத்த அபத்தம் என்று பலர் கூறினர். நம்பாதவர்கள், இதைக் கேலிக்குரிய செய்தி என்றனர். பிள்ளை விபச்சாரம் என்ற வெறும் சிந்தனையினாலேயே திடுக்கிட்டோர், இறு புனையப்பட்ட கதை என்று கூறி, ஆராய்ச்சியாளரிடம் கோபங்கொண்டனர்.

என்னைப் பொறுத்தளவில், நான் யாவும் உண்மையென்று நம்பினேன். அழகான ஹிக்கடுவ, உனவத்துன, எத்னுகல கடற்கரைகளிலும், சிறப்பு வாய்ந்த புராதன நகரங்களிலும், குறிப்பிட்ட ஒரு வகை உல்லாசப் பயணிகள், தேயிலை, நன்னீர் மீன்பிடி, மாட்டு வண்டிப் பயணம் என்பவற்றினால் மட்டுமே 'கவரப்பட்டு' செல்லவில்லை என்று எண்ணத் தோன்றும் பசும் மலைப் பிரதேசங்களிலும், கழிவுபொருட்கள் பரவிக்கிடப்பதை நான் கண்டிருக்கின்றேன்.

ஆரம்ப அதிர்ச்சிக்கும் அச்சத்திற்கும் பின்னர், இலங்கை அரசாங்கம் ஏதோ செய்தது. புதிய சட்டங்களை ஆக்கும் நோக்கத்துடனும் பிள்ளை விபச்சாரத்தை எதிர்த்து நின்று, அதை அறவே ஒழித்துக்கட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்துடனும் அதிகாரிகள், மீளாய்வுக் குழுவொன்றை நிறுவ வேண்டுமெனவும், மேற்கொண்டு ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கு அனுசரணை வழங்க வேண்டுமெனவும், இவை வரவேற்கத்தக்க நடவடிக்கைகள் எனவும் நடு நிலையான மக்கள் கருதினர்.

ஆனாலும் ஏழு வருடங்களுக்குப் பின்னர், நாட்டில், பிள்ளை விபச்சாரத்தை ஒழிப்பதற்கு, மீளாய்வுக் குழு, திடமான திட்டங்களையோ செய்முறைகளையோ முன்வைக்கத் தவறியமையை வரலாறு பதிவு செய்துள்ளது. பிரச்சினையைச் சட்ட ரீதியாக அணுகிப் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக வரையப்பட்ட

சட்டமூலத்தை, மீளாய்வுக் குழு ஆறு வருடங்களின் பின்னர், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் நேரம் வந்தபோது, அச்சட்டமூலம் 'அவசியமில்லை' என்று கருதப்பட்டு, அத்தருணத்திற் பதவியிலிருந்த இராஜாங்க, (சுற்றுலாப் பயணத்துறை) அமைச்சர், அதை ஒதுக்கி வைக்க நினைத்ததுடன் ஒதுக்கியும் வைத்தார்.

இலங்கையில் (பிரிவினை என்ற பிரச்சினை தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக அரசாங்கப் படைகள்) உள் நாட்டுப் போர் நடத்திக்கொண்டிருந்தன. இந்தியப் படையினர் 'சமாதானத்தை ஏற்படுத்துவோ'ராக வரவழைக்கப்பட்டு (சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காக – ஆனால், அதில் வெற்றி பெறவில்லை) புரட்சிக்காரர்கள் செயற்பட்ட, நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் அமர்ந்தனர். சுற்றுலாப்பயணத் துறை முன்னர் ஒரு போதுமில்லாத தடங்கல் நிலைக்குத் தள்ளப்பட்டது. *1983* ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், பெரும்பான்மைச் சிங்களவர்கள், தெற்கில் தாக்கத் தொடங்கி, இரண்டு வாரங்கள் தொடர்ந்த பயங்கரத்தின் போது, உல்லாசப் பயணிகள் நாட்டை விட்டு ஓடித்தப்பினர். *1987* இல், பிள்ளை விபச்சாரம், அரசாங்கத்திற்கு எவ்விதக் கவலையையும் ஏற்படுத்தவில்லை; அல்லது தான் கவலைப்படத் தேவையில்லை என்று அது நம்பியது.

இதற்கிடையில் ஏனைய சக்திகளும் அமையங்களும் வாளாது இருக்கவில்லை. குறைந்தது, ஒரு தசாப்த காலமாகவேனும், பாங்கொக்கிலுள்ள ECTWT, ஆசியாவிலுள்ள 'வரவேற்கும் நாடுக'ளில், சுற்றுலாப் பயணத்துறை எதிர் நோக்கிய 'இருண்ட பக்க'த்தை அவதானித்து வந்தது. விபச்சாரம், வர்த்தகக் கடத்தல், இழிபொருட் துறைப் பயன்பாடு, வயது வந்தோரின் பாலியற் தேவைகளுக்காகப் பிள்ளைகளை விற்றல் என்பன மிகக் கடுமையான பிரச்சினைகளாக இருந்தன. உல்லாசப்பயண 'வீஸா'வில் ஆசிய நாடுகளுக்கு வருவோர் மட்டுமே வாடிக்கையாளர்களல்ல. சிறுவர்களையும் இவர்களைக் கொண்ட விபச்சார விடுதிகளையும் பயன்படுத்தும் உள்ளூர்க்காரர்களும் இதில் அடங்குவர்.

உல்லாசப் பயணத்துறை உருவாக்கி, உற்பத்தி செய்யும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான தீர்வுகளைப் பரிசீலித்துக் கண்டுகொள்வதற்காக, தாய்லாந்தில், சியாங் மாயிலுள்ள ECTWT இன் பணிப்பாளர், வண. பீட்டர் ஹோல்டன், இரண்டு வாரச் செயலமர்வொன்றில் பங்குபற்றுமாறு, *1984* இல் எனக்கோர் அழைப்பு விடுத்தார்.

சியங் மாய் செயலமர்வைத் தொடர்ந்து, *1986* ஆம் ஆண்டில் ஸ்டட்கார்ட்டில் ஆலோசனை நடத்தப்பட்டது.

1984 அளவில், ஏற்கெனவே நான் 'முறைசார் சுற்றுலாப்பயண' துறையை விட்டு விலகி, 'மாற்று சுற்றுலாப்பயணம்' என்ற பரப்பில் பணி புரிய ஆரம்பித்தேன். இது தொடர்பான வழிவகைகள் அத்தருணத்தில், உலகளாவிய ரீதியில் ஆராயப்பட்டு வந்தது. இத்தருணத்தில் என் கணவரும் நானும் நமது சொந்தப் பயண முகவரகமொன்றை ஆரம்பித்தோம். இதன் பயனாக நாம், சமூக–சமய–பண்பாடு, கல்வி– என்பன சார்ந்த சுற்றுலாப்பயணத் துறையில் நன்கு ஈடுபட்டோம். ஆனால் 1986 அளவில், 'சாதாரணமான', 'சிறந்த' சுற்றுலாப் பயணிகள் வராததனால் ஏற்பட்ட நஷ்டத்தை, 1986இல் நாம் உணரத் தொடங்கி விட்டோம். இலங்கையின் போர் நிலைமையுடன் தொடர்புபட்ட, 'நுண்ணுணர்வு' பணிப் பரப்புகளில் எனது கணவர் பிரவேசித்தார். நான், எப்பத்திரிகையையும் சாராப் பொது எழுத்தாளராக மீண்டும் செயற்பட ஆரம்பித்தேன். இத்தருணத்தில், 1988 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம் 27 ஆந் திகதியன்றும் அவ்வருடம் அதைத் தொடர்ந்து வந்த மாதங்களிலும், எனது வாழ்க்கை முழு மொத்தமாக நிலைமாறலாயிற்று.

இத்தருணத்தில், இலங்கையில், சுற்றுலாப் பயணத் துறைக்கும் பிள்ளை விபச்சாரத்தின் வளர்ச்சிக்கும் இடையிலிருந்த பிணைப்பைக் கண்டறிந்து, ஆவணப்படுத்தும், 'ஒப்படை' என்ற வகையிலமைந்த ஆராய்ச்சி ஆய்வொன்றில் நான் ஈடுபடலானேன். 1989 இல் இத்துறையில் நாங்கள் எங்கள் பணியை ஆரம்பித்தது முதல் அடுத்த பத்து ஆண்டுகளாக, இதுவே என் வாழ்க்கைப் பணியாகி, உண்மையில் எனது வாழ்வின் பெரும் பகுதியை ஈர்த்துக் கொண்டது.

ECTWT இன் செயற்திட்ட ஆலோசகரான, திருமதி ஜூன் ரொஜர்ஸ், பொதுச் செயலாளராக இருந்த திரு. ஷேர்லி ஜே.எஸ்பீரிஸைச் சந்தித்து, இலங்கையில் ஆராய்ச்சி ஆய்வொன்றை மேற்கொள்ளும்படி நம் இருவரையும் அழைத்தார். அவ்வாண்டில், பின்னர், ஜூலை மாதத்தில் பாங்கொக்கில் இடம் பெறவிருந்த ஆலோசனைக் கூட்டத்தின் பின்னரே இவ்வாராய்ச்சி ஆரம்பிக்கபடவிருந்தது. ECTWT இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கொஸொன் ஸ்ரீஸங்கினதும் திருமதி ரொஜர்ஸினதும் வழிகாட்டலின் கீழ், தாய்லாந்து, ஃபிலிபீன்ஸ் முதலிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆராய்ச்சியாளர்களை இக்கூட்டம் உள்ளடக்கியது.

பிள்ளைகளின் பிரச்சினைகள் பற்றிய துறைகளில் பணி புரிந்து கொண்டிருந்த, இலங்கையிலுள்ள முன்னணி அரசாங்கச் சார்பற்ற அமையங்களிலிருந்து ஒரு சிறு குழுவின் உறுப்பினர், இச்செயற் திட்டத்தின் ஆலோசகர்களாகப் பணியாற்றும்படி, ஜூலை மாதத்தின் நடுப்பகுதியில் கேட்டுள் கொள்ளப்பட்டனர். ஆராய்ச்சி ஆய்வை

முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் இக்குழு, கிரமமாகச் சந்திக்க ஆரம்பித்தது. இல்வாய்வு சம்பந்தப்பட்ட தரவுகளை ஷேர்லியும் நானும் சேகரித்தோம். தரவுகளைச் சேர்த்து, ஒழுங்காக்குவதற்கு 1989 ஆம் ஆண்டு முழுவதும் நமக்கு அவகாசம் வழங்கப்பட்டது. அதுவரை காலமும் செய்யப்பட்ட வேலையை மீளாய்வு செய்தற்காக 1989 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் குழு, மீண்டும், கலாநிதி ஸ்ரீஸங்கையும் திருமதி ரொஜர்ஸையும் சந்தித்தது.

இவ்வொப்படையை நான் ஏற்றுக்கொண்டபோது, புறவயமாகவே இவ்வாய்வை நான் மேற்கொள்ளப் போவதாகக் கூறியதால், ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட மாதங்களில் இப்புறவயத் தன்மையைப் பேணுவதற்குக் கஷ்டப்பட்டு முயன்றேன். நான் என்னுடைய வேலையைச் செய்துகொண்டு போகும் போது, தெளிவாக வெளிப்பட்ட விஷயங்கள் காரணமாக ஏற்பட்ட என் மனப்புண்களை உள்ளடக்கி வைத்திருத்தல் மேன்மேலும் கடினமாகியது.

நான் எதிர்நோக்கிய பல நிகழ்வுகளுள் இரண்டு சம்பவங்கள் என் மனத்தில் அழியாது பதிந்துவிட்டன. முதலவாது, இலங்கையின் வட மேற் கரையோரத்தில் அமைந்துள்ள நீர்கொழும்பில், பத்து அறைகள் கொண்ட தங்கும் விடுதி ஒன்றின் நிர்வாகி, தான் 'கடவுலல்ல' வென்றும், எனவே, 'மாடியிலுள்ள அறைகளுள் என்ன நடக்கின்றதோ அவற்றிற்குத்' தான் பொறுப்பல்லவென்றும் தன் நேர்மையை வெளிப்படுத்தும் விதத்தில் கூறினார். அவ்வறைகளில் இடம்பெற்றவை முற்றுமுழுதாகப் பாலியற் துஷ்பிரயோகமாகும். பத்து வயதிற்கு மேற்படாத சிறுவர்கள் இதில் இடம் பெற்றார்கள். இவ்வறைகளில் டசின் கணக்கான இழிபொருட் திரைப்படத் தயாரிப்புக்கள் விடியோ நாடாக்களில் பதிவு செய்யப்பட்டுக்கொண்டிருந்தன. துவிச்சக்கர வண்டி ஓட்டும் ஒரு சிறுவன், சிறுவனின் நண்பன் என்று கூறப்படும், சிறுவனைத் துஷ்பிரயோகஞ் செய்பவனாற் கொடுக்கப்பட்ட துவிச்சக்கர வண்டியில், பயித்தியம் பிடித்தாற் போலச் சுழன்று சுழன்று ஓடி, இறுதியில், முழுச் சோர்வினால் கீழே வீழ்ந்து விடுகின்றான். இவனை நான் மறக்க மாட்டேன். பாவம் சிறுவன். 'அங்கு (ஐரோப்பாவில்) உடனடிச் சந்தை'யில் தான் விற்கவிருக்கும், பிரதி செய்து கொண்ட 'விடியோ'க்களைப் பற்றிச் சிந்தித்த மாத்திரத்தில், தனக்கு விரைவில் கிடைக்கவிருக்கும் 'பணம், பணம், பணம்' பற்றி எண்ணியவாறு, அந்த விடுதியின் பூந்தோட்டத்தில், தனது தொப்பியை மேலே வீசி வீசிப் பிடித்து, சந்தோஷ மேலீட்டினால் குதித்துக் கொண்டிருந்த அந்த ஐரோப்பியனையும் நான் என்றென்றும் மறக்க மாட்டேன்.

மற்றைய நிகழ்ச்சி, மேலுந் துன்பத்தைக் கிளற வல்லது. இதை, நான்,

இன்றும் 'கூட்டிலடைப்பட்ட பிள்ளைக'ளின் கதை என்றே குறிப்பிடுகின்றேன். ஆம். கோழிக்கூட்டில் அடைத்து வைக்கப்பட்ட பிள்ளைகளெனலாம். உயிருள்ள கோழிக்குஞ்சுகளை அடைத்து வைக்கும் பிரம்பாலான கூட்டுகளை விட, இது பெரியது. அவருடைய துருவி ஆராயும் தன்மை காரணமாகத் தானே அச்சுறுத்தலுக்காளாகியிருந்த, தேவாலய வட்டாரப் பிரிவைச் சேர்ந்த ஒரு பாதிரி, (கொழும்பு நகருக்கு வடக்கே, கடற்கரையோரமாக அரைச்சுவருடன் கூடிய கம்பி வலை போடப்பட்ட) 'கூடு' இருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். காணாமற் போன, கைவிடப்பட்ட இந்தப் பிள்ளைகள் – 8 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்கள் – இக்கூட்டிலிருந்தே விபச்சாரத்திற்காக விற்கப்பட்டனர். நான் அருகே சென்ற போது ஒரு சிறுவன் என்னைப்பார்த்து, "மாமி, எங்களைக் கூட்டிச் செல்ல வந்திருக்கிறீர்களா?" என்றான். "கூட்டிச் செல்லவா, எங்கே? அவர்கள் உங்களை எங்கே கூட்டிச் செல்கிறார்கள்?" என்று நெஞ்சு படபடக்க நான் கேட்டேன். மிகச்சிறிய சிறுவர்கள் ஓலமிட்டு அழத் தொடங்கினார்கள். என்னுடன் முதன்முதலிற் கதைத்த சிறுவன், "மாமி, அவர்கள் எங்களை அழைத்துச் சென்று, கொடுஞ் செயல்களைச் செய்கிறார்கள். எங்களுக்குப் பயம், எங்களுக்குப் பயம்" என்றான். இத்தருணத்தில், பிள்ளைகள் அடைக்கப்பட்டு வைத்திருந்த "கூட்டின் சொந்தக்காரன், அத்து மீறிப் பிரவேசித்தமைக்காக எனது கணவரை அடித்து, தனது வளவினுள் நமது மோட்டார் வண்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால், அதற்குத் தீ வைக்கப் போவதாக அச்சுறுத்தினான். எனது கணவர், அவனைத் திரும்பத் தாக்கி, அவனிடம் தன்னுடைய உத்தியோகபூர்வமான அடையாள அட்டையைக் காட்டிய பின் நாங்கள், வெளியே வந்து சேர்ந்தோம். அப்பிள்ளைகளைச் சந்தித்த எங்கள் உள்ளம் கொதித்து வேதனைக்குள்ளாகியது. இம்மனிதர் பணக்கராகவும் அரசியற் செல்வாக்குப் பெற்றவராகவும் இருந்தமையால், அருகிலிருந்த பொலீஸ் நிலையத்தில் நாம் முறைப்பாடொன்றைச் செய்த போதிலும், சட்டத்தைச் செயற்படுத்தும் அதிகாரிகள் எவ்விதப் பதில் நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. எனினும், அதன் பின்னர், அக்குறிப்பிட்ட கடற்கரைப் பகுதியில் அந்தக் 'கூண்டைக் காண முடியவில்லை. நான் எவ்விதத்திலும் மருட்சியடையவில்லை. அவர் அதை வேறோர் இடத்திற்கு மாற்றி இருக்க வேண்டும்.

இவ்விரு சம்பவங்களும் வேறும் சம்பவங்களும் என் 'விதி'யை நிர்ணயித்தன. நான் மேற்கொண்ட 'ஒப்படை'யுடன் நான் ஒன்றி விட்டேன். இலங்கை அறிக்கையைத் தயாரிப்பதற்காக, மிகவும் தீவிரமாக, ஷேர்லியுடன் பணியாற்றினேன்: குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் சுற்றுலாப் பயணத்துறையும் பிள்ளை விபச்சாரமும்

பற்றிய அறிக்கை, ஜூனிற்கும் கொஸெகிற்கும் அனுப்புவதற்குத் தயாராகி விட்டது. மார்ச் 1990 இல் வடக்கிலும் கிழக்கிலும் போர். தெற்கில் வன்முறைகளும் பாதுகாப்பின்மையும், நாடு முழுவதும் அரசாங்கத்திற்கும் பயங்கரவாதிகளுக்கிடையில் மோதல்கள், அரசியல் திரமின்மையும் குழப்பமும் தீவு முழுவதையும் சூழ்ந்திருந்த இப்பின்னணியில், நாம் நம்மால் இயன்றதைச் செய்து விட்டோம் என்ற திருப்தி எங்கள் இருவருக்கும் ஏற்பட்டது. நாம் உணர்ந்துகொள்வதற்கு முன்னரே, 'விஜய வீஸாக்க'லில் நாட்டினுட் பிரவேசிக்கும் பிள்ளைத் துஷ்பிரயோகிகளின் தொகை பல தசாப்தங்களாகப் பெருகி வந்தமைக்குப் போதிய ஆதாரம் உண்டு. பிள்ளைத் துஷ்பிரயோகச் சங்க வலையமைப்புக்களிடையே இலங்கை ஒரு 'விண்ணுலகு' என்று கருதப்பட்டது.

மிகச் சில பலவீனமான சட்டங்கள் பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனலாம். பலம் மிக்க, நன்கு நிறுவப்பட்ட உள் நாட்டு, சட்ட எதிர்ப்புக் குற்றவாளிகள் (Mafia) இக்கொடிய வியாபாரத்தை நடத்துகின்றார்கள். வறுமையில் வாடும் மக்களிடையேயிருந்து, அபரிமிதமாகப் பிள்ளைகள் வழங்கப்படுகிறார்கள். தமது சிறுவர்கள் துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதைப் பற்றிப் பாராமுகமாக இருந்து, தமது பிள்ளைகள் கொண்டுவரும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பெறப்படும் டொலர்களில் மட்டுமே கண்ணுங்கருத்துமாக இருந்த பெற்றோர் சற்றேனும் பிள்ளைகளில் அக்கறை காட்டவில்லை. தமது ஆண் பிள்ளைகள் 'கர்ப்பம் தரிக்க மாட்டார்கள்' என்பதே இதற்குக் காரணம். அரசாங்கம், அராஜகத்துடன் போராடிக்கொண்டிருந்தது. பல மில்லியன் ரூபாக்கள் முதலீடு செய்யப்பட்டுள்ள உல்லாசப் பயணத்துறையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரும் முயற்சிப் போராட்டம் அரசாங்கத்தினுடையதாக இருந்தது.

திரும்பிப் பார்க்கும் போது, இரண்டு பேர், நேர்நிலையானதும் சரியானதுமான தகவல்களைச் சேகரிக்கும் தாகத்துடன் செயற்பட்டமை எவ்வளவொரு அசாத்தியமான சாதனை என்று இப்பொழுது எண்ணத் தோன்றுகின்றது. பிரச்சினை உண்டென்பது பற்றிப் பற்பலரும், உயர் பதவிகளை வகித்தோரும் நன்கு அறிந்திருந்தனரெனினும், அது, மிகக் கவனமாக மூடி மறைக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படாமல் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

பிள்ளைகளை, வர்த்தக அடிப்படையில், பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்வததைத் தடுத்து, கட்டுப்படுத்தி, ஒழிக்கும் பணியில், 'கடவுளின் கரம்' எனக்கு வழிகாட்டியதென்றும் தொடர்ந்தும் வழிகாட்டுகின்றதென்றும் நான் உணர்கின்றேன் என்றால், இவ்வுணர்ச்சி, காமத்தரகர்கள், பெண் தரகர்கள், பிள்ளைத்

துஷ்பிரயோகிகள் என்போர் இலங்கையின் தென் மேற்குக் கடற்கரைகளில் அநாகரிகமான, ஆபாசமான சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்குள், அபாயத்திற்கு மேல் அபாயத்தைப் பொருட்படுத்தாது, பிரவேசித்த கஷ்டமான மாதங்களில் எனக்கு முதன்முதலாக இவ்வுணர்ச்சி ஏற்பட்டது.

'நவீன அடிமைத்துவத்தில் சிக்குண்டமை' என்ற தலைப்பிலமைந்த ஆராய்ச்சி ஆய்வுகளின் அறிக்கை, மேன்மைவாய்ந்த, உயர்மட்டக் கேட்போரின் முன் சமாப்பிக்கப்படும் விதத்தில் மற்றுமோர் ஆலோசனைக் கூட்டம், சியங் மாயில் நடைபெறவிருப்பதாக, 1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நமக்கு அறிவிக்கப்பட்டது. இதிற் பங்கு பற்றி நமது அறிக்கையைச் சமர்ப்பித்தல் பற்றி நாம் பெரு மகிழ்ச்சி அடைந்தோம்.

இலங்கைப் பேராளர் குழுவில் நம்முடன் மற்றும் மூன்று பேரையும் சேர்துக் கொள்வதாக, ஷோ்லியும் நானும் முடிவு செய்தோம். திரு. மொகமத் மஹுரூஃப் (அத்தருணத்தில் டெரே டி ஹோம்ஸ் – இலங்கை என்ற நிறுவத்திற் பணியாற்றிக் கொண்டிருந்தார்.) திருமதி மானெல் நானயக்கார (இலங்கை மகளிர் தேசிய கிறிஸ்த சங்கத்தின் தேசிய நிறைவேற்றுப் பணிப்பாளர்), செல்வி ஃபெயித் அபயவர்தன (இலங்கை, ரெட் பானாவின் நிகழ்ச்சித் திட்ட அலுவலர்) ஆகிய இவர்கள் நமது ஆய்வில் மிக்க ஆர்வம் காட்டியோராவர். இவ்வாண்டின் இறுதி வாக்கில், ஷோ்லியுடனும் என்னுடனும் சேர்ந்து, 'பீஸ்' (சுற்றாடலையும் எங்குமுள்ள பிள்ளைகளையும் பாதுகாத்தல் இலங்கையில் பிள்ளை விபச்சாரத்தை ஒழித்துக்கட்டுவதற்கான ஓர் இயக்கம்) மையக் குழுவில் இடம்பெற்றது.

உலகில் மிகவும் ஓரங்கட்டப்பட்ட, பலியாகி, இரையாகிய பிள்ளைகளைக் கவன மையமாகக் கொண்ட மற்றுமொரு 'தெறிப்'பாகவே இக்கூட்டம் அமையும் என்பது எனது கருத்தாக இருந்தது. ஆலோசனையும் அர்ப்பணமும் இடம்பெற்ற போதிலும், இவ்வாராய்ச்சி ஆய்வுகள், 'முதனிலைப் படிவ'த் தொகுதிகள் போல் அலுவலகமொன்றின் கோவைகளுள் நிறைவேற்றப்படாது வெறுமனே கிடக்கும் என்பதே என் எண்ணம்.

எனவே, நானும் என் சக அலுவலர்களும் வித்தியாசமான முறையில் துலங்குவதென முடிவு செய்தோம். நமது முடிவு, ஒரு மனதாகச் செய்யப்பட்டதொன்றாகும். செயல் நிகழ்ச்சித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். ஆய்வுகள் மேற்கொள்ளப்பட நாடுகளில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தேசியக் குழுக்கள், முன் சென்று, அவசியப்படுவனவற்றைச் செய்ய

**வேண்டும்**. ஆசிய சுற்றுலாப் பயணத் துறையில், பிள்ளைகள் விபச்சாரத்திற்கு முடிவு கட்டும் சர்வதேச இயக்கம் (ECPAT) பிறந்தது. ரொன் ஒ'கிரேடி, சியங் மாய் கூட்டத்தில் பின்வருமாறு கூறினார்: "எனவே, ஆசிய சுற்றுலாப் பயணத்துறையில் பிள்ளை விபச்சாரத்தைத் தீர்த்துக் கட்டுவோம்". வேண்டப்பட்டது இவ்வளவே. இதை விட வேறு என்ன தேவை? நாம் கருமத்தில் இறங்குவோம். எனது மகிழ்ச்சிக்கோ எல்லையில்லை.

சியங் மாயில் *1990* ஆம் ஆண்டு மே மாதம் முதலாந் திகதியன்று, நமது விரகுகளும் உத்திகளும் நமது மனத்தில் தெளிவற்ற நிழல்களாகவே ஊசாடிய போதிலும், இரையாகும் பிள்ளைகளின் சார்பாகவும் அவர்களைத் துஷ்பிரயோகஞ் செய்யும் குற்றவாளிகளுக்கெதிராகவும் போராடுவதற்கு நாம் ஐவரும் ஆயத்தமானோம்.

அங்கு, அப்பொழுதே உருவாக்கப்பட்ட மையக் குழுவின் தலைவராக, நால்வரும் என்னை ஏகமனதாகத் தெரிவு செய்தனர். பெயர், பின்னர் உருவாக்கப்பட்டது: ECPAT இன் உய்த்துணரக் கிடக்கும் பொருளை நன்கு உணர்ந்த ஷேர்லியின் கருத்துக்கள், அத்தருணத்தில், இலங்கையில், நன்கு வரவேற்கப்பட்டிருக்க மாட்டா. 'சுற்றாடலையும் எங்குமுள்ள பிள்ளைகளயும் பாதுகாத்தல்' என்பதன் கருக்கச் சொல்லாகிய 'பீஸ்' போரே அன்றாட நிகழ்வாக இருந்த ஒரு நாட்டில் பயன்படுத்துவதற்குச் சிறந்ததொரு பெயராக அமைந்தது! உண்மையில் நாம் அமைதியாக இல்லை என்பதையும் நமது நாட்டை – அதாவது நம் நாட்டிலுள்ள பிள்ளைகளும் இளைஞர்களுமான மலர்களை – நாம் அறியாமலே மெல்ல மெல்ல அழிப்போருடன், 'இரண்டாம் போரி'ல் நாம் 'சண்டை'யிடுகின்றோம் என்பதை நாம் எப்பொழுதுமே விளக்கலாம். ECPAT தெரிவு செய்த சின்னம், தண்டிலிருந்து ஏறத்தாழத் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ள ரோஜா மலராகும். எனினும், 'பீஸ்' இயக்கம் தாமரை மொட்டைப் பயன்படுத்துகின்றது: இலங்கையின் தேசிய மலரான தாமரை (மொட்டு) விபச்சாரத்திற்குட்படுத்தப்பட்ட, பிள்ளையைக் குறித்து நிற்கின்றது: இது என்றுமே மலர மாட்டாத ஒரு மொட்டாகும். எனினும், எவ்விதக் கரிசனையுமின்றிப் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்வதிலீடுபட்டுள்ள, சமூகமாகிய தண்டிலிருந்து, முற்றாக ஒடிந்து விடாத – எதுவுமெ நிறைவேற்றப்படாத, சிறு பராயம் கூட மறுக்கப்பட்ட – நிலையில், வாடி வதங்கிக் கருகி இறக்கும். 'பீஸ்' / ECPAT என்பன எதைக் கருதி, எதற்காகப் பணிபுரிகின்றனவோ, அதை, இச்சின்னம் எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வியக்கத்தின் *10* ஆம் ஆண்டில், இப்பொழுது, நான் இக்கேள்வியைக் கேட்க வேண்டியுள்ளது: நமது முயற்சிகள் எவ்வளவு தூரம் வெற்றியீட்டியுள்ளன?

பிள்ளை விபச்சாரத்தையும், வியாபார அடிப்படையில் பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுதலையும் இலங்கையில், நாம் நிறுத்தி விட்டோமா அல்லது கட்டுப்படுத்தத் தான் முடிந்துள்ளதா? பாலியற் துஷ்பிரயோகத்திற்காகப் பிள்ளைகள் இன்னமும் விற்கப்படுகிறார்கள், வாங்கப்படுகிறார்கள், வஞ்சித்துக் கவரப்படுகிறார்கள், கடத்தப்படுகிறார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாளாந்தம், கடற்கரையில் புதிய சிறுவர்கள்; இவர்களுக்கான கேள்வி என்றுமே உண்டு; வழங்கலுக்கு முடிவே இல்லை; வறுமை ஒழிக்கப்படவில்லை. வறுமை வளர்ந்துள்ளது. இலங்கையில், *60* சத வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கிறார்கள். போர் தங்கு தடையின்றித் தொடர்கின்றது. இன்று, போர், ஏறத்தாழ ஒரு வியாபாரமாகி விட்டது. இதில், ஒரு சிலர் தமக்கெனப் பணம் குவிக்கிறார்கள். நாட்டில், தனித் தமிழ் நாட்டிற்கான கோரிக்கை, தமிழீழப் புலிகளினால், இன்னமும் திடமாக முன்வைக்கப்படுகின்றது. பெரும்பான்மையினரான சிங்களவர்கள் இதை எதிர்க்கிறார்கள்.

போர், பாரதூரமான தாக்கத்தைப் பிள்ளைகள் மீது ஏற்படுத்துகின்றது. இவர்கள், தமது சொந்த நாட்டிலேயே அகதிகளாகியுள்ளனர். இவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்; கைவிடப்பட்டுள்ளனர்; சகலதும் மறுக்கப்பட்ட நிலையிலுள்ளனர்; தாய் தந்தையரையும் குடும்பத்தையும் இழந்து நிற்கின்றனர்; தமது இலாபத்திற்காக இவர்களை விபச்சாரிகளாகப் பயன்படுத்திப் பின்னர் கைவிடும் தன்மை வாய்ந்த, தம்மை நாடி வரும் கழுகுகளுக்கும் ஓநாய்களுக்கும் இரையாகின்றனர். எச்ஐவி/எயிட்ஸ் பயங்கரமாகத் தலைதூக்கியுள்ளது. எத்தனை பிள்ளைகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது எங்களுக்குத் தெரியாது. பிள்ளை விபச்சாரிகள், பயங்கரமான அபாயத்தை எதிர்நோக்குகின்றனர் என்பது மட்டுமே எங்களுக்குத் தெரியும்.

இல்லை. நாம் வெற்றி பெறவில்லை. இந்நவீன ரீதியான அடிமைத்தனத்தில் இன்னமும் *10,000* முதல் *15,000* பிள்ளைகள் வரை சிக்குண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ, *30,000* பிள்ளைகள், தமது சொந்தக் குடும்பப் பின்னணியில், தத்தமது வீடுகளிலும், பாடசாலைகளிலும், தேவாலய வட்டாரங்களிலும், கோவில்களிலும், சுற்றுச்சூழல்களிலும் துஷ்பிரயோகஞ் செய்யப்படுகிறார்கள். விவிலிய காலம் முதல், சமூகத் தீமைகளுள் ஒன்றாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதும் நமது நாட்டில் எழுதப்பட்ட வரலாறு *2500* ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த நாள் முதலாக நிலவி வருவதுமான பிள்ளைப் பாலியல் துஷ்பிரயோகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் நாம் வெற்றி காணவில்லை. ஆனால், *1970* களின் நடுப்பகுதியிலும்

1980 களின் ஆரம்பப் பகுதிகளிலுமே, அதாவது, கடந்த மூன்று தசாப்தங்களிலுமே இது, வர்த்தக ரீதியிலமைந்த வியாபாரமாக இடம்பெற்று, அதிகரித்துச் சென்றுள்ளது.

'பீஸ்' / ECPAT இன் பத்தாம் ஆண்டில், சில விடயங்கள் உண்மையில் எய்தப்பட்டுள்ளனவென்று நாம் கூறலாம். இந்த அடைவுகள் இந்த நூலில் பெருமிதத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும், அவற்றை, பின்வரும் பரப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் வெற்றிகள் என்ற வகையில் சுருக்கமாகக் குறிப்பிடலாம்:

1. விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.
2. சட்டச் சீர்திருத்தம்.
3. சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
4. கல்வி/ஆலோசனை வழங்கல்.
5. அபாயத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பிள்ளைகள்/இளைஞர்/குடும்பங்கள் தொடர்பாக வருவாய் பிறப்பித்தல்/தொழில் திறன்களில் பயிற்சி வழங்குதல்.
6. தேசியக்குழுக்களிலும் (1995 – 1999), தேசிய பிள்ளைப் பாதுகாப்பு அதிகார சபையிலும் (1999) 'பீஸ்' இயக்கம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருத்தல்.
7. சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிறுவனங்களான ஐக்கிய நாடுகளின் சிறுவருக்கான நிதியம் UNICEF, சர்வதேசத் தொழில் அமையம் - ILO, உலக சுகாதார அமையம், WHO, பிரதேசங்களிலுள்ள அரசாங்கச் சார்பற்ற அமையங்கள் என்பவற்றுடன் வலையமைப்புக்களை அமைத்தலும் துஷ்பிரயோகத்திலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கும் பிரச்சினைகள் தொடர்பான வலையமைப்புக்களை அமைத்தலும்.
8. தளராத செயற்பாடுகள் மூலமும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் பிள்ளைகளின் உரிமைகள் (CRC) பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தைக் செயற்படுத்துவதை முன்னெடுத்துச் செல்லுதல். இச்சமவாயாத்தின் ஆதரவுடனேயே, 'பீஸ்'இன் செயல் நிகழ்ச்சித் திட்டங்கள் வரையப்பட்டு, நடத்தப்பட்டமையும் கொழும்பிலுள்ள யுனிஸெ:.ப் உடன் வலுவான தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு பிணைப்புக்கள் நிறுவப்பட்டமையும்.
9. பிள்ளைகள், பாதிக்கப்பட்டவர்களாகவோ, அல்லது சாட்சிகளாகவோவுள்ள நீதிமன்ற வழக்குகளைச் சட்ட அடிப்படையில் கண்காணித்தல்.

10. ஆராய்ச்சி/ஆய்வு, தரவுகள் சேகரித்தல்.

11. இலங்கையில் பிள்ளைகள், வியாபார ரீதியாகப் பாலியற் துஷ்பிரயோகத்திற்காளாதல் பற்றிய விடயம் தொடர்பாகப் பல பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளமை. காலாண்டுச் செய்தி மடல் ஒன்றும் வெளியிடப்படுகின்றமை.

12. பிள்ளைகளைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்காளாக்குதல், பிள்ளைகளும் எச்ஐவி/எயிட்ஸும் என்பன பற்றிய கற்பித்தற் சாதனங்களாகத் தயாரிக்கப்பட்ட 'விடியோ' நாடாக்கள்.

13. பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்தல் என்ற பிரச்சினை பற்றிப் பொலீஸ் அதிகாரிகளுக்கும் நன்னடத்தைப் பாதுகாவலர்களுக்குமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்; பிள்ளைகளுக்கு ஏற்படும் உணர்வதிர்ச்சி தொடர்பான ஆலோசனை வழங்குவதில் ஈடுபட்டுள்ள அரசாங்கச் சார்பற்ற அமையங்களைச் சார்ந்த உறுப்பினருக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.

14. பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகத்திற்குட்பட்ட பிள்ளைகளுக்கும் புனர் வாழ்வு/மீட்சிச் செயற்திட்டங்களை உருவாக்குதலுக்குத் துணை புரிதலும் ஊக்குவித்தலும்.

'பீஸ்/ECPAT இன் பத்தாம் ஆண்டில், எல்லாவற்றிற்கும் மேலாக, பிள்ளைகளின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் சமவாயம் நிறைவேற்றப்பட்ட 10 ஆம் ஆண்டில், 1990 முதல் 'பீஸ்' இயக்கத்தின் தலைவியாக இருந்த என் மீது, தொடர்ந்து நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு விசுவாசத்துடனும் அர்பணிப்புடனும் கடமையாற்றிய மையக் குழுவினருக்கும், இரையான பிள்ளைகளின் நலன் கருதி, விலைமதிப்பற்ற பங்களிப்புச் செய்து பணி புரிந்த, 'பீஸ்' இயக்கத்தின் செயலாளர் திரு. ஷேர்லி ஜே. எஸ். பீரிஸிற்கு மிகப் பிரத்தியேகமாகவும் நான் என்று மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூல் தொடர்பாக அவருடைய பங்களிப்பிற்கும் நான் நன்றி கூற விரும்புகின்றேன். 1990 முதல், தளரா ஊக்கத்துடனும் எச்சிக்கையுடனும் பொருளாளராகப் பணியாற்றிய திரு. முகமது மஹ்ரூஃபிற்கு நான் நன்றி செலுத்துகின்றேன்.

மையக் குழுவின் முன்னை நாள் உறுப்பினர்களான செல்வி ஃபெய்த் அபேவர்த்னவும் ('பீஸ்' இயக்கத்தின் தாபக அங்கத்தவர்களுள் ஒருவர்), திரு. கலைல் டயஸூம் செயலூக்கத்துடன் பணியாற்றிக்கொண்டிருந்த போது, இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். நாம், இன்றும் இவர்கள் இழப்பை நினைத்துக் கவலைப்படுகின்றோம்.

தொடர்பு அலுவலரும் 'பீஸ்' இயக்கத்தின் மையக் குழு உறுப்பினருமான திரு. சுனில் கமகே, மிக உன்னத சேவையாற்றியுள்ளார். இவரைக் குறிப்பிடாதிருக்க முடியாது. 'பீஸ்' இயக்கத்தின் நோக்கத்திற்காக உளமாரப் பணி புரிபவர் இவர்.

மையக் குழுவின் உறுப்பினரும் 'பீஸ்' இயக்கம் கணிசமான அளவில் வெவ்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தி வரும் கண்டி மாவட்டத்தின் இணைப்பாளருமான திருமதி மனோ குரு பெருமாளுக்கு எனது நன்றிகள்.

நமது தொண்டர்கள், திரட்டுநர்கள், ஊக்குநர்கள், குறிப்பாக, 'பீஸ்' இயக்கத்தின் ஆளணியினர், இவ்வாளணியினருள் சிறப்பாக, பிள்ளைகளுக்கு நம்பிக்கை என்ற நிறுவகத்தின் பணிப்பாளரும் 'பீஸ்', BICE செயற் திட்டத்தின் பிரதான திரட்டுநருமான திரு. டெரில் குறே, எச்ஐவி/எயிட்ஸ்/எஸ்டிடி ஆலோசகரும் நமது வலுவான ஆதரவாளர்களுள் ஒருவருமான எச். ஜி. பர்னான்டோ ஆகிய வரி அலுவலர்கள் என்போரின் அயராத சேவையைக் குறிப்பிடாதிருக்க முடியாது. 'பீஸ்' இயக்கத்தின் நோக்கத்திற்கு அவர்கள் தொடர்ந்து வழங்கும் உதவியைக் அளவிட முடியாது.

நன்மையான காலங்களிலும் கஷ்ட காலங்களிலும் நம்முடன் நின்று கடமையாற்றி, 'பீஸ்' இயக்கத்தின் பிள்ளைகளுக்கான பணி பலம் பெற்று வளர்வதற்கு உறுதுணையாக இருந்த இளமையும் ஆர்வமும் மிக்க தொண்டர்களுக்கும் அவ்வளவிற்கு இளமை அற்றவர்களான தொண்டர்களுக்கும் இப்பத்தாவது ஆண்டில் நான் நன்றி செலுத்துகின்றேன்.

இத்தொடர்பில் மிகச் சிறப்பாக, திரு. மல்சிறி பீரிஸ், திரு. இமனுவல் றொட்றிகோ திருமதி சார்லட் பயகல, செல்வி ஜக்கி பெரேரா, செல்வி லக்மாலி உடுகம்பொல, செல்வி ஷீனா ஆரியபால, செல்வி நீலு கனகரத்ன, திரு. கெவின் பல்தசார் என்போரைக் குறிப்பிட வேண்டும்.

"இக்காலங்கள் மனிதர்களுக்குச் சோதனைக் காலங்களாகும்..... ஆனால் இவற்றைத் தாங்கி நிற்பவர்கள், ஆணினதும் பெண்ணினதும் அன்பையும் நன்றியையும் பெறும் யோக்கியதை உடையவர்களாகவர்." *(தொமஸ் பெயின்)*

ஆம். நாம் பிள்ளை விபச்சாரத்தை முடிவுக்குக் கொண்டு வரவில்லையெனினும், நமது ரம்மியமான நாட்டில், வெறுக்கத்தக்க குற்றங்களையும் வேகம் சற்றும் குறையாது இடம்பெற்றுவரும் தீமைகளையும், நம் பணியினூடாக நாம் எல்லோரும், இலங்கை மக்களின் கவனத்திற்குக் கொண்டவந்துள்ளோம். நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆயிரக் கணக்கானோரைத் தூண்டியுள்ளோம். எனவே, நாம்

நமது இலக்கை எய்துவதிலும் நமது நோக்கத்தின் சாரத்தைப் பரவலாகப் பரப்புவதிலும் முற்று முழுதாகத் தோல்வி காணவில்லை

நாம் கஷ்டங்களையும் தீய சக்திகளையும் எதிர்நோக்கினாலும், 'பீஸ்' இயக்கம் சகஸ்ரத்தாண்டில் பிள்ளைகளின் அன்பு நலன் கருதிக் குறிப்பாக, வர்த்தக ரீதியாகப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாகும் '*தீவிரமான கஷ்டச் சூழ்நிலைக்குள்ளான பிள்ளைகள்*' மேல் கொண்ட அன்பினால், அடுத்த சகஸ்ரத்தாண்டினுள் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் பிரவேசிக்கின்றது.

***மொறீன் செனெவிரத்ன***
***தலைவர் 'பீஸ்'***

அத்தியாயம் ஒன்று

# ஆசிய சுற்றுலாப் பயணத் துறையில் பிள்ளை விபச்சாரத்திற்கு முடிவு கட்டும் (ECPAT) சர்வதேச இயக்கத்துடனான இணைப்பு

"பிள்ளை விபச்சாரம், இழிபொருள் இலக்கியம், திரைப்படம் போன்றவற்றிற்குப் பிள்ளைகளைப் பயன்படுத்துதல், பாலியல் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காகப் பிள்ளைகளைக் கடத்துதல் என்பவற்றை ஒழிக்கும் பொருட்டு, ஒருங்கிணைந்து பணியாற்றும் அமையங்களையும் தனிப்பட்டவர்களையும் கொண்ட உலகளாவிய வலையமைப்பே ECPAT. உலகெங்கும் வாழும் பிள்ளைகள், வர்த்தக ரீதியிலமைந்த சகல விதமான பாலியல் துஷ்பிரயோகத்திற்குமுட்படாது, சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் தமது அடிப்படை உரிமைகளை அனுபவிக்கிறார்கள் என்பதையும் உறுதி செய்வதற்கு, உலக சமுதாயத்தை ஊக்குவிக்க முனைகின்றது." (ECPAT நோக்கக் கூற்று.)

*1990* இல், பிள்ளை விபச்சாரத்தை ஒழிப்பதற்காக சர்வதேச இயக்கம் தனது பணியை ஆரம்பித்த போது, அது, சுற்றுலாத்துறையும் பிள்ளை விபச்சாரமும் என்ற விடயம் பற்றிய ஆய்வாராய்ச்சியில் ஈடுபட்டது. அதுவே அத்தருணத்தின் பிரதான கவன மையமாகவும் தேவையாகவும் இருந்தது.

ஆசியாக் கண்டத்தில் வாழும் பிள்ளைகள், பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதனால் அளவிட முடியாத பாதிப்பிற்குள்ளாகி அல்லலுறுகின்றமை, சுற்றுலாப் பயணிகளை இங்கு அனுப்பும் நாடுகள் தமது பிரசைகள், விளைவுகளிலிருந்து விடுபடலாம் என்ற உறுதியுடன், பிள்ளைகளுக்கெதிராக மேற்கொள்ளும் குற்றச் செயல்களைப் பற்றிப் போதிய அளவு அறியாதிருக்கின்றமை என்ற விடயங்களை மையமாகக் கொண்டதே இவ்வாய்வாராய்ச்சி.

**நவீன அடிமைத்துவத்திற் சிக்குண்டுள்ளமை** என்ற ஆய்வாராய்ச்சியின் விளைவுகளின் அடிப்படையில் ECPAT செயற்படுவதற்காகத் தேர்ந்தெடுத்த நான்கு நாடுகளிலும் இடம்பெற்று வந்த, பிள்ளைகள் மீதான பாலியற் துஷ்பிரயோகத்தை நிறுத்துவதற்கு, அத்தருணத்தில் அரசாங்கமும் தனியார் துறையும் (முற்றுமுழுதான பயணத்துறை) இம்மியளவேனும் முன்வரவில்லை.

∴பிலிபீன்ஸிலும் தாய்லாந்திலும் தாய்வானிலும், பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ்

செய்யப்படும் பிள்ளைகளின் சார்பில், அரசாங்கச் சார்பற்ற பல அமையங்கள் ஏதோவொரு விதத்தில், ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருந்தன. ஆனால், இலங்கையில் நிலைமை மந்தமாகவே இருந்தது. 1990 ஆம் ஆண்டளவில் குறிப்பிடத்தக்க அளவில் நிலவிய இப்பிரச்சினையைக் கையாள்வதற்கு அரசாங்கச் சார்பற்ற நிறுவனம் ஒன்றேனும் நிறுவப்பட்டிருக்கவில்லை. சமூகவியலாளர்கள், பொலீஸ் அலுவலர்கள், உள வைத்தியர்கள் முதலியோரின் அறிக்கைகள் இருந்த போதிலும், உயர் மட்டத்தில், இவற்றையெல்லாம் அலட்சியப்படுத்தும் ஒரு நிலையே காணப்பட்டது. இதன் விளைவாக, 'பீஸ்' இயக்கத்தின் முன்னோடி வேலைகள் மிகக் கடினமாகவும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடியனவாகவும் இருந்தன.

எனவே, ECPAT சர்வதேச இயக்கம் இருந்தமையும், 'பீஸ்' இயக்கம் அதன் தேசியக் குழுவாக இயங்கியமையும் 'பீஸ்' இயக்கத்திற்கு ஒரு வலிமையை அளித்தது. ECPAT, 1990 முதல் 1993 வரை, சர்வதேச இயக்கத்தின் முதற் கட்டத்தில் 'பீஸ்' இயக்கத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கியதுடன் நில்லாது, இயக்கத்தின் இரண்டாம் கட்டம் 1996 இல் முடிவடையும் வரை, மேலும் ஆதரவு வழங்கியது.

பிள்ளைகளுடனான பாலியல் உறவிற்காகப் பெருந்தொகையில் வெளி நாட்டவர்கள் ஆசியாவுக்கு வருகின்றமை பற்றியும் அவர்களின் இத்தகைய நடத்தைக்கு, அவர்களுடைய சொந்த நாடுகளில் அவர்கள் பொறுப்புக் கூற வேண்டிய நிலைமை காணப்படாமை பற்றியும் தாய்லாந்தில், பாங்கொக்கிலுள்ள ECPAT இன் சர்வதேசத் தலைமை அலுவலகத்திற்கு ஆரம்பக் கட்டத்திலேயே அறிவிக்கப்பட்டது. பாலியற் துஷ்பிரயோகிகளின் குற்றங்களை அவரவர் நாடுகளிலேயே விசாரிப்பதற்கு வழி செய்யும் 'ஆள்புலப்புறத்துரிமை' பற்றிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று ECPAT அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டது. இதன் பயனாக ஐரோப்பாவில் 15 இற்கு மேற்பட்ட நாடுகளும் அவுஸ்திரேலியா, நியுஸீலாந்து போன்ற நாடுகளும் ஆள்புலப்புறத்துச் சட்டங்களை உள்ளடக்கும் வகையில் தமது சட்டங்களைத் தற்பொழுது மாற்றியுள்ளன.

பிள்ளைகளுக்கெதிரான குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கச் செய்வதில், 'பீஸ்' இயக்கத்தின் போராட்டத்திற்கு இச்சட்டங்களின் உதவி மதிப்பிட முடியாதது.

இலங்கையின் 'பீஸ்' இயக்கத்துடன் ஒத்துழைத்த சர்வதேச வலையமைப்பு, தரவுகளைச் சேகரித்து, ஐரோப்பாவிலுள்ள ECPAT அலுவலர்களிடம் சமர்ப்பித்தது. இவ்வலுவலர்கள், தமது சட்ட அலுவலர்களுடன் சேர்ந்து, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுத் தத்தமது நாடுகளில் விசாரிக்கப்படுவதை அல்லது, நாடு கடத்தப்பட்ட பின்னர் விசாரிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட்டனர். பிள்ளைகளின் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்ட இலக்குகளை அடைவதற்குச் சில சமயங்களில், அச்சுறுத்தல் நிலவிய சூழ்நிலையில் பணியாற்றிய 'பீஸ்' இயக்கத்தின் அங்கத்தவர்களுக்கு, ஓரளவு பாதுகாப்பை, ECPAT பங்குடைமை, உறுதிப்படுத்தியது.

பிள்ளைகளை வர்த்தக ரீதியாகக் கட்டற்ற பாலியற் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவதை எதிர்த்து, 1996 இல் ஸ்டொக்ஹோமில் இடம்பெற்ற முதலாம் உலக காங்கிரஸ்ஸிற்கு, 122 அரசாங்கங்கள் தத்தமது பேராளர்களை அனுப்பி, பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்வதை ஒழிப்பதற்கு உதவும் முறையில் செயல் நிகழ்ச்சி நிரல் ஒன்றை அங்கீகரித்தமையில் இப்பங்குடைமையின் உச்ச கட்டத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

கலாச்சார, சமய அமைச்சர், கௌரவ லக்ஷ்மண் ஜயக்கொடியின் தலைமையில் அமைந்த, உத்தியோகபூர்வமான இலங்கைப் பேராளர் குழுவில், ஏனையோருள் பொலீஸ் மா அதிபர் (குற்றப் பிரிவு), நன்னடத்தைப் பாதுகாவல் பிள்ளை கவனிப்பு ஆணையாளர் என்போரும் நாட்டிலுள்ள அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியஸ்தர்களும் இடம்பெற்றனர். 'பீஸ்' இயக்கம், முக்கியத்துவம் வாய்ந்த, தெற்றெனத் தெரியும் பங்களிப்பைச் செய்தது.

1990 இல் ஆரம்பிக்கப்பட்டு, இலங்கையில் வளர்ச்சியடைந்து வந்துள்ள 'பீஸ்' இயக்கத்தின் மையக் குழு, தனது வளங்களுள் 75 சதவீதத்தைச் செயல் நிகழ்ச்சித் திட்டங்களிற் கருத்தூன்றுவதற்காகச் செலவிடுவதெனச் செய்த முடிவு நியாயமானதே என்பது தெளிவாகியது. அலுவலக வளவு, அலுவலகச் சாதனங்கள், நிர்வாகம் என்பவற்றிகாக மிகக் குறைந்தளவு தொகையே செலவிடப்பட்டது.

'பீஸ்' இயக்கம், ஆரம்பத்திலிருந்தே தனது பிரதான நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு நடத்துவதற்குப் பகுதி நேர ஊழியர்களையே நியமித்தது. அவர்கள், 'தாய்' நிறுவனமாகிய ECPAT இனால் விதிக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றினர். 'பீஸ்' இயக்கத்தில் செயலூக்கத்துடன் பணியாற்றும் ஒவ்வொருவரும் பிரதான தகைமை ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படும் பிள்ளைகள் மீது உண்மையான கரிசனை கொண்டிருத்தல் வேண்டும் என்பதே இத்தகைமையாகும். துஷ்பிரயோகஞ் செய்வதற்கான பிள்ளைகள் தொடர்பாக உள்ள தேவை அல்லது கேள்வி பூர்த்தி செய்யப்படலாகாது என்ற திட நம்பிக்கையும் இவர்களிடத்தில் இருத்தல் வேண்டும். அபாயத்திற்குள்ளாகியிருக்கும் பிள்ளைகளிடம் பரிவும் கருணையும் காட்டுபவர்களாக அவர்கள் இருப்பதுடன், 'பீஸ்' பின்பற்றும் முறையுடன் பொருந்தி இயங்கும் வல்லமையும் இருத்தல் வேண்டும். இலங்கையில் வர்த்தக ரீதியாகப் பிள்ளைகள் துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு/ஒழிப்பதற்கு 'பீஸ்' இயக்கம் வழிவகைகளைக் கண்டு, நடைமுறைப்படுத்தியது. இதுவே ECPAT இனதும் அதன் குழுக்கள் யாவற்றினதும் அடிப்படை நோக்கமாகும்.

இன்று, ECPAT ஒவ்வொரு கண்டத்திலுமுள்ள நாடுகளில் தேசியக் குழுக்களைக் கொண்டுள்ளது. ECPAT இன் உலகளாவிய குடும்பத்தில், 'பீஸ்' ஒரு தசாப்த காலமாகத் தேசியப் பங்காளியாக இருப்பதையிட்டுப் பெருமைப்படுகின்றது.

அத்தியாயம் இரண்டு

# ஐக்கிய நாடுகள் அமையத்தின் முகவரகங்கள், அரசாங்க முகவரகங்கள் என்பவற்றுடனும் நன்கொடை வழங்குவோருடனுமான இடைச்செயற்பாடு

இலங்கை, மாலை தீவு என்வற்றிற்கான 'யுனிஸெ∴ப்' வதிவுப் பிரதிநிதியாக அத்தருணத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த திருமதி பிரிட்டா ஒஸ்ட்பேர்க்கை, பத்திரிகையாளர் கூட்டமொன்றில், 1991 இல் முதன்முதலில் சந்தித்தேன். பிள்ளையின் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளதற்கு இணங்க, இரையாகியுள்ள பிள்ளைகளின் சார்பில் பணி புரியும் இவரிடத்தில் 'உறவு உணர்வு' பொதிந்திருப்பதை உடனடியாகக் கண்டுகொண்டேன். இப்பணியைச் செயற்படுத்துவது 'புனிசெ∴ப்' இன் பொறுப்பாகி விட்டது.

இதற்கேறத்தாழ ஒரு மாதத்திற்குப் பின்னர், முகமது மஹ்ரு∴பும் நானும், செயலாற்றல் மிக்கவரும் இரக்க சுபாவமுள்ளவரும் கஷ்டமான சூழ்நிலைகளிலுள்ள பிள்ளைகளுக்கான பணியில் ஆழமாக ஈடுபட்டுள்ளவருமான, 'யுனிஸெ∴ப்' நிகழ்ச்சித்திட்ட அலுவலர், விஜயமானவைச் சந்தித்தோம்.

யுனிஸெ∴ப் வழங்கிய ஆதரவும் உதவியுமின்றி, நம் இயக்கத்தின் கஷ்டமான அவ்வாரம்பக் காலகட்டத்தில், நாம் நமது பணித்திட்டத்தில் ஈடுபடுதல் மேலும் கடினமானதாகவும் இடர் மிக்கதாகவும் இந்திருக்கும் என்பதை நான் இங்கு குறிப்பிடுவது மிகவும் முக்கியமாகும்.

வடக்கு, கிழக்கு மோதலினால் தகர்ந்து போயிருந்த சுற்றுலாப் பயணத் துறையை மீண்டும் உயிர்ப்பிப்பதற்குப் பெரு முயற்சியிலீடுபட்டிருந்த நிலையில் ஈழம் இரண்டாம் போர் ஆரம்பித்ததன் பின்னர், குற்றத்தைச் சுமத்துவதற்கு ஏனைய பரப்புக்களில் 'பலி ஆடுக'ளைத் தேடிக்கொண்டிருந்த நிலையில், சுற்றுலாப் பயணத்துறை மேலும் அபாயத்திற்குள்ளாவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்பட்ட நிலையில், அரசாங்கம், 'பீஸ்' இயக்கத்தைத் தயக்கத்துடனேனும் ஏற்றுக்கொண்டமைக்கு 'யுனிஸெ∴ப்' வழங்கிய ஆதரவே காரணம். வர்த்தக ரீதியான துஷ்பிரயோகம்

தெட்டத் தெளிவாக இருந்த அந்த நாட்களில், இத்துஷ்பிரயோகம் கடற்கரைகளில் மட்டுமே நிகழ்ந்தன என்று கூறு முடியாத அந்த நாட்களில், பயணத்துறையில் ஈடுபட்டிருந்த சிலர், 'பீஸ்' இயக்கத்தில் இருந்தோரைத் 'துரோகிகள்' என்றும் 'கற்பனைக் கதைகட்டுவோர்' என்றும் வெளிப்படையாகவே அழைத்தனர்!

ஹிராந்தி விஜயமான்னவையும் அவருடன் பணி புரியும் ஜயந்தி லியனகேயையும் (தற்பொழுது இவர்கள் இருவரும் 'பீஸ்' இயக்கத்தின் உற்ற சிநேகிதிகள்) நாம் சந்தித்த பின்னர், அவர்கள் நமக்குத் தரக்கூடிய ஆதரவை உறுதிப்படுத்தினர். இவ்விடயம் பற்றிய 'கற்பித்தல் சாதன'மாக அமையக்கூடிய காலாண்டுச் செய்தி மடல் ஒன்றைப் பிரசுரிப்பது பற்றிய நமது ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, அதற்கு நிதி உதவி வழங்குவதற்கு இவர்கள் இணங்கினர். 'பீஸ்' இயக்கத்தின் ஆராய்ச்சி மாணாக்கர்களினால், ஏற்கெனவே இனங்காணப்பட்ட அபாயப் பிரதேசங்களில் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் வரையப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய செயற்றிட்டங்களுக்கு, எதிர் காலத்தில் நிதி உதவி வழங்குவது பற்றியும் கவனத்திற்கெடுத்துக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இருந்தனர். 'பீஸ்' நடத்தும் கருத்தரங்குகளில் வள அணியாகக் கடமையாற்றும் பணியை 'யுனிஸெஃப்' ஏற்றுக்கொண்டது. இவ்வியக்கத்தின் தேவையைப் பற்றி எடுத்துக் கூறுவதில் நாம் பெரு வெற்றி ஈட்டி விட்டோம் என்று எங்களுக்குத் தோன்றியது.

*1991* ஆம் ஆண்டு இடம்பெற்ற 'யுனிஸெஃப்' நிறுவனத்தின் ஆண்டுப் பிரசுமாகிய, 'உலகப் பிள்ளைகளின் நிலை' (The State of the World's Children) என்ற நூல் வெளியீட்டின் போது, கவலைக்கிடமான ஒரு பிரதேசத்தில், முன்னோடித் திட்டமொன்றை ஆரம்பிப்பதுடன், 'பீஸ்', தனது புத்துருவாகும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் கிரமமாக முன்னெடுத்துச் செல்லலாமென்று, கலாநிதி விஜேரத்ன என்னிடம் கூறினார்.

'தாய்மாருக்கும்/குடும்பங்களுக்கும் அறிவு புகட்டுதல்' பற்றி அவர் பேசினார். பிள்ளைகள் மிக்க ஆபத்திற்குள்ளாகியிருக்கும் ஒன்பது இடங்களில் நடத்தப்பட்ட 'ஆலோசனை வழங்கும் கல்வி நிகழச்சித் திட்ட'த்தின் ஆரம்பம் இதுவே. இன்று, இது, மிகப் பிரபலியமாகியுள்ளதுடன், மிக வெற்றிகரமாகவும் நடத்தப்படுகின்றது.

இவ்வுலக வாழ்வை நீத்த, நமது அன்பிற்குரிய சக ஊழியர் செல்வி ஃபெய்த் அபேவர்தன, ஒரு வருடத்திற்கான முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தைத் திட்டமிட்டு, வடிவமைத்து, மொரட்டுமுள்ளையில் நடத்தினார். மூன்று மாதத் தீவிர ஆராய்ச்சியின்

பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தை நான் என்றும் மறக்க மாட்டேன். முப்பது தாய்மார், மிக்க கவனத்துடன் தெரிவு செய்யப்பட்டனர். அச்சனிக்கிழமையன்று, காலை பத்து மணிக்கு, முறையான திறப்பு விழாவை நடத்துவதென நாம் முடிவு செய்தோம். மையக் குழு அங்கத்தவர்கள் அனைவரும் வருகை தந்தனர். விழாவை அங்குரார்ப்பணம் செய்வதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் மழை கொட்டத் தொடங்கியது. விரைவில், அது, கடும் மழையாக மாறியது. என் மனம் உடைந்தது. இத்தகைய ஒரு மழையையும் மீறி எப்பெண் வருவாள்?

பின்னர், சடுதியாக, மழை நீர் சொட்டச் சொட்ட அவர்கள் வரத் தொடங்கினார்கள். முப்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் வந்தார்கள். ஏனையோர், என்ன நடக்கப்போகின்றது என்பதைப் பார்க்க விரும்பினார்கள். இவர்களுட் சிலர், ஏற்கெனவே மதுபானம் அருந்தியிருந்தனர் என்பதை நாங்கள் அவதானித்தோம். ஓரிருவர் தாம் வசப்பட்டிருந்த, 'தூ'ளைக் கூட (ஹெரொயின்) உட்கொண்டிருக்கக்கூடும். மிகச் சிலரே செருப்பு அணிந்திருந்தார்கள். ஆடைகளிலிருந்து சொட்டிக்கொண்டிருந்த மழைத்தண்ணீரை விட்டால், அவர்கள் குளித்து விட்டு வந்தவர்களைப் போலத் தென்படவில்லை. "ஒரு 'கஸிப்பு' பானத்தை (சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட மதுபானம்) வாங்கும் விலைக்கும் 'தூள்' (ஹெரொயின் – கபில நிறச் சீனி) வாங்குவதற்குச் செலுத்திய விலைக்கு மிகக் குறைந்த விலைக்கும் ஒரு கட்டிச் சவர்க்காரம் வாங்கலாம். அடுத்த சனிக்கிழமை இங்கு வரும் போது, குளித்து, சுத்தமான ஆடை அணிந்து வர வேண்டும்" என்று நாம் சற்றுக் கடுமையாக அவர்களிடம் கூறினோம். அவர்கள், அவ்வாறே நடந்தார்கள் என்று கூறிக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். போதை வஸ்துக்களை அருந்துவதிலிருந்தும் மது பானங்களை அருந்துவதிலிருந்தும், காலக்கிரமத்தில், அவர்களை ஓரளவு மீட்க முடிந்தது.

இச்சமுதாயத்தினரை, மீள் குடியமர்த்தவும் நம்மால் முடிந்தது. அன்று காலை, அவர்களின் இருப்பிடப் பகுதியின் – ஒரு சேரிச்சந்து – வாயிலில், என் தலை சுற்ற, வாந்தி உணர்வு தொண்டையை அடைக்க, நான் நின்று கொண்டிருந்தது என்க்கு ஞாபகம் இருக்கின்றது. வன் அட்டைகள், வைக்கோல், பழைய தகரத்தகடுகளாலான வரிசையாக அமைந்த குடில்களைக் கொண்ட சேரிகள் காணப்படும் ஒடுக்கமான தெருவில், மழை நீர் நிரம்பிய குட்டைகளில் மலம், நாய் மலம், பூனை மலம், குப்பை கூளங்கள் மிதந்து கொண்டிருந்தன. தமது ஆண் பிள்ளைகள் விபச்சாரத்தில் ஈடுபட அல்லது தமது பெண் பிள்ளைகள்,

உள்ளூர்த் துஷ்பிரயோகிகளினால் கற்பழிக்கப்பட, இவர்கள் (இயல்பாகவே) இவற்றைக் கண்டும் காணாதது போல் இருக்கிறார்கள். வெளி நாட்டவர்களைப் பணப்பெட்டிகளாகக் காணும் இவர்கள், தமது பிள்ளைகள் இவர்களின் மிருகத்தனமான இச்சைக்கு இரையாவது பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. இவர்கள் நம்ப முடியாத அளவுக்கு அழுக்கில் வாழ்கிறார்கள். 'பீஸ்' இவர்களுக்குப் பல வகையான உணவுகளையோ உடைகளையோ வழங்கவில்லை. இவர்கள், ஒரு கிழமைக்கு 30 ரூபாவைக் 'கொடை'யாகப் பெற்றார்கள். இந்தக் 'கொடை' பணமாகவன்றி, எப்பொழுதும், அவர்களுடைய உள விருத்திக்கான 'உண'வாகவே வழங்கப்பட்டது. நாம் ஆச்சரியப்படும்படி இது பலித்தது. மூன்று மாதங்களுக்குள், இவர்கள், மேலும் நல்ல சூழலில் மீள் குடியேற்றப்பட்டனர். இவர்கள் வாழ்ந்த சந்து, தரை மட்டமாக்கப்பட்டு, தெருவை அகட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. *1992* ஆம் ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய அப்பெண்கள், இன்று, கடற்கரையைக் கண்காணிக்கும் தலைவர்களாக இருப்பதுடன் 'பீஸ்' இயக்கத்தின் மிகத் தீவிரமான ஆதரவாளர்களாகவும் இருக்கின்றார்கள். 'யுனிஸெஃப்' இந்நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்காணித்தது. கல்வி, ஆலோசனை வழங்குதல், மனப்பான்மைகளை மாற்றுதல் என்ற அம்சங்களில் நாம் மேற்கொண்டவற்றைக் கண்டு திருப்தியடைந்தது.

*1992* இல், நான், பணி தொடர்பான விஜயம் ஒன்றை ஜெனீவாவிற்கு மேற்கொண்ட போது, அங்கிருந்த எனது நண்பர்கள், சர்வதேசத் தொழில் அமையத்திற்கு நான் செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்து, அதன் பணிப்பாளர்கள் சிலருடன் பேசும் வாய்ப்பை ஏற்படுத்தினார்கள். அவ்வாண்டில் தான், 'பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பிள்ளைகள்', 'ஆபத்தான தொழில் வகை' களில் ஈடுபட்ட பிள்ளைகளென இனங்காணப்பட்டு சர்வதேசத் தொழில் அமையத்தினால் அவ்வகுதிக்குள் இடம் பெறச் செய்யப்பட்டனர்.

'பீஸ்' இயக்கத்தின்.பணிகளில் அதிக ஆர்வம் காட்டிய பதவியாளர்களைச் சந்தித்து மிகப் பயனுள்ள, நேர்நிலையான சில கூட்டங்களில் நான் பங்குபற்றியமையை நினைவு கூருகிறேன். நான், நாடு திரும்பியதும் குறிப்பாக ஆசிய சுற்றுலாப் பயணத் துறையில் சிறுவர் விபச்சாரத்திற்கு முடிவுகட்டும் (ECPAT) இயக்கத்தினூடாகத் தொடர்புகள் பேணப்பட்டன. சர்வதேசத் தொழில் அமையம், ECPAT இயக்கத்திற்கு ஆலோசனை கூறும் நிறுவனமாகியது.

ECPAT/பங்கொக், ஏனைய முகவரகங்கள் என்பன, சர்வதேசத் தொழில் அமையத்தின் பிராந்திய அலுவலர்களுடன் நடத்திய சந்திப்பில் ஷேர்லியும் பங்குபற்றினார்.

1998 இல் சர்வதேசத் தொழில் அமையத்தினால் ஆரம்பிக்கப்பட்டு இன்று பிரபலமாகியுள்ள 'உலக பவனி' என்ற நிகழ்வின் 'ஒருங்கிணைப்பாள'ராக 'பீஸ்' நியமிக்கப்பட்டுள்ளது.

இத்தருணத்தில், கொழும்பிலுள்ள சர்வதேசத் தொழில் அமைய அலுவலகத்துடனும் நேபாளத்தில் கட்மண்டுவிலுள்ள சர்வதேசத் தொழில் அமையத்தின் பிராந்திய அலுவலகத்துடனும் தொழில் அமைச்சுடனும் 'பீஸ்' இயக்கம் நெருக்கமான தொடர்புகளை நிறுவிக்கொண்டது. கௌரவ தொழில் அமைச்சரைத் தலைவராகக் கொண்ட, 'இலங்கையில், பிள்ளைகளைத் தொழிலில் அமர்த்தலை ஒழித்தல்' தொடர்பான தேசிய குழுவில் அங்கத்துவம் வகிக்கும்படி 'பீஸ்' இயக்கம் அழைக்கப்பட்டது. தொடர்ந்தும் 'பீஸ்' இயக்கம் இக்குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றது. 'பீஸ்' இயக்கத்தின் செயலாளர் 'பீஸ்' இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

நாட்டின் தூர, உட்பிரதேசங்கள் சிலவற்றில், பிள்ளைகளைத் தொழிலில் அமர்த்துதல், வியாபார ரீதியான பாலியல் துஷ்பிரயோகத்தில் பிள்ளைகளை ஈடுபடுத்துதல் என்ற பிரச்சினைகள் பற்றிய பிரக்ஞையை அதிகரிப்பதற்குப் 'பீஸ்' மேற்கொண்டுள்ள பணியை மேம்படுத்தும் பொருட்டு. சர்வதேசத் தொழில் அமையம் வழங்கும் ஒரு நன்கொடையையும் 'பீஸ்' பெறுகின்றது.

அமையத்துடன் சிறந்த தொடர்புகளை 1995 ஆம் ஆண்டு முதல், 'பீஸ்' இயக்கம், தேசிய சுற்றுலாப் பயண அமையத்துடன் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. சுற்றுலாப் பயணத்துறையின் 'இருண்ட பக்க'த்தைக் கண்காணிப்பதற்கான குழுவின், ஏனைய அங்கத்தவர்களின் சம்மதத்தின், மேல், 'பீஸ்' இயக்கம், குழுவின் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேசத் தங்ககச் சங்கம் (IHA), பயண முகவர்களின் சர்வதேச சம்மேளனம் (UFTAA) என்ற இவ்விரு சர்வதேச அமையங்களில் அங்கத்துவம் வகிக்கும் தங்ககத்துறை, பயண வர்த்தகத்துறை என்பவற்றுடனும் உலக சுற்றுலாப் பயண அமையத்துடனும் (WTO), 'பீஸ்' இயக்கம் தொடர்புகளை நிறுவியுள்ளது. பிள்ளை விபச்சாரம், பிள்ளைகளைப் பயன்படுத்தும் இழிபொருள் இலக்கியம், ஓவியம், திரைப்படம், பிள்ளைகளைக் கடத்துதல் என்பன நுண்ணாய்வு செய்யப்பட வேண்டிய காரணிகள் என்பதையும் இவற்றை ஒழித்துக் கட்டுவதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதையும் இவை சமூகத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய தீமைகள் என்பதையும் மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தீமைகளுக்கான வேர்கள் சுற்றுலாப் பயணத்துறையிலேயே காணப்படுகின்றன என்பதையும் மேலே

குறிப்பிடப்பட்ட அமையங்கள் தெளிவாக ஏற்றுக்கொண்டுள்ளன. சுற்றுலாப் பயணச் சபையின் சமுதாய, வர்த்தகத் தொடர்புப் பிரிவுடன் 'பீஸ்' இயக்கம் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளது. அத்துடன், உல்லாசப் பயண வழிகாட்டிகள், பல்வேறு உல்லாசப் பயணப் பிரதேசங்களிலுமுள்ள தங்கக ஊழியர்கள் என்போருக்குக் கடந்த ஐந்து வருடங்களாக 'பீஸ்' இயக்கம் பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

'பீஸ்' இயக்கத்தின் மிக ஆரம்பக் கட்டங்களிலிருந்தோ, சமூக நலன், கல்வி, சுகாதாரம், நீதி என்ற அமைச்சுக்களின் அமைச்சர்களோடு தொடர்பாடல்கள் நிறுவப்பட்டன. 'பீஸ்'/ஆசிய உல்லாசப் பயணத் துறையில் சிறுவர் விபச்சாரத்திற்கு முடிவுகட்டும் அமையம் என்பவற்றின் பணி பற்றியும் கடினமான சூழ்நிலைகளில் பிள்ளைகளின் நலனைப் பேணுவதற்கு இவை தம்மை அர்ப்பணித்துள்ளமை பற்றியும் அறியத் தருவதற்காக 'பீஸ்' மையக் குழு உறுப்பினர்கள் அவ்வவ்வமைச்சர்களையும் அலுவலர்களையும் சந்தித்துள்ளனர். 'பீஸ்' இயக்கம், நன்னடத்தைப் பாதுகாவல், பிள்ளை கவனிப்புத் திணைக்களம், கல்வித் திணைக்களம், பொலீஸ் திணைக்களம் என்பவற்றுடன் நெருக்கமாகச் செயலாற்றியுள்ளது.

காலங்கடந்த தண்டனைச் சட்டக் கோவையிலுள்ள பிள்ளைகள் பாதுகாப்புச் சட்டங்களை மீள் நோக்குவதற்காக, சமூக நல அமைச்சின் அழைப்பின் பேரில், 1992 இல் 'பீஸ்' இயக்கத் தலைவர், அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட தொழினுட்பக் குழுவில் உறுப்பினராகப் பணிபுரியும்படி சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவ்வமைச்சின் செயலாளரான கலாநிதி ராஜா அமரசூரியவின் சிறந்த தலைமையின் கீழ், 1992 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை, இக்குழு, தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்தியமைப்பதில் மிகச் சிறந்த பணியாற்றியது. பிள்ளையின் உரிமைகள் மீதான சமவாயத்தில், 1991 இல் இலங்கை கைச்சாத்திட்டு அதனை ஏற்றுக்கொண்டதன் பயனாக இத்தொழினுட்பக் குழு நிறுவப்பட்டது.

'பீஸ்' இயக்கத்திற்கு, இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நன்கு அறிந்த நான், அவ்விரண்டு ஆண்டுகளில் குழுக் கூட்டம் ஒன்றையேனும் தவற விட்டதில்லை. எவ்விதக் காரணமுமின்றி, இக்குழுவின் பரிந்துரைகளுக்கு, ஒரு வருட காலமாக முட்டுக்கட்டைகளிடப்பட்ட போதிலும், இலங்கையின் இன்றைய ஜனாதிபதி, அத்தருணத்தில் மேல் மாகாண முதல் அமைச்சராக இருந்த போது, தான் அதிகாரத்திற்கு வந்தால், இச்சட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி, அவற்றிற்குக் கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுப்பதாக உறுதி கூறியது உண்மை. அவர் தன் சொல்லைக் காப்பாற்றியுள்ளார். மக்கள் முன்னணி

ஆட்சிக்கு வந்த பின்னர், 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், திருத்தப்பட்ட தண்டனைச் சட்டக் கோவை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதி கௌரவ ஜனாதிபதி, தனது வாக்குறுதியைக் காப்பாற்றினார். துஷ்பிரயோகத்திற்காளான பிள்ளை, அதன் அதிர்ச்சி அனுபவம், அது அடைந்த இன்னல்கள் என்பவற்றை உணர்ந்து அவர் மனம் மிக நெகிழ்ந்தார். 1997, பெப்ரவரி மாதத்தில், மனித உரிமைகள், பிள்ளையின் உரிமைகள் என்பவற்றிற்காக உழைக்கும் நாட்டின் முன்னணிச் செயலார்வலர்கள், பணித்துறை அலுவலர்கள், ஏனைய ஆர்வலர்கள் என்போரை அழைப்பித்து ஒரு கூட்டத்தை நடத்தினார். இவர் தலைமையில் நடந்த இக்கூட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் பேசியதோடு நின்று விடாமல் செவிமடுக்கவும் செய்தார். பிள்ளைகளைப் பாதுகாப்பதற்குத் தன்னுடைய வழிகாட்டலின் கீழ், வலிமை மிக்க ஒரு மத்திய அதிகார சபை அவசியம் என்பதை அவர் விளங்கிக்கொண்டார். சகல விதமான துஷ்பிரயோகத்திலிருந்தும் பிள்ளைகளைக் காப்பதற்கான பணி அணி, இக்கூட்டத்தின் பயனாக உருவாகியதொன்றாகும். இப்பணி அணியில் அங்கம் வகிக்கும்படி 'பீஸ்' அழைக்கப்பட்டது. அதிகார சபைக்கான விபரமான கட்டமைப்பை இப்பணி அணியே உருவாக்கியது. 1998 இல் பிள்ளையைப் பாதுகாப்பதற்கான அதிகார சபைச் சட்டமூலம், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, எத்தகைய கருத்து வேறுபாடுமின்றி நிறைவேற்றப்பட்டது. இது, 1999, ஜனவரியில் முறையேற்புச் செய்யப்பட்டு, 1999 ஜூன் மாதம் நிறுவப்பட்டது.

'பீஸ்' இயக்கத்தின் தலைவர், சபை உறுப்பினராக, அதி கௌரவ ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டார். இது, 'பீஸ்' இயக்கம் பெற்ற ஒரு பெரும் கௌரவமாகும்; அத்துடன் பிள்ளைகளுக்கான நமது பணிக்கு வழங்கப்பட்ட சார்பானதொரு கணிப்புமாகும்.

பாலியல் ரீதியாகச் சுரண்டப்படும் பிள்ளைகள் மீது, குறிப்பாக, நான்கு முகவரகங்கள் காட்டியுள்ள கரிசனைக்கு 'பீஸ்' இயக்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. சர்வதேசத் திட்டம் SIDA / சுவீடன், CIDA /கனடா, ரெட்பானா, நோர்வே/இலங்கை என்பன வழங்கிய பாரிய ஆதரவையும் உதவியையுமே நான் இங்கு குறிப்பிடுகிறேன். நமது பணி, தெட்டத் தெளிவாகத் தெரிந்தமையாலேயே, முதன்முதலாக, நமது பணிக்கு உதவுவதற்கு இவ்வமையங்கள் தாமகவே முன்வந்தன என்பதிற் சந்தேகமில்லை.

அதே களத்தில், பிரச்சினைகள் நிலவிய அதே இடத்தில், 'பீஸ்' இயக்கச் செயற்பாடுகள் இடம் பெற்றமை, நன்கு தெரிந்த ஒரு விடயமாகும். அலுவலகம், நிர்வாகம் என்பவற்றிற்கு மிகச்சிறு தொகையே செலவிடப்பட்டது. உற்சாகம் மிக்க தொண்டர்கள், அர்ப்பணிப்பு மிக்க ஊழியர்களாயினர். மிகச் சிறு ஊதியத்திற்கு, இவர்கள், மிக அதிக உள்ளீட்டை வழங்கினார்கள். சொத்துக்களோ, வாகனங்களோ, நுட்பமான உபகரணங்களோ பெருமளவு சாதனங்களைக் கொண்ட அலுவலகமோ 'பீஸ்' இயக்கத்திடமில்லை. பெரிய கல்வி நிலையங்களும் கல்வி தொடர்பான சாதனைகளும் பெருமைக்குரிய முதற் கோயில்களும் தேவாலயங்களும் நாட்டுப்புறச் சார்ந்த சோலைகளிலேயே இடம்பெற்றன என்ற வாதத்தை நம்பியே நான் எப்பொழுதும் செயற்படுகின்றேன். தென் ஆசிய உப பிராந்திய கலாச்சாரத்தின் பொன்மயமான இறந்த காலத்தை நாம் நோக்கினால், இது, மேலும் எவ்வளவு உண்மை என்பது விளங்கும். நமக்கு முக்கியமாக அமைந்தது **பிள்ளை**; அதாவது, கழிவிரக்கத்திற்குரிய, பாதிக்கப்பட்ட பிள்ளைகள். நமக்குக் கிடைத்த நிதிகள் யாவும் செயற் திட்டங்களுக்காகவே செலவிடப்பட வேண்டியிருந்தது. இந்நிதிகள், சம்பளங்களுக்காகவோ அலுவலர்களுக்காகவோ செலவிடப்படவில்லை. 'பீஸ்' இயக்கம், இந்த எண்ணக்கருவை இன்று வரை பேணி வருகின்றது.

ஆனால், இலங்கையிலிருந்தும் இலங்கைக்கு வெளியிலிருந்தும் PLAN, SIDA, CIDA, ரெட்பான என்பவற்றிலிருந்தும் வேறும் சில நிறுவனங்களிலிருந்தும் கிடைத்த உதவி கிட்டியிராவிட்டால், நாடு முழுவதினதும் கவன மையத்தைத் துஷ்பிரயோகஞ் செய்யப்படும் பிள்ளைகளின் மீது ஈர்க்கும் விதத்தில், நாம் செய்து முடித்த பாரிய பணிகளைச் செய்வதில், ஒரு போதும் வெற்றி கண்டிருக்க மாட்டோம்.

தனி ஆட்கள் பலரும், 'பீஸ்' இயக்கத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவி வழங்கியுள்ளனர். மக்கள், தம்மால் இயன்றவற்றையும் சிறு நன்கொடைகளையும் தந்து உதவியுள்ளனர். வோல்ஸ்றட் கெனெட், இங்க் இஸ்மார் என்போரின் பங்களிப்பைக் குறிப்பிடாமல் விட முடியாது. ஜேர்மனியைச் சேர்ந்த இந்த இரண்டு பெண்களும் இன்று 'பீஸ்' இயக்கத்தின் உன்னத ஆதரவாளர்களாவர். நமது நிகழ்ச்சித்திட்டங்களில் இடம்பெறும் பிள்ளைகள் மீது இவர்கள் செலுத்தும் அன்பிற்கும் கவனத்திற்கும் எல்லை இல்லை. அவர்கள், தம்மை 'எளிமையான பெண்கள்' என்று கூறிக்கொள்கின்றனர். கருணையின் தேவதைகள், எளிமையாக, சாதாரண உடையிலேயே வருவார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை. அவர்களுடைய உதவிக்கும் கரிசனைக்கும் நாம் நன்றிக் கடன்பட்டுள்ளோம்.

ECPAT குடும்பத்திலுள்ள அன்பார்ந்தவர்கள் மட்டுமன்றி, உலகம் பூராவும் நமக்கு வேறும் நண்பர்கள் இருக்கிறார்கள். நாம் செய்யும் பணியில் இவர்கள் ஆழ்ந்த ஆர்வம் கொண்டுள்ளனர். பல்வேறு வழிகளில் நமக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் நமக்கு உற்சாகமூட்டுகின்றனர். விசேடமாக அவர்களின் நட்புக்கு நாம் நன்றிக்கடன்பட்டுள்ளோம். எங்களுக்கு எங்கும் நண்பர்கள் இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அண்மையில், என் சொந்த வாழ்வில் துயரம் மிக்க நேரத்தில், அவர்களின் அன்பும் ஆதரவும், ஒரு பாதுகாப்புச் சுவர் போல் என்னைச் சூழ்ந்து கொண்டிருந்ததை நான் உணர்ந்தேன். அவர்கள் யாவரும், 'பீஸ்'/ ECPAT இனூடாக என் மீது கொண்ட கரிசனையினாலேயே என்னை ஆஸ்வாசப்படுத்தினர் என்று நான் எண்ணினேன். ஆதாவது, வியாபார ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படும் பிள்ளைக்காக நாம் மேற்கொண்டுள்ள பணியையே நான் குறிப்பிடுகின்றேன். இதை நினைத்து நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன். நமது மையக் குழுவின் உணர்வும் இதுவே என்பது எனக்குத் தெரியும். பத்து வருடங்களில் நாம் எண்ணிப் பார்க்கக்கூடிய சில வெற்றிகளை நாம் எட்டியுள்ளோம்.

அத்தியாயம் மூன்று

# சட்டப் பரிந்துரை, கண்காணிப்பு என்பவற்றிற்கு, 'பீஸ்' இயக்கத்தின் பங்களிப்பு

1994 இல், களுத்துறை வடக்கில், பிள்ளை துஷ்பிரயோகி என்று சந்தேகிக்கப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். அச்சுலகினூடாக, 'பீஸ்' இயக்கத்தினர் இது பற்றி அறிந்துகொண்டார்கள். இத்தருணத்தில், பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (BBC), EAST என்ற தனது நிகழ்ச்சிக்கான படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தது. இது, இலங்கையின் கடற்கரைச் சிறுவர்கள் (The Beach Boys of Sri Lanka) என்றழைக்கப்பட்டது.

ஏனையோருள், 'பீஸ்' இயக்கத்தின் தலைவரும் இந்நிகழ்ச்சிக்காகச் செவ்வி காணப்பட்டார். ஏறத்தாழ முதன்முதலில், நீதி மன்றத்திற்கெடுத்துச் செல்லப்பட்ட வழக்குக்களுள் இது ஒன்றாகுமென்று நேர்காணலில் இவர் குறிப்பிட்டார். 'பீஸ்' இயக்கமானது, 1993 இலிருந்து களுத்துறை வடக்கிலுள்ள கடற்கரைகளிலும் கிராமங்களிலும் செயலாற்றி வந்தது. சம்பவங்களைப் பொலீஸிற்கு அறிவிப்பதைப் பொறுத்தளவில், மக்கள் மெல்ல மெல்லத் தைரியம் பெற்றார்கள்.

இந்த 'களுத்துறை வழக்'கின் பின்னரே, 'பீஸ்' இயக்கம், 'சட்ட ரீதியாகக் கண்காணித்தல்' (நாம் புனைந்த சொற்றொடர்) என்ற பரப்பினுட் பிரவேசித்தது. தாம் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டமை பற்றி நீதி மன்றத்தில் சாட்சி சொல்வதற்குக் கொண்டு வரப்பட்ட பிள்ளைகளைச் 'சட்டரீதியாகக் கண்காணித்த'லில் நாம் ஈடுபட்டோம்; 12 வயதிற்கு ஒரு நாளேனும் மேற்பட்டிருந்தாலும் ஒக்டோபர் 1995 வரை, பிள்ளைகள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகக் கொண்டுவரப்பட்டனர். (1883 ஆம் ஆண்டில் நடைமுறையிலிருந்த பழைய சட்டங்களின் பிரகாரம்)

ஃபிரான்ஸ் நாட்டவரான வைத்தியர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட அன்று, அவர், சிறைச்சாலைக் காவற்காரர்கள் புடைசூழ வழக்குரைஞர்களுள் ஒரு கூட்டமே பின்தொடர – இவர்களுள், நாட்டில் மிகப் புகழ் பெற்ற ஜனாதிபதியின் சட்டத்தரணி ஒருவரும் அடங்குவார் – நீதி மன்றத்தை வந்தடைந்தார். குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பாதுகாக்க வேண்டிய உரிமை அவருக்கு உண்டு.

மிகச்சிறந்த சட்ட நிபுணர்களை அமர்த்தி, வழக்காடும் உரிமை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உண்டு. இவ்விஷயத்தில் எவ்விதச் சச்சரவும் இல்லை. ஆனால் நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த பெருஞ் சனத்திரள், தன்னை இனங்கண்டு கொள்ளாத வண்ணம், தனது முகத்தைத் துணியால் மூடிய வண்ணம் நீதிமன்றத்தினுள் நுழைந்ததைப் பார்த்த பொழுது நமது இரத்தம் கொதித்தது. ஏனெனில், மோசஞ் செய்யப்பட்ட (குற்றஞ்சாட்டப்பட்டுள்ள) சிறு பிள்ளைகள், காப்பற்றவர்கள், பாதுகாக்கப்படாதவர்கள், யாவரும் பார்க்கக்கூடியதாக விடப்பட்டுள்ளவர்கள், கருணையற்ற விதத்தில் நிழற்படம் பிடிக்கப்பட்டார்கள்; 'விடியோ' படங்களும் எடுக்கப்பட்டன. ஆனால், குற்றஞ்சாட்டப்பட்ட – தான் குற்றஞ் செய்ததாக எற்றுகொண்ட – இவர், பாதுகாக்கப்பட்டு, முகம் மறைக்கப்பட்டு, மிக மரியாதையுடனும் சகிப்புத்தன்மையுடனும் நடத்தப்பட்டார். இதை நம்ப முடியவில்லை; தாங்க முடியவில்லை. இவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பைக் கேட்டு, நம் சினம் மேலும் அதிகரித்தது. அதாவது 1500/= ரூபா தண்டப் பணத்தை இவர் செலுத்த வேண்டும். இடை நிறுத்திய இரண்டு வருடச் சிறைத் தண்டனை இவருக்கு வழங்கப்பட்டது. ஆனால், இது, மிக மிக்க குறைந்த தண்டனை என்பதைப் பின்னர் நாம் அறிந்து கொண்டோம். 'குற்றவாளி' என்று உறுதிப்படுத்தப்பட்டு, தியரி பாலின்கோர்ட் நீதி மன்றத்தை விட்டுச் சுதந்திர ஆளாக வெளியேறினார். இதன் பின்னர், இவர் நாட்டை விட்டு வெளியேறினார் என்பது தெரிய வந்தது. பிள்ளைகளை முற்றுமுழுதாகத் துஷ்பிரயோகஞ் செய்தவர் இவர். தம்மால் ஆனதைச் செய்து பிழைக்கும்படி இப்பிள்ளகள் விடப்பட்டனர்.

ஆனால், இதனால், 'பீஸ்' இயக்கத்தினரின் கோபம் தூண்டிவிடப்பட்டது. பிள்ளைகள் நீதி மன்றங்களில், இவ்வாறு, காப்பற்றவர்களாக, பாதுகாக்கப்படாதவர்களாக, இனி, என்றுமே விடப்படலாகாது என்று நாம் உறுதி பூண்டோம். நாம் திட்டமிட்ட பணியைச் செய்வதற்கு வளங்கள் இருக்கவில்லை. ஆதாவது, மோசஞ் செய்யப்பட்ட பிள்ளைகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் ஆதரவளித்தல், நீதி மன்றங்களில் சமுகமளித்தல், மோசஞ் செய்யப்பட்டவர்களை நீதி மன்றங்களில் பாதுகாப்பதற்கும் அவர்களுடைய தேவைகளைக் கவனிப்பதற்கும் வழக்குரைஞர்களை ஒழுங்கு செய்தல், குடும்பங்களுக்கு ஆதரவு வழங்குதல், பிள்ளைகள் வாழும் பிரதேசங்ளில் நண்பர்களையும் ஆலோசகர்களையும் கண்டறிதல் முதலியன. இது அசாத்தியமெனச் சிலர் கூறினார்கள். ஆனால், இதைச் சாதிப்பதில், 'பீஸ்' இயக்கம் வெற்றி கண்டது.

காளான்களைப் போல் வெளிப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட பிள்ளைகளை மதிப்பீடு செய்வதற்கு, 1995 ஆம் ஆண்டு முதல் திரு. அருண் தம்பு (அத்தருணத்தில் 'பீஸ்' இயக்கத்தின் மனமொப்பிய ஆலோசகர்), மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான வழக்குரைஞர்கள் (LNRD) கழகத்தின் பணிப்பாளர், திரு. கல்யாணந்த திரனகம என்ற இரு வழக்குரைஞர்களும் நமக்கு உதவ முன்வந்தனர். 1995 ஆம் ஆண்டு ஜனவரி முதல், 'பீஸ்' இயக்கம் ஒழுங்கு செய்த விழிப்புணர்வையூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றினாலும் உந்தப்பட்ட பொலீஸார் தமது கடமைகளை உணர்ந்து செயற்படலாயினர். பாலியற் சுரண்டல்களுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு நியாயத்தை வழங்குவதற்கு முயலும் இயக்கத்திற்கு இவர்களாற்றிய மதிப்பிடற்கரிய பங்களிப்பை நாம் நயப்பதுடன் நினைவு கூர்ந்து பதிவுசெய்கின்றோம். 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, பரந்து வளர்ந்து, வலிமை பெற்றுள்ள 'பீஸ்' இயக்கத்தின் பணிகளுக்கு இவர்கள் அடிக்கடி உதவி வருகின்றனர். இன்று, 'பீஸ்' இயக்கம் மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ள, குறைந்தது ஒன்பது வழக்குகளேனும் உண்டு.

இதைத் தவிர, இயக்கத்தின் 'சட்டரீதியான' முயற்சிகளின் விளைவாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளின் பயனாகக் கைது செய்யப்பட்டு, ஆள்புலங்கடந்து குற்றத் தீர்ப்புப் பெற்ற பிற நாட்டோர், குறைந்தது இருவரைக் குறிப்பிடலாம். இவர்கள், சுவிற்சாலாந்தைச் சேர்ந்த விக்டர் போமன் என்பவரும் பேட்ரண்ட லோமொன்ட் என்பவருமாவர். இவ்விருவரும் சம்பந்தப்பட்ட வழக்குகளின் கதைகளைக் கூறப் புறப்பட்டால், அவை நீளும். இவ்விருவரினதும் குற்றச் செயல்களை 'பீஸ்' இயக்கத்தினர், இடையறாத விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் விடாது பின்பற்றிக் கண்டுகொண்டமையே நமது வெற்றிக்குக் காரணமாகும். விக்டர் போமன், பிள்ளைத் துஷ்பிரயோகக்காரர் என்ற தகவல், 1991 இல், முதன்முதலாக நமக்குக் கிடைத்தது. இவர், சில ஆண்டுகளுக்கு முன்னர் நீர்கொழும்பிலுள்ள எத்துக்கல கடற்கரையில், நேர்த்தியான ஒரு பிரமாண்டமான வீட்டில் குடியேறினார். பிள்ளைகளிடம் 'அன்பு' செலுத்துபவரும் மனித இனத்தின் நலனுக்காக உழைப்பவருமெனச் சிலர் இவரைக் கருதினர். இவர் பெருஞ் செல்வந்தர். அத்துடன், உயர் மட்டங்களில் இவருக்கு அதிகாரம் மிக்க நண்பர்களும் இருந்தனர்.

அவரை அணுகும் தைரியம் எவருக்கும் இருக்கவில்லை. நீதி, நியாயம், உண்மை, துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான பிள்ளைகளின் உரிமை என்று வரும் போது, சம்பந்தப்பட்ட மீறுவோருக்கு 'பீஸ்' இயக்கம் எவ்வித

மதிப்பையும் அளிக்க மாட்டாது. மெதுவாக, ஆனால் திடமாக, நாம், போமன் விவகாரத்தில் ஈடுபடலானோம். இலங்கையிலும் சுவிற்சர்லாந்திலும் பலர் நமக்கு உதவ முன்வந்தனர். பிள்ளைகளின் நலனுக்காகச் சளையாது பாடுபடுபவரும் சுவிற்சர்லாந்தின் பஸ்லேயில் 'பொறுப்புடன் கூடிய சுற்றுலா' என்பதனுள் அடங்கும் பிரதேசங்களிற் பணி புரிபவருமான கிறிஸ்டீன் ப்ளஸ், சுவிற்சர்லாந்தின் ECPAT ஐச் சேர்ந்த ரெகுலா டேர்ஷி என்போரையும் பிள்ளைகளின் கௌரவத்தைப் பேணும் கழகத்தைச் சேர்ந்தோரையும் – இவர்கள் கிரிசனையுடன் CIDE (சியுரிச்) இலிருந்து வந்தோர் – ஏனைய பலரையும் எல்லாவற்றிலும் மேலாக, சுவிற்சர்லாந்து தூதராலயம் இறுதிச் செயற்பாடுகளுக்கு நமக்கு வழங்கி வாழ்த்துக்களையும் நான் என்றுமே மறக்க மாட்டேன். போமனின் 'கம்பீரமான வீட்'டில் என்ன நடக்கின்றது என்பதை எட்டிப் பார்ப்பதற்காக ஷேர்லியும் நானும் வாகனம் பழுதடைந்ததாகக் கூறி நடித்ததும் சிறுவர்களுக்குத் 'தொழில் தேடு'வதற்காக ஷேர்லியும் சுனிலும் 'வித்தியாசமான உடைகள்' அணிந்து, 'போமனின் செயற்பாட்டு அமைவிட'ங்களுக்கு விஜயம் செய்தும் அதன் பின், பெருமளவு தரவுகளுடன் நாம் திரும்பியதும் எனக்கு ஞாபகம் வருகின்றது. இவை யாவற்றையும் பற்றிக் கூறுவதற்கு, இந்நூலில் இடம் போதாது.

'லோமன்ட் வழக்கு' தொடர்பாகவும் இதையே கூறலாம். அவர் தங்கிருந்த களுத்துறைக் கடற்கரையில் அமைந்திருந்த 'மாளிகை'யில் விஷயங்கள் நன்றாக இல்லையென்று நான் சந்தேகித்தேன். அவருடைய பெரிய வீடு முழுவதும் சுவிற்சர்லாந்து நாட்டின் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

இவரைக் கைது செய்வதற்கு நான்கு வருடங்கள் பிடித்தன. இங்கும் சிஐடி யின் உதவியின்றி எதுவும் சாத்தியமாகியிருக்காது. லோமன்ட், இலங்கையில், இரட்டை வேடம் போட்டு வாழ்ந்தான்.

நமது பண்டைய குடித்தலைவர்கள் வாழ்ந்தது போன்ற வாழ்க்கைப் பாணியைப் பின்பற்றி வாழ்ந்தான். தான் விரும்பிய நேரங்களில், முடவன் போல நடித்துச் சக்கர நாற்காலியைப் பயன்படுத்தினான். கால்கையைப் பிடித்து விடுவதற்குச் சிறுவர்களின் உதவியை நாடினான்! அயலவர்கள், இவனது வேண்டாத நடவடிக்கைகளைக் கண்டு சந்தேகித்தனர். எனினும், இதில் தலையிடாதிருக்கவே விம்பினர். (இப்பிரச்சினையில் இதுவே பெரும் கவலைக்கிடமான விஷயமாக இருந்தது.) 1996 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம், சுவிற்சர்லாந்தில் சியோனில் தன்னுடன் தொடர்மாடி வீடொன்றில் வாழ்வதற்கென 14 வயதுச் சிறுவனொருவனை

(இவன் முதலாவது சிறுவனல்ல) கூட்டிச் சென்ற போது இவனுடைய முடிவு நிச்சயமாகிவிட்டது. 'பீஸ்' இயக்கம், சி.ஐ.டி. உடன் இணைந்து செயற்பட்டதன் விளைவாக, இவன் 1996 ஆம் ஆண்டு டிசெம்பர் 1 ஆந் திகதி கைது செய்யப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டான்.

இந்த இரண்டு வழக்குகளும் ஆள்புலங்கடந்த சட்டங்களின் கீழ் விசாரிக்கப்பட்டன. 1991 இல் ECPAT ஆதரவு திரட்டிய பின்னர் ஐரோப்பிய நாடுகள் இச்சட்டங்களை அங்கீகரித்தன. இவை, பலியான பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டங்களுள் மிகவும் கருணை நிறைந்த சட்டங்களாகும். இலங்கையில், ஏற்கெனவே ஐந்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பிள்ளைத் துஷ்பிரயோகக்காரர்களுக்கு அவரவர் நாட்டில், உகந்த தண்டனையை வழங்குவதற்கு, இவ்வழக்குகளில் இச்சட்டங்கள், பயனுறுதி மிக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் விசாரிக்கப்பட்ட பிள்ளைத் துஷ்பிரயோகிகள் சம்பந்தப்பட்ட வேறு மூன்று வழக்குகளில் குற்றவாளிகள் தண்டனைக்குள்ளாகினர். இவற்றில் 'பீஸ்' இயக்கத்தின் பங்கு உணரப்பட்டது. இவை, 'ஃபஃப்ஹௌஸர்' வழக்கும் 'கஸ்பர்' வழக்குமாகும். (இவர்களிருவரும், நீடிக்கப்பட்ட விஜய விஸாக்களில் இலங்கையில் வாழ்ந்தனர்.) அம்பலாங்கொடையில், வாழ்ந்த ஜேர்மனி நாட்டவர் சம்பந்தப்பட்ட 'பிலட்ஸ்டாச்', வழக்கு மூன்றாவது வழக்காகும். இவருக்குப் பெருந்தொகையானோர் பலியாயினர். மனக்குழப்பத்திற்காளாகி, சிகிச்சை பெறாத நிலையில் சிறுவர்கள் சாட்சியளித்தனர். தொமஸ் கஸ்பர் பிணையில் தப்பினார். ஆனால் ஏனைய இருவரும் தண்டிக்கப்பட்டனர்.

மிக அண்மையில், 1999 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் இரண்டு ஸ்கன்டநேவியர்கள் சம்பந்தப்பட்ட இரண்டு வழக்குகள், நீர்கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டன. இவர்களுள் ஒருவர் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. இவர் சுவீடனுக்குத் திரும்பினார். நோர்வே நாட்டவரின் வழக்கு இன்னமும் விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டவன் என்று கூறப்படும் சிறுவன் 'கடற்கரைச் சிறுவன்' அல்ல என்பதும் அவன் ஒரு 'நல்ல குடும்ப'த்தைச் சேர்ந்தவன் என்பதும் தெரிய வந்துள்ளது. ஆனால் இவனுடைய பெற்றோர் இருவரும் தொழில் புரிவதால், பெற்றோரின் மேற்பார்வை இருக்கவில்லை.

உள்நாட்டு, வெளிநாட்டுப் பிள்ளைத் துஷ்பிரயோகிகளினால் துஷ்பிரயோகஞ் செய்யப்படும் பிள்ளைகள் எப்பொழுதுமே வறுமையில் வாடும் கவனிக்கப்படாத பிள்ளைகளாகவும் தனி தனியாகப் பிரிந்து வாழும் பெற்றோரின் பிள்ளைகளாகவும் ஒற்றுமையாக இயங்காத பெற்றோரின் பிள்ளைகளாகவும் இருக்கின்றனர்.

பிள்ளைத் துஷ்பிரயோகம் நமது சமூகத்தில் பெருமளவில் இடம் பெறுகின்றது. 'பீஸ்' இயக்கத்தின் சட்டரீதியான கண்காணிப்பு, இது எந்தளவில் இடம் பெறுகின்றதென்பதை நிரூபிப்பதற்குக் காரணமாக இருந்துள்ளது. பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்தல், கற்பழித்தல் முறையில்லாா் புணர்ச்சி, பாலியல் தாக்குதல் என்பன பெரிய அளவில் இடம்பெறுகின்றன. ஆனால், ஒரு சில சம்பவங்களே அறிவிக்கப்படுகின்றன. அறிவிக்கப்பட்டாலும் கூட மிகச் சிலவே நீதி மன்றத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுக் குற்றவாளிகள் தண்டனைக்குட்படுத்தப்படுகிறார்கள்.

*1993* இல், பொலீஸ் தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்ட 'பிள்ளைத் துஷ்பிரயோக' பிரிவு, பெரும் முன்னேற்றப் படிகளுள் ஒன்றாகும். இன்று, இப்பிரிவு, பிள்ளைகளினதும் பெண்களினதும் பணியகம் எனப்படுகின்றது. ஒரு தொலைபேசித் தொடர்பு இலக்கம் 24 மணித்தியாலங்கள் செயற்படுகின்றது. குறைந்தது 50% முறைப்பாடுகள் பொலீஸினால் விசாரிக்கப்படுகின்றன. 'பிள்ளைப் பிரிவு', பல பொலீஸ் அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ளது. பிள்ளைத் துஷ்பிரயோகச் சம்பவங்களைக் கையாளுவதற்கான பிரத்தியேகப் பயிற்சி பொலீஸ்மாராகக் கடமையாற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப்படுகின்றது. பிள்ளைகளின் உரிமைகள் என்ற இம்முக்கியமான துறையுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இவை யாவும் உதவியுள்ளன. பிள்ளைத் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு இதுவே மிகப்பயனுறுதி வாய்ந்த முறையாகும்.

பிள்ளைகளை, வர்த்தக ரீதியாகப் பாலியல் சுரண்டலுக்குள்ளாக்கும் வலையமைப்புக்கள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் காணப்படுகின்றன என்பதை 'பீஸ்' இயக்கம் ஆரம்பத்திலிருந்தே உணர்ந்து வந்துள்ளது. ECPAT இந்நிலையை ஆராய்ந்துள்ளது. பிள்ளைத் துஷ்பிரயோகக் கழகங்கள் உலகில் செழித்தோங்கியுள்ளன. நமது நாடு போன்ற நாடுகளிலுள்ள பலவீனர்களும் ஊறுபடத்தக்கவர்களும் இந்த ஓனாய்களுக்கு ஆட்டுக் குட்டிகளாகி விடுகிறார்கள். நமது மாகாண எல்லைகளுக்குள் குரூரமான விதத்தில் பிள்ளைகளை விற்றலும் கடத்துதலும் இன்று எல்லோரும் அறிந்த விஷயமே. இந்நிலைமை உண்மையில் திகிலூட்டுகின்றது. காமத் தரகர்களும் பெண்களை வழங்கும் தரகர்களும் இவ்வியாபாரத்தின் மூலம் பணம் படைத்தோராக மாறியுள்ளனர்.

பலியானோருக்காகப் பணி புரியும் தொண்டர்கள், குறிப்பாக, நீதிமன்றங்களில் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிய போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது, வழக்குரைஞர்களுடன் நீதிமன்றங்களுக்குச் செல்லும் பணியையும் பொலீஸுடனான இடைத்தொடர்புகளையும் ஏற்படுத்துகின்றனர்; பிள்ளைகளை அணுகிச் சிநேகத்துடன் பழகுகின்றனர். அரசாங்க அலுவலர்களுக்கும் அரசாங்கச் சார்பற்ற அமையங்களுக்கும் அனுப்ப வேண்டிய அறிக்கைகளைத் தயாரிக்கின்றனர். இது மிகவும் கசப்பான பணியாகும். பிள்ளைகளின் அவல நிலை தெளிவாகத் தெரிகின்றது. புனர்வாழ்வு, மீட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இல்லாமையும் மிகத் தெளிவு. ஆலோசனை வசதிகள், சற்றேனும் போதியதாக இல்லை. 'பீஸ்' இயக்கம், பிரதானமாகத் தடுப்புத் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களிலேயே ஈடுபடுகின்றது. துஷ்பிரயோகத்தின் பயங்கரமான பின் விளைவுகளுக்கு ஈடுகொடுத்து நடப்பதற்கு 'பீஸ்' இயக்கத்திடம் வளங்கள் இல்லை. ஆனால், இப்பணியை நிறைவேற்றும் பொறுப்பை மேற்கொள்ளும் பொருட்டு அரசாங்கத்தையும் ஏனைய அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களையும் தூண்டுவதற்கு 'பீஸ்' தன்னாலியன்ற முயற்சிகளை மேற்கொள்கின்றது.

அத்தியாயம் நான்கு

# 'பீஸ்' இயக்கத்தின் செயற்பாடுகளின் விரிவெல்லை

பாலியல் ரீதியாக, வர்த்தக அடிப்படையில் சுரண்டப்படும் பிள்ளைகளின் சார்பில் நாம், உண்மையான காந்தீயப்பாணியில், பல தடவைகள் சத்தியாக்கிரகம் செய்திருக்கிறோம். பிள்ளைத் துஷ்பிரயோகம் என்ற கொடிய குற்றங்களின் மீது கவனத்தை ஈர்க்கும் விதத்தில், கொடிகளை ஏந்தியவாறு கிராமங்கள், பட்டணங்கள் போன்ற பல இடங்களிலும் தலை நகரிலும் எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தியிருக்கின்றோம்.

நாம், சுவரொட்டி இயக்கங்களை நடத்தியிருக்கின்றோம். கடற்கரைகள் தொடக்கம் ஐந்து நட்சத்திரத் தங்ககங்கள் வரையான அமைவிடங்களில், சமூகத்தின் பல்தரப்பட்ட மட்டத்தினருக்கும் செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் நாம் நடத்தி வந்துள்ளோம். அத்தகையோர் பின்வருமாறு: நீதிபதிகள், பொலீஸ் அலுவலர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், வழக்குரைஞர்கள், குடும்ப அங்கத்தவர்கள், பாடசாலைப் பிள்ளைகள், பெண் சாரணர்கள், ஆண் சாரணத் தலைவர்கள், மதகுருமார்கள், மடாலங்களைச் சேர்ந்தோர், பௌத்த பிக்குக்கள், தெருப் பிள்ளைகள், கடற்கரைப் பிள்ளைகள், சேரிவாழ் மக்கள், உள்ளூராட்சித் துறையினர், ஊடகவியலாளர், அரசாங்க ஊழியர்கள், அரசாங்கச் சார்பற்ற நிறுவன உறுப்பினர்கள்.

மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாகவும் அதனுடன் தொடர்புற்ற பிரச்சினைகள் பற்றியும் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்வதன் பலனாக எழும் எச்ஐவி / எயிட்ஸ் / பால் ரீதியாகப் பரப்பப்படும் நோய்கள் என்பன போன்ற பாரதூரமான பிரச்சினைகள் பற்றியும் நாம் விடியோ படங்களைத் தயாரித்திருக்கின்றோம்; நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் நாட்டின் மும்மொழிகளிலும் வெளியிட்டிருக்கின்றோம். எச்ஐவி / எயிட்ஸ் / பால் ரீதியாகப் பரப்பபடும் நோய்கள் என்பன நமது கவன மையமாக இருந்துவந்துள்ளன.

துஷ்பிரயோகத்துடன் தொடர்புற்ற இரண்டு பிரதான பரப்புக்களை நாம் அசட்டையாக விட்டு விடவில்லை: பிள்ளைகள் பற்றிய இழிபொருள் ஓவியம், இலக்கியம், திரைப்படம், பிள்ளைகளைக் கடத்துதல் என்பனவே இந்த இரு பரப்புக்களுமாகும். இத்தீங்குகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு நாம் முழுமூச்சாக உழைத்திருக்கின்றோம். பரந்த அளவில் பிரபல்யப்படுத்தப்பட்ட, *1998* ஆம் ஆண்டு, ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற பலரும் சமுகந்தந்த கருத்தரங்கொன்றில், 'இணையத்தில், பிள்ளைத் துஷ்பிரயோகம்' என்ற விஷயத்தைப் பற்றிக் கவனஞ் செலுத்திய முதல் அரசாங்கச் சார்பற்ற நிறுவனம் 'பீஸ்' இயக்கமேயாகும்: இக்கருத்தரங்கில் பங்குபற்றிய, 'லங்கா இன்டர்நெட் சேர்விஸஸ் லிமிடட்', பீஸ் இயக்கத்திற்கு உகந்தளித்த தளம் (WWW.lanka/charity/P.E.A.C.E) இக்கருத்தரங்கின் நல் விளைவுகளுள் ஒன்றாகும்.

மிக்க அழகான கடற்கரைகள் அமைந்துள்ள தென் மேற்குக் கரையோரப் பிரதேசம் முழுவதிலும், கடற்கரைகளை அண்டியுள்ள தென் மேற்குப் பிரதேசங்கள் முழுவதிலும் நாங்கள் பணியாற்றியிருக்கின்றோம். கடற்கரைகளைச் சார்ந்த பிரதேசங்களிலிருந்தே பிள்ளைகள் கொண்டுவரப்படுகிறார்கள். ஒரு காலத்தில், இலங்கைச் சிங்கள மன்னர்களின் கடைசி அரணாகவும் இன்று முக்கியமான சுற்றுலாப் பிரதேசமாகவும் திகழும் மலைப் பிரதேசமான மத்திய மாகாணத்திலுள்ள கண்டியிலும் அதைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் நாங்கள் பணியாற்றியிருக்கின்றோம். மிகப் பயனுறுதி வாய்ந்த நிகழ்ச்சித் திட்டங்களுட் சில, இன்று, இப்பிரதேசத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன. பிள்ளைத் துஷ்பிரயோகப் பிரச்சினை நிலவும் இடங்கள் யாவும் நம் ஆராய்ச்சியாளர்களினால் இனங்காணப்பட்டு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இவ்விடங்களுக்கெல்லாம் நாம் சென்று, நாம் தொடர்படக்கூடியவர்களையும் இனங்கண்டு, நம் பணி தொடர்பான செய்தியைப் பரப்பியருக்கின்றோம்.

எண்ணற்ற தடவைகள் 'பீஸ்' வள அணி, அதிகாலையில் புறப்பட்டுச் சென்று, ஏறத்தாழ நள்ளிரவில் திரும்புவதுண்டு. இச்சந்தர்ப்பங்களில், நாள் ஒன்றிற்குக் கிட்டத்தட்ட பன்னிரண்டு மணித்தியாலங்கள், வள அணி பணியாற்றும். ஒரு சில ஊடகச் செய்திகளே வெளிவந்தன. பெரும்பாலானோருக்கு உண்மை நிலை தெரியாது. எனவே, தீவிர விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியமாயிற்று. கடற்கரை மக்களைப் பொறுத்தளவில், தம்முடைய மைந்தர்கள் கர்ப்பம் தரிக்க மாட்டார்கள் என்றளவில் திருப்திப்படுகின்றனர்.

''பிள்ளைப் பாலியல் துஷ்பிரயோகம் என்பது போன்ற சுவாரசியமற்ற துறையில் எவ்வாறு உங்களால் வேலை செய்ய முடிகின்றது? இத்தகைய மக்கள், இத்தகைய குடும்பங்கள், குடிகாரர்கள், போதை வஸ்துக்கடிமைப்பட்டோர், துஷ்பிரயோகிகள் என்போர் மத்தியில் எவ்வாறு பணியாற்றுகிறீர்கள்? வெறுப்பாக இல்லையா?'' என்று பலர் நம்மிடம் கேட்கிறார்கள். எப்படியிருப்பினும், நாம் ஒரு போதும் அவ்வாறு சிந்திக்கவில்லை. பலவீனர்களிடையேயும் எளிதில் ஊறுபடத்தக்கோரிடையேயும் வறுமையிலும் வறுமையில் வாடுவோரிடையேயும் சில, வியக்கத்தக்க, பலம் மிக்க, ஈடுபாடு நிறைந்த மக்களை நாம் கண்டிருக்கின்றோம். நமது வேலை தொடர்பாக நண்பர்களையும் சகபாடிகளையும் ஏற்படுத்திக்கொண்டோம். நாம் அவர்களிடமிருந்து நிரம்பக் கற்றுக்கொண்டோம். அவர்கள் தம் இன்னல் மிக்க வாழ்க்கையைத் தைரியத்துடன் வாழ்வதைப் பார்த்து நாம் வலிமை பெற்றோம். அவர்களுடைய ஹாசிய உணர்வையும் நம்பிக்கையையும் கஷ்டங்களின் மத்தியில் உயிர் பிழைத்து வாழ்வதற்கு அவர்கள் கொண்டுள்ள வல்லமையையும் கண்டு வியக்கின்றோம். இப்பெண்களுடனும் பிள்ளைகளுடனும் அடிக்கடி இடைத்தொடர்பு கொள்வதன் மூலம் என் வாழ்வு வளப்படுத்தப்பட்டுள்ளமையை நான் பெருமையுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

கொடையாளர்கள் தரும் நிதிகளைக் கொண்டு, பிள்ளைப் பாலியற் துஷ்பிரயோகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான திட்டங்களின் ஒரு பகுதியாகவோ, நமது 'கடமை' என்ற விதத்திலோ மட்டும் நாம் இக்கருத்தரங்கு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தவில்லை. 'பீஸ்' இயக்கத்தின் வள அணி உறுப்பினர்களிடையே எப்பொழுதும் நிலவும் சகோதரத்துவம் இந்நிகழ்வுகளை இனிமையாக்குகின்றது.

நமது பயணங்கள் எப்பொழுதுமே மகிழ்ச்சி மிக்கனவாக இருக்கின்றன. நமது ஒரு தசாப்த காலப் பணியில் நாம் ஏற்ற இறக்கங்களைக் கண்ட அதே வேளை, நமது பணியின் பிரதான இலக்குகள், குறிக்கோள்கள், நோக்கங்கள் பற்றியும் அவற்றை எய்துவதற்கு நாம் கையாளப் போகும் முறைகள் பற்றியும் உடன்பாடு கண்டுள்ளோம். நாம், ஒற்றுமையில் வலிமை கண்டோம்.

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் ஆதரவுடன், நீதித் துறை அலுவலர்களுக்காக ஒரு கருத்தரங்கை 'பீஸ்' நிகழ்த்தக்கூடிய ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. இப்பிரச்சினைகளைப் பொறுத்தளவில் நீதிபதிகள், நீதிவான்கள் என்போரின் மனப்பாங்குகள் மிக்க முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருப்பதனாலும் பிள்ளைகளைப்

பாதுகாப்பதற்கான சட்டங்களுக்குப் பொருள் விளக்கங் கொடுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் இவர்கள் பெரும் வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும் என்பதனாலும் – குறிப்பாக, பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்த, 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத் தண்டனைச் சட்டக் கோவைத் திருத்தச் சட்டமூலம் - 'பீஸ்' இயக்கம் நீண்ட காலமாகப் பிரபல நீதிபதிகளையும் நீதிவான்களையும் எதிர்நோக்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தது. கிடைத்த இவ்வாய்ப்பை, 'பீஸ்' இயக்கம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகக் கருதுகின்றது.

எல்லாமே நன்கு நடந்தேறிக்கொண்டிருந்தது. அத்தருணத்தில், திறந்த பல்கலைக் கழகத்தின் சட்டத்துறைப் பகுதிக்குத் தலைவராக இருந்த பேராசிரியர் சாவித்திரி குணசேகர தனது சமர்ப்பிப்பை முன் வைத்தார். அவருடைய அறிவுத் திறன் நிறைந்த கருத்துக்களைப் மிக்க கவனத்துடனும் மிக மரியாதையுடனும் பங்குபற்றுநர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். தீர்ப்புக்களை வழங்கும் போது, நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படும், பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் நலன் கருதி நடக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

காலைத் தேநீரைப் பரிமாறுவதற்காகத் தேநீர், கோப்பி, சிற்றுண்டி என்பன தயாராக இருக்கின்றனவா என்பதைப் பார்ப்பதற்காக நான் மண்டபத்திகுட் சென்ற போது, இரண்டு உண்டிச் சேவகர்கள், மிகக் கவலையுடன், அச்சந்தோய்ந்த குரலில் 'குண்டொன்று', என்றார்கள் "குண்டா? எங்கே? எப்பொழுது?" என்றேன் நான் பதற்றத்துடன். அடிக்கடி நிகழும் குண்டு வெடிப்புக்களும் தற்கொலைக் குண்டுதாரிகளும் பல இறப்புக்களுக்குக் காரணம். இவற்றினால் ஏற்படும் சொல்லொணாச் சேதங்கள் இலங்கையர் நன்கு அறிந்தவையே. ஆனால், ஐந்து நட்சத்திரத் தங்ககத்தில் குண்டா? இதன் முன்னர், 'பீஸ்' இயக்கம், கருத்தரங்கிற்கு ஐந்து நட்சத்திரத் தங்ககத்தைப் பயன்படுத்தியதில்லை. ஆனாலும் முக்கியமான நீதித்துறை அலுவலர்களுக்கான கருத்தரங்கு என்பதனால் நாம் ஐந்து நட்சத்திரத் தங்ககத்தைத் தேர்ந்தெடுத்தோம். நடுநடுக்கத்துடன் நான் சிந்திக்கலானேன். சில ஆண்டுகளுக்கு முன், ஓர் ஐந்து நட்சத்திரத் தங்ககத்தில் குண்டொன்று வெடித்தது. இதற்கிடையில் செய்தி நம் காதிற்கெட்டியது. இராணுவத் தலைமையத்தினுள் ஒரு குண்டு வீசப்பட்டது. அது அதிக தொலைவில் இல்லை. உண்மையில், கருத்தரங்கு நடந்துகொண்டிருந்த இடத்திலிருந்து ஒரு சில யார்களுக்கு அப்பால் இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

ஏற்கெனவே சிதை கூளம் அகற்றப்பட்டுக்கொண்டிருந்தது. தெருக்கள் மூடப்பட்டன. பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுத் தீவிரமாக்கப்பட்டது. இச்செய்தியைப் பங்குபற்றுநர்களுக்கு அறிவிக்காதிருக்க முடியவில்லை. ஏறத்தாழ நாற்பது பேர் 'போகன்விலா' அறையில் இருந்தார்கள். இயல்பாகவே அவர்களும் நாங்களும் பீதிக்கும் மனத்தடுமாற்றத்திற்கும் உள்ளானோம். எனினும், கருத்தரங்கைத் தொடர்ந்து நடத்தினோம். வள அணியினர் தத்தம் சமர்ப்பிப்புக்களைச் செய்தனர். இதைத் தொடர்ந்து இடம் பெற்ற கலந்துரையாடல் உயிர்த்துடிப்புள்ளதாகவும் பயன்மிக்கதாகவும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நம்பிக்கையை வழங்குவதாகவும் இருந்தது. நமது இயக்கம் கண்காணித்து வந்த பிள்ளைத் துஷ்பிரயோக வழக்கொன்றில் சம்பந்தப்பட்டிருந்த நீதிவான் ஒருவர் குழுவில் இருந்தமை நமக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

மாலை நான்கு மணியளவில், கருத்தரங்கு முடிவுற்றது. தெருக்கள் யாவும் மீண்டும் திறக்கப்பட்டு, பங்குபற்றுநர்கள் சுகமாக வீடு திரும்பக் கூடியதாக இருந்ததைக் கண்டு நாம் நிம்மதியடைந்தோம். குண்டு வெடிப்பில் இறந்தோருக்காகவும் காயமுற்றோருக்காகவும் நம் இதயம் வருந்தியது. நம்மைப் பாதுகாத்தமைக்கு இறைவனுக்கு நன்றி கூறினோம். இலங்கையில் வாழ்க்கை இதுவே. நெருக்கடிக்கு மேல் நெருக்கடிகளைத் தாண்டி நம் பணிகளைச் செய்ய நாம் கற்றுக்கொண்டு விட்டோம். 'பீஸ்' இயக்கத்தின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

வேறு நிகழ்வுகளும் உண்டு. கொழும்பு நகரின் வடக்கே, எண்ணெய்த் தாங்கிகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கிய அன்று, சம்பவம் நடந்த இடத்திற்கு 35 கிலோ மீற்றர் தொலைவிலிருக்கும் புற நகர்ப் பகுதியிலுள்ள ஜா அலவில் கருத்தரங்கொன்றை நடத்துவதற்காகப் புறப்பட்டுச் செல்வதற்கு 'பீஸ்' அணியினர் தயாராக இருந்தனர். தீச்சுவாலைகளுக்கு மத்தியில், கரும் புகை மண்டலம் வானத்திற் பரவ, படையினரும் புலிகளும் நகர எல்லைக்கப்பால் மோத, நாம் புறப்பட்டுச் செல்வது அசாத்தியமாக இருந்தது. எனினும், நமது இணைப்பாளர்கள் முன்வந்து, அந்நாளே கருத்தரங்கை நடத்தி முடித்தனர். நிலைமை கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், நாம் இலக்காகக் கொண்டிருந்த மாணவர்கள், ஆசிரியர்கள் என்போருக்கும் கடற்கரைகளில் மேலோட்டமாகப் பார்த்தால், அமைதியாகவும் சூரிய ஒளியில் ஆழ்ந்ததாகவும் சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கும் அதிகரித்து வரும் இடங்களின் விளிம்புகளில் அமைந்துள்ள, ஆபத்துக்குள்ளாகக் கூடிய குடும்பங்களுக்குமாக இந்த கருத்தரங்கை நினைத்திருந்த மட்டத்தில் மீண்டும் நடத்தினோம்.

பிள்ளை விபச்சாரம், பிள்ளைகளைப் பாலியல் அடிப்படையில் வர்த்தக ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்தல், பிள்ளைத் துஷ்பிரயோகிகளின் செயற்பாடுகளும் முறையில்லார் புணர்ச்சியும் பிள்ளைகளைப் முறைகேடான பாலியலில் ஈடுபடுத்துதல் என்பன சமூகத்தில் ஆராயப்படக்கூடாத, தடை செய்யப்பட்ட விடயங்களாகக் கருதப்பட்டன. பொது மக்களிடையே கலந்துரையாடப்படுவதற்கு இவ்விஷயங்கள் 'பொருத்தமற்றவை', 'மரியாதைக் குறைவானவை' என்று கருதப்பட்டன. இந்நிலைமையைத் தைரியமாக உடைத்து, 1991 இலிருந்து சமூகத்தின் சகல மட்டங்களிலும் இவ்விஷங்கள் மீது கவனத்தை ஈர்ப்பதற்கு 'பீஸ்' இயக்கமே முன்வந்தது. நமது கருத்தரங்குகள், செயலமர்வு என்பவற்றினூடாக மட்டும் நாம் இதைச் செய்யவில்லை. பத்திரிகையாளர் என்ற விதத்தில், பல்வேறு ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர்கள், இவை பற்றிக் கிரமமாக எழுதுவதற்கு நீண்ட காலமாக எனக்கு, இடம் ஒதுக்கித் தந்துள்ளனர். 1991 முதல், இவ்விஷயத்தைப் பற்றி எழுதுவதற்காகத் தரப்பட்ட பெறுமதி மிக்க இடத்தை நான் பயன்படுத்தினேன்; இதன் பயனாகப் பொதுமக்களின் ஆர்வம் அதிகரித்தது. 'பிள்ளைத் துஷ்பிரயோகம்', 'பிள்ளையின் உரிமைகள்', இவற்றுடன் தொடர்புற்ற ஏனைய விஷயங்கள் பற்றி, வானொலி நிகழ்ச்சிகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுமாறு, இயக்கத்தில் இருக்கும் மற்றையோருடன் ஷேர்லியும் நானும் அதிக அளவில் அழைக்கப்பட்டோம். செவ்விகளை நடத்தி, அவற்றைச் சஞ்சிகைகளிலும் செய்தித்தாள்களிலும் பிரசுரிப்பதன் மூலமும் தத்தமது நாடுகளின் நிகழ்ச்சிகளில் 'விடியோ' நாடாக்களைப் பயன்படுத்துவதன் மூலமும் சர்வதேச ரீதியாக இலங்கையில் நடப்பவற்றை வெளிப்படுத்தவும் வெளி நாட்டு ஊடகங்களைச் சேர்ந்தோரும் குழுக்களும் பிரச்சாரத்தை மேலும் மேம்படுத்துவதற்கு உதவினர். இலங்கையில் நடப்பவற்றை வெளிப்படுத்தவும் வெளி நாட்டு ஊடகங்களைச் சேர்ந்தோரும் குழுக்களும் பிரச்சாரத்தை மேலும் மேம்படுத்துவதற்கு உதவினர். இலங்கை அரசாங்கம் விழித்தெழுந்து இப்பிரச்சினை பற்றிக் கவனஞ் செலுத்தத் தொடங்கியமை இதன் பிரதான விளைவாகும். 1991 முதல் 1994 வரை, அரசாங்கம் ஓரளவிற்கு 'மங்கலாக'வே நோக்கியது. ஆனால், 1994 இற்குப் பின்னர், 'இறுதி முடி'வொன்று கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றில்லா விட்டாலும் தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒரு பிரச்சினை என்ற விதத்தில் இப்பிரச்சினையை அரசாங்கம் பார்க்கலாயிற்று. இப்பிரச்சினை, விவிலிய காலம் முதல் உலகைப் பீடித்த ஒரு பிரச்சினையாகும். அதற்கு முன்னரும் இப்பிரச்சினை நிலவியதென்பதில் சந்தேகமில்லை. இன்று, எங்குமுள்ள பிள்ளைகள், தகுந்த அளவில் அரசினால் எழுதப்படாத தமது 'உரிமை'களை எடுத்துக்கூறியுள்ளனர்.

வெளி நாட்டு ஊடகங்களுடன், மிகவும் சுவாரசியமான இடைத்தாக்கங்களில் நாம் ஈடுபட்டோம். இவ்வாண்டுகளில், லண்டன் பீபீ.ஸி, ஜெர்மனியில் வெளியாகும் STERN என்ற சஞ்சிகை, வொஷிங்டன் போஸ்ட், ஐக்கிய அமெரிக்கா, செய்தி முகவர்களான சர்வதேச ரொய்டர்ஸுடனும் ஃபிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, இத்தாலி, ஸ்கன்டநேவிய நாடுகள், இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா முதலிய நாடுகளிலுள்ள பத்திரிகை நிறுவனங்களுடனும் நாம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தோம். இப்பிரச்சினையை உணர்ச்சிபூர்வமாக முன்வைத்தமைக்கு, இவ்வூடகத்தாருக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

சக நாடுகளிலிருந்து அழைப்புக்கள் அடிக்கடி வந்தன. சர்வதேச அரங்குகளில் பிரச்சினையை முன்வைப்பதற்குப் பொன்னான சந்தர்ப்பங்களை இவை வழங்குவதால், 'பீஸ்' இயக்கத்தின் மையக் குழு அங்கத்தவர்கள், இவ்வழைப்புக்களை எப்பொழுதுமே ஏற்றுக்கொண்டனர். அனுசரணையுடன் நடத்தப்பட்ட நிகழ்வுகள் எப்பொழுதுமே வெற்றி கண்டன. குறிப்பாக, ஸ்வீடன், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, தாய்லாந்து, இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளுக்கு நான் சென்ற தருணங்களில் நூற்றுக்கணக்கானவர்களுடன் நட்பை ஏற்படுத்தியிருக்கிறேன். இவர்கள் யாவரும் இன்று வரை 'பீஸ்' இயக்கத்தின் நண்பர்களாகவும் ஆதரவாளர்களாகவும் இருக்கிறார்கள். நமது குறிக்கோளுக்காக இவர்கள் சளையாது உழைத்திருக்கிறார்கள். எனது நண்பர்களும் தோழர்களும் பிள்ளைகளின் நலன் கருதிச் செயற்படுவோருமான வெர்ஜீனியா ஹட்ஸெல் (ஐக்கிய அமெரிக்கா), கிரேட்டல் போர்ட்டர் (ஐக்கிய அமெரிக்கா), மார்ட்டின் ஸ்டபிளர் (ஜேர்மனி), மார்ட்டின் குன்ஸ் (ஜேர்மனி), மெரில்ட் மோரர் (ஜேர்மனி), கிறிஸ்டீன் ப்ளஸ் (சுவிற்சர்லாந்து), ஹெலனா கார்லன் (ஸுவீடன்), பேர்ணடெட் மக் மெனேம் (அவுஸ்திரேலியா), பீட்டர் ஹோல்டன் (அவுஸ்திரேலியா), சுதரத் சேர்விவத் (தாய்லாந்து), பிரக்ரை நொன்டவஸ் (தாய்லாந்து), ஜோ டி லின்டா (ஃபிரான்ஸ்) என்போரையும் வேறும் பலரையும் நான் எவ்வாறு மறக்க முடியும்?

ECPAT இன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் சர்வதேச இணைப்பாளரும் தலைவருமாகிய (*1996 – 1999*) ரொன் ஓ கிரேடி, ECPAT இயக்கத்திற்கு வழங்கிய உந்துதலுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். இவர் மிகச் சிறந்தவொரு தலைவராவார். வலிமையும் ஈடுபாடும் கொண்டவர்; நமது குறிக்கோளைப் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றவர். நாம் பின்பற்ற வேண்டிய அகன்ற விரகுகளை வகுக்கும் விவேகத்தை இவர் கொண்டிருந்தார். விரகை விரிவுபடுத்திச்

செயற்படுத்தும் பணியைத் தேசியக் குழுக்களிடமும் அவற்றின் தலைவர்களிடமும் விட்டுவிடுவார். பணிப்பாளராகவும் வழிகாட்டியாகவும் பணிபுரிவோரிடம் இப்பண்பை அரிதாகவே காணலாம். ரொன் நமக்கு வழி காட்டினார். எனினும், அவ்வந்நாடுகளுக்கிணங்கவும் பண்பாடுகளுக்கிணங்கவும் அவரவா் தத்தம் வழியை வகுத்துக் கொள்ளும் விஷயத்தை அவரவரிடமே விட்டுவிட்டார். நாம் அப்பணியைச் செய்தோம். இந்நூற்றாண்டின் இறுதியில், பிள்ளை விபச்சாரம் ஒரு முடிவிற்கு வராத போதிலும், நாம் கண்ட தோல்விகளை விட வெற்றிகளே அதிகமாக இருந்தது. இவற்றை நாம் அவர் முன் சமர்ப்பிக்கக்கூடியதாக இருந்தது. நாம் முழு உலகிற்கும் உதவியுள்ளோம். இதற்கப்பாலும் என்ன செய்ய முடியும்? கடந்த ஒரு தசாப்தமாக வகுக்கப்பட்ட சகல உத்திகளையும் விரகுகளையும் பயன்படுத்தி விரைவில் விடியவிருக்கும் மூன்றாம் சகஸ்ரத்தில், நம்மை விட இளையோரையும் சேர்த்துக் கொண்டு ECPAT உடம் 'பீஸ்' இயக்கமும் தொடர்ந்து முன்னேற வேண்டும்.

அத்தியாயம் ஐந்து -

# மலரும் மொட்டுக்கள் ('பிபென குஸும்') வலையமைப்பு

இளையோரும் தாக்கப்படக்கூடியவர்களும் 'இருக்கும் இடத்திலேயே வளர்வ'தற்கு இங்கு – இலங்கையில் – நாம் உதவுகின்றோம். மலரும் மொட்டுக்கள் (பிபென குஸும்) வலையமைப்பு உயிர்ப்புடன் செயற்படுகின்றது. ECPAT உடன் இணைக்கப்பட்ட சர்வதேச இளையோர் பங்குபற்றல் நிகழ்ச்சித் திட்டம் (IYPP) 1996 இல், ஸ்டொக்ஹோம் காங்கிரஸ் சந்திப்பின் போது உதயமாகியது. அமிஹன் அபு எவவினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

இது, இலங்கையில் தனக்கே உரிய உருவத்தையும் வடிவத்தையும் பெற்றிருக்கின்றது. செயலூக்கம் மிக்கதொரு குழு, தற்பொழுது இயங்கி வரும் ஒன்பது கழகங்களையும் நெறிப்படுத்துகின்றது. தலைமைத்துவத்தை உருவாக்குதல், பாடசாலையிலிருந்து விலகியவர்களுக்கு (இவர்களே பெரும் சேதத்திற்குள்ளாகக்கூடியவர்கள்) திறன்களில் பயிற்சி அளித்தல், கல்வியைப் பரப்புதல் இவற்றின் கவன மையமாக அமைகின்றது. இவர்களுடைய சுய மரியாதையை உயர்த்துதல், தற்கால அடிமைத்தனத்தில் மிகவும் வெறுக்கத்தக்கதான இத்தொழிலில் அகப்படுவதற்குக் காரணமாகவுள்ள வறுமையை ஒழித்தல் என்பனவே மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் நோக்கமாகும்.

ஆய்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டவாறுள்ளன; புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் வரையப்படுகின்றன; பிரயோகித்துப் பரிசோதனை செய்யப்பட்டவை தொடரப்படுகின்றன; செயற்படும் முறைகள் திருத்தியமைக்கப்படுகின்றன; வள ஆளணியினர் இனங்காணப்படுகின்றனர்; தொடர்புற்ற சகல துறைகளிலுமுள்ள உத்தியோகத்தர்கள் 'பீஸ்' இயக்கத்தின் இளையோருக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவு நல்கின்றனர்.

1997/1998 இல் இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் பங்குபற்றிய இளையோர்/ பிள்ளைகள் என்பவர்களே, கழகங்களின் வலையமைப்பிற்கான பெயரைத் தெரிவு செய்தனர் என்பதை உணர வேண்டியது முக்கியம்.

'பீஸ்' இயக்கத்தின் 'முறிந்த மொட்டு' என்ற குறியீடே இப்பெயருக்கு ஊற்றாக

அமைந்தது. இப்பிள்ளைகள்/இளையோர், தாம் 'முறிந்த மொட்டுக்கள்' அல்ல என்பதையும் 'முறிந்த மொட்டுக்க'ளாக இருக்கும் எண்ணம் தமக்கில்லை என்பதையும் தாம் 'மலரும் மொட்டுக்க'ளாக இருக்கவே எண்ணுகின்றனர் என்பதை நமக்கு உணர்த்த முயன்றனர். நமது திட்டங்கள், செயற் திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினூடாக, நாம் இச்செய்தியைக் அவர்களிடமிருந்து நேரடியாகக் கிரகித்துக் கொண்டோமா?

இது, கருத்தரங்கை/செயற்படு முறையை விட ஆழமானது; செயலமர்வுகளை விட ஆழமானது. இது மிக முக்கியமான மனப்பாங்கு மாற்றமாகும். மனப்பாங்குகளை எவ்வாறு மாற்றலாம் என்பதைத் திட்டமிடுவது நமது பொறுப்பு.......... நாம் சிந்திக்கவேனும் தொடங்கி விட்டோமா?

'பீஸ்' நிகழ்ச்சித் திட்டங்களைக் கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் நடத்தி வரும் இடங்களிலெல்லாமிருந்து பின்வரும் செய்தியே கிடைக்கப்பெறுகின்றது: கழக வலையமைப்பிற்கு, வயது கூடிய பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வது அசாத்தியமாக இருக்கின்றது. 15 வயதுப் பிள்ளைகளைப் பெறுவதே கடினமாக இருக்கின்றது ............ ஏன்? இவர்கள் எங்கே?

இவர்கள் எல்லோரும் 'தொழில்' பார்க்கிறார்கள் என்று ஷேர்லி என்னிடம் கூறிய போது, எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இலங்கையில் வேலை இல்லாப் பிரச்சினை இல்லை என்பதா இதன் கருத்து? அவர்கள் வர்ணித்த போது நான் மிக மிகக் கவலைப்பட்டேன்.

விற்பனைக்கான பொருட்களைக் கொண்ட கை வண்டிகளைப் பிள்ளைகள் இழுக்கிறார்கள். பெண் பிள்ளைகளும் யுவதியரும் கூட இவ்வேலையில் ஈடுபடுகிறார்கள்.

மரத்தூளைச் சேகரித்துப் பொதிகளாக்கி, ஒரு சில ரூபாக்களுக்குப் பிள்ளைகள் நாளாந்தம் விற்கிறார்கள்.

பிள்ளைகள் விறகு சேகரித்து விற்கின்றார்கள்.

பிள்ளைகள் பொருட்கள் அடங்கிய பாரமான மூட்டைகளைச் சுமந்து ஒரு சில ரூபாக்களைச் சம்பாதிக்கிறார்கள்.

எனவே, இச்சிறு தொகைகளைச் சம்பாதிப்பதில் ஈடுபட்டுள்ள இவர்கள், மேற்கொண்டு கல்வியைப் பெறுதல், திறன்களைப் பெறும் பயிற்சிகள் முதலியவற்றிற்கு

வரமாட்டார்கள் அல்லது வர விரும்பமாட்டார்கள் அல்லது வர முடியாது. ஏற்கெனவே பாடசாலையிற் கற்கும் சிறுவர், சிறுமியர், இலவசமான மேலதிகக் கல்வியைப் பெறுவதற்கும் (Tuition) அத்துடன்/அல்லது ஆங்கிலப் பேச்சு வகுப்புக்களுக்கு வருவதற்குமான, இக்கழக வலைமையப்பைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதையா இது குறிக்கின்றது? நிதி கிடைக்கும் பொழுது பின்வருவனவற்றைக் கற்பிப்பதற்காகப் பாடசாலையிலிருந்து விலகிய 15, 16, 17 வயதுப் பிள்ளைகளைச் சேர்த்து இக்கழகங்களுக்கு வருகை தரும்படி செய்வதற்கு வேறு வழி இல்லையா?

- திறன்கள்
- விழுமியக் கல்வி
- சிறந்த உடனலப் பழக்க வழக்கங்கள்
- ஏதோ ஒரு வகை ஆத்மிகப் புத்துயிர் அளித்தல்
- பங்குபற்றுகையும் பங்குபற்றுதல் தொடர்பான அவர்களின் உரிமைகளும்
- சூழற் பிரச்சினைகள்
- சமூக நாடகங்கள்
- வரைதல், கைப்பணி வேலைகள் முதலியன

வரையப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், கருத்தரங்குகளை நடத்துதல், செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல், என்பவற்றிற்கும் அப்பாற் சென்று நாம் பணி புரிய முடியும்; பணி புரிய வேண்டும் என்பதே எனது சொந்தக் கருத்தாகும். ஒரு வேளை உணவிற்காக மரத்தூள், விறகு போன்றவற்றை விற்கும் பிள்ளைகளையும் வெற்றுப் போத்தல்களைச் சேகரித்து விற்கும் பிள்ளைகளையும் பல விதமான ஆபத்தான வேலைகளில் ஈடுபடும் பிள்ளைகளையும் நாமே நாடிச் செல்ல வேண்டும். இவர்கள் எத்தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்களோ, அத்தொழிலைத் தொடர்ந்து செய்யும் அதே வேளை, மாதம் ஒரு முறையோ, இரண்டு முறையோ, மலரும் மொட்டுக் கழக நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றலாம்; கழகத்தின் சில செயற் திட்டங்களில் ஈடுபடலாம்; நிதி கிடைக்கும் தருணங்களில், கழகம் நடத்தும், திறன் பயிற்சி போன்ற பாட நெறிகளுள் ஒன்றில் சேர்ந்து படிக்கலாம் என்பதே என் கருத்து. (இப்பொழுது இதை நாம் செய்துள்ளோம்.) **வாழ்க்கை** என்பது கசிப்பு அருந்துதல்ல; போதை வஸ்து அடங்கிய கிரரெட் பிடித்தல்ல; உகந்த வயதை எய்துவதற்கு முன்னரே தந்தையாகும் அல்லது தாயாகும் நிலைக்குத் தள்ளப்படும் இழிந்த பாலியல் செயற்பாடுமல்ல என்பதை இவர்கள் உணர

ஆரம்பிக்கட்டும். நீங்களும் நானும் நன்கறிந்துள்ள ஓவியம், இசை, பாட்டு, அழகு, விஞ்ஞான விந்தைகள் நிறைந்த வியத்தகு உலகைச் சற்றேனும் காணட்டும்.

தேவை என்ற உணர்வு இருந்தால் மட்டுமே ஒருவர் சாதனைகள் படைக்கலாம்.

அத்தியாயம் ஆறு

# நாம் மறக்கமுடியாது

*பிள்ளைகள் கதறுவது உங்களுக்குக் கேட்கின்றதா, ஓ என்*
*சகோதரர்களே, ஆண்டுகள் செல்லச் செல்ல மனத்துயரும் வந்துறும்*
*(எலிசபெத் பரே பிரௌனிங்)*

நிலூக்கா, ஓயாது என் மனத்தில் வட்டமிடுகிறாள். இவள், பதினொரு வயதுச் சிறுமி. நீண்ட கூந்தல்; அழகிய முகம்; போஷாக்குக் குன்றிய சிறிய உடற்கட்டு. இவள், கொடிய, கடற்கரை பாபாவினால், வர்த்தகரீதியான பாலியற் சுரண்டலுக்காகக் கடத்திச் செல்லப்பட்டாள். இவள் முதன்முதலாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்ட பொழுது இவளுக்கு ஒன்பது வயதிருக்கலாம். இவளை நாம் கடைசியாகச் சந்தித்த பொழுது இவளுக்கு வயது பதினொன்று. அப்பொழுது இவள் ஹிக்கடுவ கடற்கரையில் அலைந்துகொண்டிருந்தாள். கையில் ஒரு சிறு கட்டு எண்ணெய் தோய்ந்த பணத்தாள்கள்; ஒரு முழு நாள் கடினமான பாலியல் வேலைக்கான (வாய் மூல பால் தொடர்பு) ஊதியமாக நாற்பது ரூபாக்கள். ஒவ்வொரு வாரமும், குறைந்தது ஐந்து முதல் பத்து வரையான வெளி நாட்டு ஆண்களும் உள் நாட்டு ஆண்களும். நாம் அவளை முதன்முதலிற் சந்தித்து ஏழு ஆண்டுகளின் பின், இன்று அவள் எங்கே? 1995 ஆம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் அவளைக் கண்ட பின் மீண்டும் அவளை, நாம் காணவில்லை. அவளுக்கு உதவுவதற்கு, நாம், நம்மால் இயன்றதைச் செய்தோம். ஆனால், அவள், எங்களுக்கிடையில் இருக்கவே பயந்தாள். கடற்கரை பாபாவைக் கண்டு, அவள் நடுநடுங்கினாள். அவள் இறந்து விட்டாளா? கடற்கரை பாபாவிற்கு அவள் அபாயத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற எண்ணத்தினால், அவள் அங்கிருந்து அகற்றப்பட்டாளா? அவள் 'எயிட்ஸ்' நோய்க்குப் பலியானாளா? நமக்குத் தெரியாது. இக்கடத்தற்காரனை, நீதியின் பிடியில் சிக்க வைத்ததை மட்டும் நாம் செய்ய முடிந்தது. இறுதியாக, 1997 ஆம் ஆண்டு, இக்குற்றச்சாட்டின் பேரில் அவன் கைது செய்யப்பட்டதை நாம் கண்டோம். இவனுக்கெதிரான வழக்கில், சிறுவன் ரவீந்திர, இவனுக்கெதிராகச் சாட்சியம் அளித்தான். (நிலூக்கா அல்ல). இவ்வழக்கு, காலி உயர் நீதி மன்றத்தில் விசாரிக்கப்படுகின்றது. 'பீஸ்' இயக்கம், இவ்வழக்கைச் சட்ட ரீதியாகக்

கண்காணிக்கின்றது. நீதிசார் செயன்முறைகள் இலங்கையில் மெதுவாகவே இடம் பெறுகின்றன.

நுவான் சஞ்சயவும் என் மனத்தில், ஓயாது வட்டமிடுகின்றான். வெட்க சுபாவம் கொண்ட, பாரதூரமான உள அதிர்ச்சிக்காளான இச்சிறுவன், 70 வயது நிரம்பிய ஒரு ஜேர்மானியரினால் முற்று முழுதாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்ட பின்னர், அம்பாந்தோட்டையின் பாறைகள் நிறைந்த கடற்கரையில் ஒரு மிருகத்தைப் போல் வாழ்ந்து வந்தான். இப்பதினான்கு வயதுப் பிள்ளையையும் இதே வயதைக் கொண்ட ஏனைய பிள்ளைகளையும் துஷ்பிரயோகஞ் செய்தமைக்காக, இந்த ஜேர்மானியர் தற்பொழுது இங்கு சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றமை, 'பீஸ்' இயக்கத்திற்கு ஒரு விதத் திருப்தியைத் தருகின்றது. மத்திய கிழக்கு வளைகுடா நாடுகளுள் ஒன்றிற்குச் சென்ற நுவனின் தாயார் திரும்பி வரவேயில்லை. இவனுடைய தந்தைக்கு ஒரு வைப்பாட்டியும் அவள் மூலம் பெற்ற பிள்ளைகளும் இருக்கிறார்கள். இந்த மூத்த மகனைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது. இனியும் அவனைத் தன் பிள்ளையாக ஏற்றுக்கொள்வதற்கு அவர் மறுத்துவிட்டார். எனவே, இச்சிறுவன் துஷ்பிரயோகத்திற்கு ஈர்க்கப்பட்டு நண்பர்களினால் பயமுறுத்தலுக்குட்படுத்தப்பட்டான். இந்த ஜேர்மானியத் துஷ்பிரயோகிக்கெதிரான வழக்கில், இச்சிறுவனின் சாட்சியம் மிக முக்கியமாக இருந்தது. 'பீஸ்' இயக்கத்தின் ஆதரவுடனும் வேறும் உதவும் எண்ணம் படைத்தவர்களின் ஆதரவுடனும், இவன், இரண்டு வருடங்களாகக் கடற்கரையில் வாழ்ந்து வந்தான். இறுதியில், இவ்வழக்கு முடிந்ததும் இவனது தாயின் உறவினர்கள் அவனுக்கு உதவுவதற்கு முன்வந்தார்கள். இப்பொழுது அவன் அவர்களுடைய மீன் பிடிக்கும் வள்ளங்களில் வேலை செய்கிறான்; தனது சிதைந்த வாழ்வைச் சீராக்க முயல்கின்றான். நமது நல்லாசி அவனுக்கு என்றும் உண்டு.

மாணிக்கம், இன்று, நம்மிடையேயும் சமுதாயத்திலும் இல்லாத போதிலும் நாம் அவனை நினைவு கூருகின்றோம். இவனுக்கு, அப்பொழுது, பன்னிரண்டு வயதே பூர்த்தியாகியிருந்தது. 1995 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், விபச்சாரக் குற்றச் செயலில் ஈடுபட்டு, இலங்கையின் பழைமையான சட்டங்களுக்கமைய விபச்சாரத்திற்கு உடந்தையாக இருந்தான். விபச்சாரத்திற்காளாகியிருந்த அதே நேரம், இக்குற்றத்தின் பங்காளியாகவும் இருந்தான். நாம், ஒவ்வொரு மாதமும் இவனை நீதிமன்றத்தில் காண்போம். சாட்சியக் கூண்டின் மேல் மட்டத்தை மீறும் அளவிற்குக்கூட இவனது உயரம் இருக்கவில்லை. இவன் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த, கதியற்ற சிறுவனாவான். அத்தருணத்தில் இவன், கால்வாய் ஓரத்திலுள்ள தெகிவளைச்

சேரிகளில் வாழ்ந்து வந்தான். இங்கிருந்த போதே, சுவிற்சர்லாந்தைச் சேர்ந்தோர் இவனை வேலைக்கமர்த்தினர். இவன் துஷ்பிரயோகத்திற்காளாக்கப்பட்டு இவர்களால் கடத்தப்பட்டான். சுதாகர் என்றே பல ஆண்டுகளாக அழைக்கப்பட்ட மாணிக்கம், அவர்களின் பிள்ளைப் பாலியல் செயல்களுக்கு அடிமையாக இருந்தான். தடுத்து வைக்கப்பட்டிருந்த இல்லம் ஒன்றிலிருந்து தப்பித்தி ஓடிய இவன், அவர்கள் தண்டிக்கப்படும் வரை மீண்டும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். (இவர்களுள் ஒருவன் தப்பிக்கொண்டான்). துஷ்பிரயோகி, விடுதலையானதும், இச்சிறுவன், மீண்டும் அவனுடன் சேர்ந்து கொண்டான்: வேறு வாழ்வு அவனுக்கில்லை. இன்று, அவன் குமரப்பருவத்தை எய்தி விட்டான். அவனை வாடகைக்குப் பெற விரும்பும் அத்தனை பேருக்கும் அவன் விபச்சாரியாகச் செயற்படுகின்றான். விபச்சாரத்திற்கு வருவோர் மிகக் குறைவாக இருந்தால், இவன் சீவியத்திற்காகப் பிச்சையும் எடுப்பான். எவ்வளவு பரிதாபகரமான வாழ்க்கை! மீட்சியும் புனர் வாழ்வும் இன்னமும் கைக்கெட்டாத ஒன்றே என்பதை மாணிக்கத்தின் வாழ்க்கை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. எப்பொழுதும், ஒரு குற்றவாளி என்ற வகையிலேயே மாணிக்கம் நடத்தப்பட்டான். துஷ்பிரயோகத்திற்குப் பரிதாபகரமாகப் பலியானவன் இவன். திரிபுபட்ட, கொடூரமான, நெறி பிறழ்ந்த, பிள்ளைத் துஷ்பிரயோகியின் 'அன்பு' தான் இவன் அறிந்த அன்பாகும். இப்பிள்ளைத் துஷ்பிரயோகியை நீதி மன்றங்களில் நான் சந்தித்த போதெல்லாம் தான் பிள்ளை மீது பெரிதும் அன்பு செலுத்துவதாக இவன் விளக்கம் தருவான். இவன் கூறுவது முழுக்க முழுக்கப் பிழை என்பதை அவனை ஏற்றுக்கொள்ளச் செய்ய என்னால் முடியவில்லை. மாணிக்கம், இத்தழும்புகளை என்றென்றும் தாங்கிக் கொள்வான்.

பிச்சைக்காரச் சிறுவன் காமினி பிச்சைக்காரப் பிள்ளையாகப் பல ஆண்டுகளைக் கழித்த பின்னர் தொடர்ந்தும் பிச்சைக்காரனாகவே இருக்கின்றான். அவனுடைய தாயார் ஓர் ஊமை. அவனுடைய தந்தை எனக் கூறி அவனை ஏற்க எவரும் முன்வரவில்லை. அவன் தெருவில் வாழ்ந்து வந்தான். அவன் அழகாகவும் அசுத்தமாகவும் இருந்ததனால், வெளி நாட்டு ஆண்கள், அவனை அழைத்துச் செல்வர். அவனைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்வதற்கு முன்னர், அவனை நீராட்டிச் சுத்தஞ் செய்வர். ஒரு நேர உணவையும் ஒரு டீ-ஷேர்ட்டையும் அவனுக்குக் கொடுப்பர். அவனுக்கு மதுபானங்களையும் போதை வஸ்துக்களையும் கொடுத்தனர். இதனால் அவன் சுகவீனமுற்றதுடன் அவை இரண்டிற்கும் அடிமையானான். இவற்றிற்காகவே தான் இவர்களின் பின்னால் சுற்றுவதாக இவன் எங்களிடம் கூறினான். அவனுடைய உடலுக்கு அவர்கள்

செய்தவற்றை அவன் வெறுத்த போதிலும் அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை. பிச்சை எடுப்பதனால் போதிய அளவு பணத்தைத் தாய் சேர்க்க முடியாதிருக்கும் நாட்களில் இவன், இவ்வாறு தான் 'உழைத்த' பணத்தைக் கொண்டு தன் தாய்க்கு ஒரு வேளை உணவு வாங்கிக் கொடுப்பான். காமினி, ஒரு சமூக விரோதி. பல சிறு களவுகளில் இவன் சம்பந்தப்பட்டிருந்தான். இப்பொழுது அவன் ஓர் இளைஞன். இவன் பல தடவைகள் சிறைக்குச் சென்று மீண்டுள்ளான். (குறுகிய காலத் தண்டனைகள்.) முன்னர், அவன் நன்நடத்தைப் பாதுகாவலில் இருந்திருக்கின்றான். ஏதோவொரு நாள் கொலை செய்வதற்கும் தான் தூண்டப்படக்கூடும் என்றும் அவன் கூறுகின்றான். அவன் கர்வம் மிக்கவன் என்பதும் டம்பமாகப் பேசுபவன் என்பதும் எங்களுக்குத் தெரியும். நாம் பலருடைய கவனத்தை அவன் மீது ஈர்த்தோம். ஆனால், அவனுக்கு உதவ எவருமே முன்வரத் தாயாராக இல்லை; ஆலோசனை வழங்குவதற்குக் கூடத் தயாராக இல்லை என்றே தோன்றுகின்றது. துஷ்பிரயோகஞ் செய்யப்பட்ட, நன்னடத்தையற்ற இளைஞனான காமினியுடன் தொடர்பு வைத்துக்கொள்ள நாம் முயல்கின்றோம். அவன் தனக்கு வேண்டுமென்று தேடிக்கொள்ளாத அவனது வாழ்க்கைப் பாணியைக் கண்டு அவனுடன் நாமும் வருந்துகின்றோம். அவன், தனக்கும் நமது சமூகத்திற்கும் பாரமாகிவிட்டான்.

இத்தகைய, பற்பல பிள்ளைகளை நாம் ஞாபகத்தில் வைத்திருக்கின்றோம்; மறக்கவில்லை. கடந்த தசாப்தத்தில், 'பீஸ்' இயக்கம் மேற்கொண்ட பணிகளின் போது, இத்தகைய பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பை நாம் பெற்றோம். நாம் விரும்பிய அளவிற்கு 'அவர்களை ஒன்று சேர்க்க' நம்மால் முடியவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஓரளவு **ஆறுதலையும் நம்பிக்கையையும்** மட்டுமே நாம் அவர்களுக்கு வழங்க முடிந்தது.

கடந்து சென்று ஆண்டுகளைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது, நமது அணியினர், ஈடுபாட்டுடனும் கரிசனையுடனும் வழங்கிய சேவை ஞாபகத்திற்கு வருகின்றது. நான் எப்பொழுதுமே, 'முழுநேர ஊழியர்' என்ற வகையிலேயே சேவையாற்றியிருக்கிறேன். சில சமயங்களில் 'பீஸ்' பணி, என் முழு வாழக்கையையும் நிரப்பியுள்ளதெனலாம். நான் அதற்குக் கொடுத்ததற்கும் மேலாக, அது எனக்குத் தந்துள்ளது. 'பீஸ்' இயக்கம் என்னைத் தேர்ந்தெடுத்தது. தடைகளும் வளங்கள் கிடையாமையும் நம்மைப் பயமுறுத்திய போதிலும், நாம் அவற்றை அறைகூவல்களாக ஏற்றுக்கொண்டோமேயன்றி, அவை என்றுமே நமது பணியைத் தடை செய்யவோ நிறுத்தவோ இல்லை. நாம் புயல் போலச் செயற்பட ஆரம்பித்தோம்.

என்னைப் பொறுத்தளவில், சிந்தித்தல் என்பது செயற்படுதலாகும். ஷேர்லி, எப்பொழுதுமே மிக முன் ஜாக்கிரதையுடன் நடந்து கொண்டதுடன் தீர்க்க நோக்குடையவராகவும் இருந்ததனால், 'பீஸ்' இயக்கத்தையும் என்னையும், தேவையான சந்தர்ப்பங்களில், அமைதியாக வழி நடத்திச் செல்லக்கூடியதாக இருந்தது.

'பீஸ்' இயக்கமும் நானும் அநாமதேயமான அச்சுறுத்தல்களைச் சந்தித்திருக்கின்றோம்; பயமுறுத்தல்களைச் சந்தித்திருக்கிறோம்; நஞ்சைக் கக்கும் எழுத்துக்களைப் பார்த்திருக்கின்றோம்; கோணிய உள்ளங்களின் நச்சுத்தன்மை வாய்ந்த விமர்சனங்களைக் கேட்டிருக்கின்றோம். இவற்றின் மத்தியில் நாம் முன்னேறிச் சென்றுள்ளோம். பிள்ளைத் துஷ்பிரயோகிகளுக்குப் புகழ் மாலைகள் சூட்டப்படுவதையும் முகமன் கூறப்படுவதையும் ஏன், அவர்கள் போற்றப்படுவதையும் கூட நாம் இன்றும் காண்கிறோம்; தொடர்ந்து, அவர்கள் தம் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் நாம் காண்கிறோம். ஆனால், அவர்களின் கணக்குத் தீர்க்கப்படும் நாள், மெதுவாக, ஆனால் நிச்சயமாக அவர்களை மீறி, அவர்களை ஆட்கொண்டமையையும் நாம் கண்டிருக்கின்றோம். இது, முன்னேறிச் செல்வதற்கு நமக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் தருகின்றது. நம் நாட்டில் துஷ்பிரயோகத்திற்குள்ளாகும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்குச் சுதந்திரமும் புதிய, மகிழ்வான வாழ்வும் வரும் என்பதை நம் மனக்கண்ணில் காண்கிறோம். பாலியல் ரீதியாகப் பிள்ளைகளைச் சுரண்டுதல், முடிவுக்கு வரும் நாள், என்றோ நிச்சயமாக உதயமாகும்.

இணைப்பு ஒன்று

## சட்டச்சீர்திருத்தங்கள்

1998 ஆம் ஆண்டின், தண்டனைச் சட்டக் கோவை (திருத்த)ச் சட்டம், இலக்கம் 29, 1998 ஆம் ஆண்டின், சான்று (திருத்த)ச் சட்டம், இலக்கம் 33, குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவை (திருத்த)ச் சட்டமூலம், நீதிமுறை மன்றச் சட்ட (திருத்த)ச் சட்டமூலம் ஆகிய நான்கு சட்டமூலங்களும், 1998 ஆம் ஆண்டு, மே மாதம் 6 ஆந் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைமுறைக்கு வந்தன.

இந்நான்கு சட்ட மூலங்களிலும் காணப்படும் சில முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

- 18 வயதிற்குக் குறைந்த எவரையும், எவரேனும் பிச்சை எடுப்பதற்கோ, உடற் புணர்ச்சிக்காக ஆட்களைக் கூட்டிவிடுவதற்கோ தடை செய்யப்பட்ட பொருட்களைக் கடத்துவதற்கோ பயன்படுத்துதல், கொடிய குற்றவியல் தவறாகும்.
- புகைப்படங்கள், திரைப்படங்கள் போன்றவற்றை விருத்தி செய்வோர், விருத்தி செய்வதற்காகத் தமக்குக் கிடைத்த படச் சுருளில், பிள்ளைகள் தொடர்பாகக் கண்ணியமற்ற ஆபாசமான படங்கள் காணப்பட்டால், அவர்கள், அது பற்றி பொலீஸிற்கு அறிவிக்க வேண்டிய சட்டரீதியான கடப்பாடுடையவர்களாவர்.
- நியதிச்சட்ட ரீதியான சம்மத வயது பதினாறாகவோ பதினாறுக்கு மேற்பட்டதாகவோ இருக்கும் பட்சத்தில், நியதிச்சட்ட அடிப்படையில், பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் சார்ந்த குற்றத்தை, நியதிச் சட்ட ரீதியான வன்புணர்ச்சி தொடர்பான சட்டத்தில் கூட்டிணைத்தல்.
- தற்கொலை எத்தனம், ஒரு குற்றவியல் தவறாகக் கருதப்படமாட்டாது.
- பிள்ளைத் துஷ்பிரயோகம் தொடர்பான சந்தர்ப்பங்களில், நீதவானின் கட்டளைக்கிணங்க மேற்கொள்ளப்படும் கட்டுக் காப்புக் காலம், 24

மணித்தியாலங்களிலிருந்து மூன்று நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

- பிள்ளைத் துஷ்பிரயோகத்தைப் பொறுத்த வரையில், ஒருவர், பிடியாணையின்றிக் கைது செய்யப்படலாம்.

- நியதிச்சட்டரீதியான வன்புணர்ச்சிக் குற்றத்தைப் பொறுத்த மட்டில், சுருக்கமுறையற்ற நடவடிக்கைகள் ஒழிக்கப்பட்டுள்ளன.

- வழக்குகள் தாமதிக்கப்படுவதை ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதற்காக, பிள்ளைத் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- துஷ்பிரயோகத்திற்குள்ளான பிள்ளைகளின் வழக்கு விளக்கம் முடியும் வரை, அவர்களைக் கவனிப்பு நிலையங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- பிள்ளையின் சாட்சியம் பதிவு செய்யப்பட்ட பின்னர், பிள்ளை நீதி மன்றிற்கு வரவேண்டியதில்லை.

இணைப்பு இரண்டு

## கட்டாயக் கல்வி

தெருப்பிள்ளைகளும் வேலைபார்க்கும் பிள்ளைகளும் பற்றிய பிரச்சினையை ஆகக்குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்ளும் நோக்கத்துடன், 1997, நொவெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட 1003/5 என்ற எண் கொண்ட அரசாங்க சிறப்பு வர்த்தமானி அறிக்கையொன்றினூடாக, ஐந்து வயதிற்கும் 14 வயதிற்கும் உட்பட்ட பிள்ளைகளைக் கட்டாயமாகப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டுமென்று கூறப்பட்டது. சகல பிள்ளைகளுக்கும் கல்வி வழங்குதல் என்ற அரசின் தேசியக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் முகமாகக் கல்விக் கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் அத்தியாயத்தின் 37 ஆம் பிரிவின் கீழுள்ள, 1977 ஆம் ஆண்டின், இலக்கம் ஒன்றில் இடம்பெற்றுள்ள பிரமாணங்களில், 'பிள்ளைகளில் பாடசாலைக்கு வர வேண்டியது கட்டாயம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் அதிபர்கள், கிராம அதிகாரியின் பிரிவைச் சேர்ந்த கிராம அதிகாரி, பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து இவ்விரண்டு பிரதிநிதிகள், குறிப்பிட்ட அப்பிரிவின் சமுர்தி இயக்கத்தின் தலைவர் என்போரை உள்ளடக்கியதாக ஐந்து பாடசாலைகளுக்கு ஒரு 'பாடசாலை வரவுக் குழு' அமைக்கப்படும். ஐந்து பாடசாலைகளுக்கும் அதிகமான பாடசாலைகளைக் கொண்ட கிராம அதிகாரியின் பிரிவுகளில் அத்தகைய இரண்டு குழுக்கள் இடம்பெறும். இத்தகைய, ஏறத்தாழ 13875 குழுக்களுள், 10000 குழுக்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டுவிட்டன.

இக்குழுக்கள் தவிர, செயலாளர் பிரிவு மட்டம் ஒவ்வொன்றிலும், வலயக் கல்விப் பணிப்பாளர், நன்நடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர், பொலீஸ் அதிபர், செயலாளர் பிரிவில் கணிக்கப்பட்ட ஒரு சமூக சேவகர் என்போரை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழுவொன்று நிறுவப்படும். இத்தகைய, ஏறத்தாழ 302 குழுக்களுள், 250 குழுக்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டுவிட்டன.

பிள்ளைகளை வேலைக்கமர்த்தி மிகவும் மோசமான விதத்தில், அவர்களைக் கொண்டு வேலைவாங்கும் முறைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கும்படி கோரும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச சமவாயம் ஒன்று, சர்வதேசத்

தொழில் அமையத்தின் (ILO) 87 ஆம் அமர்வில், 1999, ஜூன் 17 ஆந் திகதியன்று, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. 174 அங்கத்துவ நாடுகளின், அரசாங்கங்களின் பிரதிநிதிகளும், வேலை வழங்குவோரும் தொழிலாளர்களும் இச்சமவாயத்திற் பங்குபற்றினர். புதிய இச்சமவாயத்தின் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை உலகளாவிய ஊர்வல இயக்கத்திற்கு ஒரு பாரிய வெற்றியாகும். இலங்கையில் இவ்வியக்கத்திற்கான தேசிய ஒருங்கிணைப்பு நிறுவனமாகிய 'பீஸ்' இயக்கம், தனது முயற்சிகள் விரயமாகவில்லை என்பதையிட்டுப் பெருமிதமடைகின்றது.

சட்டச்சீர்த்திருத்தங்களும் சமவாயங்களும், இத்துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தம்மளவில் செயற்படுத்த இயலாது. இவற்றை ஒழித்துக்கட்ட வேண்டுமேயானால், சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, மிக்க செயலார்வத்துடன் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

ஷேர்லி ஜே. எஸ். பீரிஸ்
செயலாளர்/'பீஸ்'

இணைப்பு மூன்று

# பெண்களையும் பிள்ளைகளையும் கடத்தும் பிரச்சினை தொடர்பாகப் பிராந்தியங்களில் தொடக்கி வைக்கும் வேலைகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக, 'பெண்களைக் கடத்துதலுக்கெதிரான கூட்டமைப்'பினால் (CATW) ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டு மகா நாடுகள், பங்களாதேஷில், டாக்காவில், *1998* ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலும் *1999* ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் நடத்தப்பட்டன.

பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எதிரான பாலியல் குற்றங்களின் அளவு, திடுக்கிடச் செய்யும் பரிமாணங்களை எட்டியுள்ளது. பெண்களையும் சிறுமியரையும் கடத்துதல், விபச்சாரம், இழிபொருள் ஓவியம், இலக்கியம், திரைப்படம், பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்தல் என்பவை, புதிய, மிகக் கேடு விளைக்கின்ற வடிவங்களை எய்தியிருப்பதுடன், கொடூரமாகவும் மிகப் பரந்த அளவிலும் இடம்பெறுகின்றன.

ஆசியாவின் பல பிரதேசங்களில், அரசியல், இன, சில வேளைகளில் சமய முரண்பாடுகள், பெண்களும் பிள்ளைகளும் இடம் பெயர்வதற்குக் காரணமாக இருந்துள்ளன. அரசியற் திரமின்மை, இயற்கை அனர்த்தங்கள் என்பன, பெண்களினதும் பிள்ளைகளினதும் ஊறுபடத்தக்க நிலையை மேலும் தீவிரப்படுத்தி, அவர்கள் கடத்தப்படுவதிலும் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதிலும் முடிந்துள்ளன. படை வலி ஆட்சிக் கொள்கையும் உள் நாட்டு அமைதியின்மையும், பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களில் பெண்களும் பிள்ளைகளும் பாலியல் தொந்தரவிற்கும் வன்புணர்ச்சிக்கும் ஆளாக்கப்படுதலைத் தூண்டிவிட்டுள்ளது. பல பெண்கள் விதவைகளாகியுள்ளனர்; பிள்ளைகள் அநாதைகளாகியுள்ளனர்; இவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். ஆசியப் பிராந்தியத்தின் பல பகுதிகளில் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் வெறுப்பூட்டகின்ற பால் நிலைச் சமமின்மைகளை மேலும் கூர்மையாக்கியுள்ளது. ஆட்களைக் கடத்துதல், விபச்சாரம், பாலியல்

அடிப்படையிலமைந்த உல்லாசப் பயணத்துறை, அஞ்சல் மூலமாகப் பெண்களைக் கோரிப் பெறும் வியாபாரத்துறை, இழிபொருள் ஒவியம், இலக்கியம், திரைப்படம், பாலியற் களியாட்டம் என்ற இவை யாவும், பிரதானமாக ஆசியாவில், பாலியற் சமமின்மையை உலகளாவியதாக்குவதற்கு வழிவகுத்துள்ளன. இந்நிலை ஆழமாக வேரூன்றி, விரிவடைந்து வருகின்றது.

பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எதிரான இவ்வத்துமீறல்களை ஒழிக்கும் நோக்கத்துடன், பங்களாதேஷில் டாக்காவில் அமைந்துள்ள, பெண்களைக் கடத்துதலுக்கெதிரான கூட்டமைப்பு (CATW), *1998*, ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பிராந்திய மகா நாடொன்றை ஒழுங்கு செய்தது; *1999* ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உலகளாவிய மகா நாடொன்றை நடத்தியது. இதில் 'பீஸ்' இயக்கமும் பங்குபற்றியது.

இத்தகைய மனித உரிமை மீறல்களை முடிவிற்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளைப் பலப்படுத்துவதற்காக, பிராந்தியச் சமுதாயத்திற்கான பொதுக் கருமச் செயற் திட்டம் ஒன்று, 'டாக்கா பிரகடனம்' என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்டது. சகல விதமான பாலியற் துஷ்பிரயோகங்களும் பெண்களினதும் பிள்ளைகளினதும் கௌரவத்தைத் தட்டிப் பறிக்கின்றனவென்று இப்பிரகடனம் மீள வலியுறுத்திக் கூறியுள்ளது. பெண்களினதும் பிள்ளைகளினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேலும் மேம்படுத்துவதற்குமான திடமான பரிந்துரைகளை இப்பிரகடனம் அரசாங்கங்களுக்குச் சமர்ப்பித்துள்ளதுடன், பாலியல் அடிப்படையிலமைந்த கடத்தலை அல்லது விபச்சாரத்தைச் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளும் எந்தவொரு சட்டத்தையோ, கொள்கையையோ நிராகரிக்கும்படியும் பெண்களையும் பிள்ளைகளையும் வேறுபாடு காட்டி நடத்துதல், துஷ்பிரயோகஞ் செய்தல் என்பவற்றை ஊக்குவிக்கும் சகல சமய விதிகளையும் நிராகரிக்கும்படியும் பரிந்துரைத்துள்ளது. நமக்கும் இனிவரும் சந்ததியினருக்கும் இரக்கம் மிக்கதோர் உலகத்தை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டு, இத்தகைய மனித உரிமை மீறல்களுக்குள் அகப்படாமல் தப்பும் இலக்கை அடைவதற்காக, கடத்தப்படும் பெண்கள், பிள்ளைகளுக்காகவும் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படும் பெண்கள், பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்தும் பணியாற்றுவதெனப் பங்குபற்றுநர்கள் சங்கற்பம் பூண்டனர்.

இணைப்பு நான்கு

# பிள்ளைகளையும் இளைஞரையும் யுவதியரையும் பாதுகாப்பதில் ESCAP வகிக்கும் பங்கு

பிள்ளைகளினதும் இளைஞர், யுவதியரதும் செயற்பாடுகளுக்கு ஆசிய, பசி∴பிக் பிராந்தியங்களில் ESCAP, ஒரு மையமுனையாக உள்ளது. தென் ஆசியாவிலும் பசி∴பிக் பிராந்தியத்திலுமுள்ள பன்னிரண்டு நாடுகளில், பாலியற் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும், குறிப்பாக, பிள்ளைகள், இளைஞர், யுவதியருக்கான பல்வேறு தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ESCAP, தற்பொழுது நடைமுறைப்படுத்துகின்றது. பாலியற் துஷ்பிரயோகத்திற்கும் வியாபார ரீதியிலமைந்த பாலியற் துஷ்பிரயோகத்திற்கும் ஆளாகியவர்களினுடைய தேவைகளையும் அத்தகையோருக்குக் கிடைக்கக்கூடிய சேவைகளையும் மதிப்பீடு செய்வதற்கான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்கு உதவுவதும் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் அடங்கும்.

தலையீடுகளை விருத்தி செய்வதற்கு அடிப்படையாக அமையக்கூடிய வகையில், இலங்கையில், பாலியற் துஷ்பிரயோகத்திற்கும் வியாபார ரீதியிலமைந்த பாலியற் துஷ்பிரயோகத்திற்கும் ஆளாகியோருக்குக் கிடைக்கக்கூடிய தேவைகளையும் சேவைகளையும் பண்பு ரீதியாக மதிப்பிடுவதற்கு ஓர் ஆராய்ச்சியை மேற்கொள்ளும்படி, *1998* இல், ESCAP, 'பீஸ்' இயக்கத்தைப் பணித்தது. தகுதிவாய்ந்த ஆராய்ச்சியாளர்கள், ஐந்து மாத காலத்தில் சேகரித்த தரவுகளையும் செவ்வி காணல்களையும் அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி அறிக்கை, *1999* ஆம் ஆண்டு ∴பெப்ரவரி மாதம் நடைபெற்ற, தேசிய மனிதவள அபிவிருத்திச் செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது. ESCAP அலுவலர்கள் இருவரும் அரசாங்கத் துறையையும் அரசாங்கச் சார்பற்ற அமைப்புகளையும் சார்ந்த 40 பங்குபற்றுநர்களும் இச்செயலமர்விற் கலந்துகொண்டனர்.

இவ்விடயம் பற்றிக் கவலை கொண்டு, அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அரசாங்கச் சார்பற்ற அமையங்களினதும் அரசாங்கத் துறையினதும் காத்திரமான பல்பக்க முயற்சிகளினூடாக, இலங்கையில், பாலியற் துஷ்பிரயோகத்தையும் பாலியல் ரீதியாகப்

பிள்ளைகளைச் சூறையாடுதலையும் ஒழிப்பதை, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாராய்ச்சி, தனது இறுதி இலக்காகக் கொண்டிருக்கின்றது. இன்று இலங்கையிலுள்ள பிள்ளைகளின் தொகை, ஏறத்தாழ 6.5 மில்லியனாகும்.அதாவது, இது, இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 35.4% ஆகும். 'பிரத்தியேமாக, கடினமான சூழ்நிலைகளில் வாழும் பிள்ளைகள்' என்று வகைப்படுத்தப்படக்கூடிய ஏறத்தாழ 500,000 பிள்ளைகள் இலங்கையிலிருக்கின்றார்கள். இலங்கையின் பிள்ளைகளின் சனத்தொகையில், ஏறத்தாழ 5 சதவீதத்தினர் வலது குறைந்த பிள்ளைகளாவர்; இலங்கையிலுள்ள தொழில் புரியும் பிள்ளைகள் அல்லது பிள்ளைத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட அரை மில்லியனாகும்; சுமார் 15,000 பிள்ளைகள் தெருப் பிள்ளைகளாகவுள்ளனர்; ஆயுதப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் தொகை, கிட்டத்தட்ட 500,000 ஆகும்; வர்த்தக ரீதியான பாலியல் துஷ்பிரயோகத்துறையில் ஏறத்தாழ 30,000 பிள்ளைகள் (உள்ளூர்த் துஷ்பிரயோகம் உட்பட), ஈடுபட்டிருப்பதாக மதிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இருள் கவிந்த, நம்பிக்கையற்ற ஓர் எதிர்காலமே பிள்ளைகளுக்கு உண்டு என்பதை இப்புள்ளி விபரங்கள் காட்டி நிற்பது உண்மையே. எனினும், பிள்ளைகளுக்கு அனுகூலமாக அமையுமாறு மாற்றுவதற்கு, இதை ஒரு சிறந்த சந்தர்ப்பமாகப் பயன்படுத்தலாம் என்று நாம் நம்புகிறோம். மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வாராய்ச்சி அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில், பிரத்தியேகமாகக் கடினமான சூழ்நிலைகளில் வாழும் பிள்ளைகள் துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு மட்டுமன்றி, இவர்கள் வியாபார ரீதியாகப் பாலியல் சூறையாடலுக்கும் பாலியற் துஷ்பிரயோகத்திற்கும் உட்படுத்தப்படுவதை ஒழித்துக்கட்டுவதற்கும் எத்தனிப்பதற்கு, பிள்ளைகளின் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயம் (UN-CRC), இலங்கை அரசாங்கத்தின், பிள்ளைகளுக்கான தேசியச் செயற்பாட்டுத் திட்டம், பிள்ளைகளுக்கான பட்டயம், இலங்கை அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட பிள்ளைகள் பற்றிய அதிகாரச்சட்டம், 1998 இல், பாராளுமன்றச் சட்டமொன்றினால் நிறுவப்பட்ட தேசிய பிள்ளைப் பாதுகாப்பு அதிகார சபை என்பன கருவிகளாகவும், சாதனங்களாகவும் அமையும்.

ஷேர்லி ஜே. எஸ். பீரிஸ்,
செயலாளர்/'பீஸ்'

இணைப்பு ஐந்து

# 'பீஸ்' இயக்கத்தின் தனித்தன்மை வாய்ந்ததொரு செயற் திட்டம் : பியூரோ இன்டர்நஷனல் கத்தலிக் டி லோஃபோ (BICE) கூட்டு நிகழ்ச்சித் திட்டம்

இது, இலங்கையில், பாலியல் ரீதியாகப் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்வதைத் தடுப்பதற்கும் பாலியல் ரீதியாகப் பிள்ளைகள் துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதிலிருந்து அவர்கள் மீட்சி பெறுவதற்குமான சமுதாய அடிப்படை நிகழ்ச்சித் திட்டமாகும். இலங்கையில், பாலியல் ரீதியாகப் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்தல் பற்றிய விடயத்தில், 'பீஸ்' இயக்கம் பெற்றுள்ள கணிசமான அளவு நிபுணத்துவத்தைக் கொண்டு, இவ்விடயத்தில் மேலும் மேம்பாட்டை எய்துவதற்காக இந்நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

BICE ஒரு சர்வதேச அமைப்பாகும். இது, சர்வதேசக் கத்தோலிக்கப் பிள்ளைப் பணியகத்தின் ஃபிரான்ஸியக் கிளையாகும். சமுதாய அடிப்படையில் திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல், மதிப்பீடு செய்தல் என்பவற்றையும் முகாமித்தலையும் மேம்படுத்துவதில் இது நிபுணத்துவம் பெற்றுள்ளது. திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல், மதிப்பீடு என்பவற்றின் ஒவ்வொரு கட்டத்திலும், இது குடும்பங்களையும் சமுதாயத்தையும் ஈடுபடுத்துகின்றது.

சமுதாயங்கள் பொறுப்பபை ஏற்றுக்கொண்டால் மட்டுமே, பிள்ளைகள் சம்பந்தப்பட்ட எல்லா விதமான பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களையும் தடுக்க முடியும். துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களை ஓரங்கட்டாது, குடும்பங்களிலிருந்து பிரிக்காது, அவர்களைச் சுகவீனமுற்றோர் என்ற விதத்தில் நடத்தாது, அவர்களுக்கு உகந்த சமுதாயப் பராமரிப்பு வழங்கப்பட முடியும் என்ற நம்பிக்கையே 'பீஸ்'/BICE நிகழ்ச்சித் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

1998, மே மாதம் கொழும்பில் இடம் பெற்ற ஒரு வாரச் செயலமர்வுடன் 'பீஸ்'/BICE நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1998, ஜூன் மாதத்தில் நிகழ்ச்சித் திட்டம் செயற்படத் தொடங்கியது. சமுதாயத்தை இயங்கச் செய்பவர்கள் எழுச்சியூட்டுபவர்கள் என்ற புதிய பதவிகளுக்குப் பங்குபற்றுநர்களை ஆயத்தப்படுத்துதல், நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் தெளிவுப்படுத்துதல், ஒவ்வோர் அமைவிடத்திலும், நிகழ்ச்சித் திட்டத்தின் விருத்திக்காக, முதல் ஆறு மாதங்களிலும் பின்பற்றப்பட வேண்டிய செயன்முறை என்பவையே செயலமர்வின் பிரதான இலக்குகளாக அமைந்தன.

செயலமர்வில் பங்குபற்றியோர்களினால் விருத்தி செய்யப்பட்ட பொன்னான விதிகள், சகல செயற்பாடுகளையும் உள்ளடக்குவனவாக அமைந்துள்ளன. இவை, பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றன:

1. அனைத்துச் செயற் திட்டங்களும்/நிகழ்ச்சித் திட்டங்களும் சமுதாயத்திற்குச் சொந்தமாகவும், சமுதாயத்தினால் முகாமைப்படுத்தப்படுவனவாகவும் அதன் தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்லப்படுவனவாகவும் இருத்தல் வேண்டும்.

2. சமுதாயத் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கும், இயக்குவதற்கும், சமுதாயத்தைக் கட்டுப்படுத்துவதற்கன்றி அதற்குத் துலங்குவதற்குமே இயங்கச் செய்பவர்கள் இருப்பார்கள்.

3. சமுதாயத்தினால் வரையப்பட்ட, சகல மட்டங்களிலுமான தேவைகளுக்குத் துலங்குவனவாக, சகல நிகழ்ச்சித் திட்டங்களும் கருமங்களும் அமைய வேண்டும்.

4. எதிர்நோக்கும் கஷ்டங்களுக்கிடையில் தப்பிப்பிழைத்து வாழும் வல்லமையை மட்டுமன்றி அக்கஷ்டங்களுக்கு நடுவே வெற்றியடையும் வல்லமையும் பெற வேண்டும் என்ற எண்ணக்கரு, சகல செயற்பாடுகளிலும் பிரயோகிக்கப்பட வேண்டும்.

5. தனி ஆட்களிடமும் சமுதாயத்திலும் உள்ள பிரச்சினைகள் என்ற வகையில் கருத்தூன்றாது, வலிமைகளை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு, நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்பட வேண்டும்.

6. நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்பாடுகளும் சகல பிள்ளைகளுக்கும் உதவுவதாக அமைய வேண்டும்; துஷ்பிரயோகங்களைத் தடுக்க வேண்டும்; துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும்.

7. துஷ்பிரயோகத்திற்குள்ளான பிள்ளைகள், தனித்தனியாக எடுக்கப்பட்டுச் சுட்டிக் காட்டப்படலாகாது; ஓரங்கட்டப்படக்கூடாது; சுகவீனமுற்றவர்களாகக் கணிக்கப்பட்டு நடத்தப்படலாகாது.

8. வயது வந்தோர், பிள்ளைகள் சொல்வதைச் செவிமடுத்துச் செயற்படல் வேண்டும்.

9. 'தாயிலிருந்து தாய்க்கு', 'பிள்ளையிலிருந்து பிள்ளைக்கு' என்ற அடிப்படையிலமைந்த நிகழ்ச்சித் திட்டங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

10. பிள்ளைகளும் குடும்பங்களும் மதிக்கப்பட வேண்டும்.

11. கௌரவத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட வேண்டும்.

12. ஒவ்வொரு பிள்ளைக்கும், அதனுடைய வாழ்வில், முக்கியத்துவம் பெற்ற ஒருவரேனும் இருக்க வேண்டியது அத்தியாவசியமான தேவையாகும்.

ஒப்பிடத்தக்க, எனினும், வித்தியாசமான ஆறு வேலைத்திட்டங்களை, ஆறு அமைவிடங்களில் செயற்படுத்துவதற்கு இச்செயன்முறை வழி செய்துள்ளது. மேற்பார்வை செய்யும் நெறியாளரும் நிர்வாகியும், சமுதாய நெறியாளர்களிடனூடாகச் சமுதாயங்களுக்கு ஆதரவையும் வழிகாட்டலையும் ஒழுங்கு செய்கிறார்கள். 'பீஸ்' இயக்கம் இப்பணியைக் கண்காணிக்கின்றது.

ஆறு மாதங்களாக நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், 1998, ஆம் ஆண்டு, நொவெம்பர் மாதம், BICE இன் மதியுரையாளர் ஷேர்லி ஃபோஸாட் இச்செயற் திட்டத்தை மதிப்பீடு செய்தார். இச்செயற் திட்டத்தின் பிரதான குறிக்கோள்களின் அடிப்படையில் இம்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. அவை பின்வருமாறு:

1. பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்தல் தொடர்பான சகல வடிவங்களையும் தடுத்து நிறுத்துவதற்கும் அவற்றிற்காளானோரை அவற்றிலிருந்து மீட்பதற்குமாகத் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிகளை, பீஸ்/BICE என்பன கூட்டாகச் சேர்ந்து, விரிவாக்குவதற்கு வேண்டிய ஒரு செயற் திட்டத்தை விருத்தி செய்தல்.
2. பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்தல் தொடர்பான சகல வடிவங்களையும் அழித்தொழிக்கும் நோக்கத்துடன், அமைவிடம், நிகவுகளின் அளவு என்பவற்றிற்குப் பொருந்தும் விதத்திலும் சம்பந்தப்பட்ட சமுதாயத்தினரின் அறிவு, திறன்கள் என்பவற்றிற்கேற்பவும் பற்பல பணிகளை விருத்தி செய்தல்.
3. பாதிக்கப்பட்டோரை நோயாளிகள் போன்று நடத்தாமலும், சமுதாயத்தில் அவர்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையை மேலும் மோசமாக்காமலும் அவர்களின் வலிமையை

அதிகரிக்கச்செய்து, கஷ்டமான நிலைகளுக்குச் சார்பான விதத்திலும் ஆக்கபூர்வமான வழிகளிலும் அவர்களைத் துலங்கச் செய்யும் பொருட்டு, உள்ளக வளங்களிலிருந்து பலத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றலைப் பிள்ளைகளிடமும் வயதுவந்தோரிடமும் சமுதாயங்களுள்ளும் வளர்ப்பதற்கும் சமுதாயத்திற்குப் பங்களிப்புச் செய்வதற்கு அவர்களிடமுள்ள உள்ளார்ந்த சாத்தியப்பாட்டைக் கணித்து, உதவும் வகையில், பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவை வழங்குவதற்கும், மீட்சியைக் கொடுப்பதற்கும் பிரத்தியேகமான நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல்.

4. நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்வதற்கு, வாண்மைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கும் சமுதாயத் தலைவர்களுக்கும் பெற்றோருக்கும் இளையோருக்கும் பயிற்சி அளித்து ஆதரவு நல்குதல், பிள்ளைகளைப் பால் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்தலைத் தடுத்தல், அதற்குள்ளானோரை அதிலிருந்து மீட்டல் என்பவற்றிற்குப் பொருந்துவதாக இது அமைய வேண்டும்.
5. சனநாயக சமூகமொன்றின் முழுமையான உறுப்பினர்கள் என்ற வகையில், பிள்ளைகளின் உரிமைகளும் பொறுப்புக்களும் பற்றிய கல்வியை விருத்தி செய்வதற்கு ஒரு வழியாக, பிள்ளையின் உரிமைகள் சமவாயத்தின் *12* ஆம் *13* ஆம் *14* ஆம் உறுப்புரைகளுக்கமைய, பிள்ளைகள் கூறுவதைச் செவிமடுப்பதற்கும் அவர்கள் செயலார்வத்துடன் பங்குபற்றுவதை மேம்படுத்துவதற்கும் நேரத்தை ஒதுக்குதல்.

அவதானிக்கப்பட்ட மாற்றங்களை, மதிப்பீடு, மையமாகக் கொண்டிருந்தது. பிள்ளைகளின் நடத்தையில் திருத்தம், தாம் சிந்திப்பதைக் கூறும் வல்லமையை அவர்கள் பெற்றிருத்தல், குடும்பத்தில், முன்னரைவிடக் கூடிய ஒற்றுமை நிலவுதல், சமுதாயத்தில் சுய உதவிச் செயற்பாடுகள் இடம் பெறுதல், கழிவறைகளை உகந்த விதத்தில் பயன்படுத்துதல், பாடசாலை வரவில் திருத்தம் காணப்படுதல், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் பற்றி அதிகரித்த விழிப்புணர்வு, துஷ்பிரயோகம் பற்றிப் பேசுதல், துஷ்பிரயோகஞ் செய்யப்பட்ட பிள்ளைகளுக்குச் சமுதாயத்தில் பாதுகாப்பும் ஆதரவும் வழங்கப்படுதல் என்பன போன்றன இம்மாற்றங்களுக்குச் சான்றாக அமைகின்றன.

டிரில் குறே,

பிரதான நெறியாளர்,

'பீஸ்'/ BICE செயற் திட்டம்

இணைப்பு ஆறு

# பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்வோர் செயற்படும் விதம்

சிறுவர்கள் தொடர்பான விபச்சாரமும் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்தல் தொடர்பான செயற்பாடுகளும், பின்வருவன போன்ற, பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு தலைவர், (இவர், வழமையாக ஓர் உள்ளூர்க்காரராக இருப்பார்; அல்லது உள்ளூர்த் தொடர்புகளைக் கொண்ட ஒரு வெளிநாட்டவராகவும் இருக்கலாம்) வழங்கலைக் கட்டுப்படுத்துதல் – விபச்சாரத்திற்கு ஆட்களை வழங்குதல்.

(ஆ) தனிப்பட்டோர், தனித்தனியாகத் தம்மை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குதல்.

(இ) பாலியல் தேவைகளுக்காக வரும் உல்லாசப் பயணிகளுக்கு, குடும்பங்கள், தமது வீடுகளிலேயே தங்கும் வசதியை அளித்தல். இவர்கள், பிள்ளைகளை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குதல்.

(ஈ) உள்ளூர்க்காரர்களினால் பராமரிக்கப்படும் வீடுகளைக் கட்டுவதற்கும் பேணுவதற்கும் வேண்டிய பணத்தைத் தலைவர்கள்/முகவர்கள் கொடுத்தல்.

(உ) தங்ககங்களும் விருந்தினர் விடுதிகளும் பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்யும் உல்லாசப் பயணிகளுக்கென்றே நடத்தப்படுதல்.

இந்நிலை, மேலே (ஈ) பகுதியிற் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. இது, இதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் வர்த்தகத் தோழர்களுக்கும் மலிவானதாகவும், அதிகரித்த நம்பிக்கையுள்ளதாகவும் எப்பொழுதுமே வழங்கல் தடையின்றிக் கிடைப்பதாகவும் அமைகின்றது. அத்துடன், குறிப்பாக, முழுப்பாலியல் செயற்பாடுகள் இடம்பெறும் பொழுதும் படப்பிடிப்பு நடைபெறும் பொழுதும் தனிமையும் பாதுகாப்பும் பேணப்படலாம்.

பாலியல் நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்ட உல்லாசப் பயணிகள், தாம், சாதாரண சுற்றுலாப் பயணிகளுடன் கலந்து உலவினால், கவனிப்பிற்கும் கண்டுபிடிக்கப்படுவதற்கும் இலக்காகாமல் தப்பித்துக்கொள்ளலாம் என்பதே, இவர்கள் கடற்கரை சார்ந்த சுற்றுலாப் பயண இடங்களிலும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஏனைய பிரதேசங்களிலும் சென்று குவிவதற்குக் காரணமாகும்.

## செயற்படும் முறை

பாலியல் நோக்கத்துடன் நம் நாட்டிற்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் – இவர்கள், கிரமமாக விஜயம் செய்யாதவர்களாக இருக்கலாம் – சில சமயங்களில் தம்முடைய நண்பர்கள், அல்லது தமக்கு அறிமுகமானவர்கள், அல்லது கடற்கரைகளிலோ, விமான நிலையத்திலோ, பஸ் தரிப்பு நிலையங்களிலோ, உல்லாசப் பயணிகள் செறிந்துள்ள பட்டணங்களிலோ தாம் சந்தித்த தரகர்கள் போன்றோரால் விதந்துரைக்கப்படும் தங்ககங்கள், விருந்தினர் விடுதிகள், போன்றவற்றிற் தங்குவர். பெரும்பாலான தனியார் தங்ககங்களிலிருந்தும் விருந்தினர் விடுதிகளிலிருந்தும் இத்தரகர்கள் தரகுக்கூலியைப் பெறுவார்கள் அல்லது செயற்பாட்டிற்கு அறவிடப்படும் தொகையில் தமது தரகுக்கூலியையும் சேர்த்துக்கொள்வார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தரகர், ஒரு 'தலைவர்' போல இயங்குவார். இவர், பிரதேசத்தின் 'பின்னணி'யைத் தெரிந்து கொண்டவராகவும் யார் பெறப்படலாம், எது பெறப்படலாம் என்பன போன்ற விபரங்களைச் சரிவரத் தெரிந்து வைத்துள்ள தொடர்பு கொள்ள வேண்டிய மனிதராகவும் (முகவர்) இருப்பார்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விருந்தாளி, 'தலை'வருடன் நேரடியாகத் தொடர்பு கொள்வார்; அல்லது, ஏனைய தரகர்கள் அவரை அணுகி வந்து, அவரிடம் 'உன்னத' அல்லது 'மயக்கப் பொருள்' கொண்ட சமர்ப்பிப்பொன்றை முன்வைக்கலாம். வழங்கப்படும் போதை வஸ்துக்களை ஏற்றுக் கொள்வதோ மறுப்பதோ சுற்றுலாப் பயணியின் விருப்பமாகும்; அல்லது அதற்கு ஒரு சிறுவனை அல்லது சிறுமியைக் கொண்டு வரும்படி கோரலாம். சில பிரதேசங்களில் பிள்ளைகளையும் போதை வஸ்துக்களையும் வழங்குவதில் சிறப்புத் திறமையுடன் இயங்குதல், துணை வியாபாரமாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

பெரும்பாலான தலைவர்களும் தரகர்களும் தனி ஆட்களும், எப்பொழுதுமே சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்திலுள்ளதை 'வாசித்து', எவர், எதைத் தேடுகின்றார் என்பதை அறிந்துகொள்ளும் வல்லமை பெற்றவர்களாவர் என்பது நமது ஆய்வுகளின் போது வெளியாகியது. ஆரம்பத்தில் அவர்கள் தரத் தயாராக இருப்பது,

'அதிக'மாக இருந்தால், 'பொருள்கள்' வழங்கப்படுகின்றன. அல்லது வழங்குநருடன் தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது. இதைத் தொடர்ந்து ஏற்படும் உரையாடலின் பயனாக நட்பு உருவாக்கப்படுகின்றது. சுற்றுலாப் பயணியின் கோரிக்கை உண்மையானதெனச் செயற்படுவோர் ஏற்றுக்கொண்டால் மட்டுமே, தகவல்கள் சுதந்திரமாகப் பரிமாறப்படும். சுற்றுலாப் பயணிகளுட் பெரும்பாலானோர் ஜேர்மனியர்களாக இருப்பதனால், செயற்படுபவர்களுட் பலர் ஜேர்மானிய மொழியை சரளமாகவோ, ஓரளவோ பேசுவார்கள். ஃபிரெஞ் மொழி அறிவு அல்லது ஃபிரெஞ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளின் அறிவும் கடற்கரைகளில் செயற்படுவோரிடையே நிலவுகின்றது.

சுற்றுலாப் பயணி கணிசமான காலம் தங்கியிருந்தால் அல்லது அடிக்கடி விஜயம் செய்பவராக இருந்தால், பெண்களை வழங்கும் தரகருக்கும் பயணிக்குமிடையில் ஒரு பலமான நட்பு உருவாக்கப்படுகின்றது. இதன் பின்னர், தனியார் காணியொன்றை வாங்குவதற்கான ஆலோசனை முன்வைக்கப்படும். இதன் பயனாக, சம்பந்தப்பட்டோர் விநோதமாக நேரத்தைக் கழிப்பதற்காக அல்லது இலாபத்திற்காக இவ்வியாபாரத்தைக் கொண்டு நடத்துவர். பாலியற் சுற்றுலாப் பயணி ஒருவர், அடிக்கடி விஜயஞ் செய்பவராக இருந்தால், அல்லது, நாட்டில், ஏறத்தாழ நிரந்தரமாகவே வதிபவராக இருந்தால், அவரிடம் போதிய அளவு நிதியும் இருந்து இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபாடும் இருந்தால், அவர் காணியை வாங்குவதற்கு – பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உள்ளூரில் நியமிக்கப்பட்டவரின் பெயரில் – பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்வார்.

இத்தகைய ஆலோசனைகள், சில சமயங்களில், செல்வம் மிக்க சுற்றுலாப் பயணிகளால் முன்வைக்கப்படுகின்றமையால், அவர்கள் வீடுகளைக் கட்டிக்கொடுக்கவோ அல்லது வாங்கிக் கொடுக்கவோ கூடும்; அல்லது, அவர்கள், விருந்தினர் மனைகளையோ, வாகனங்களையோ நட்புக் காரணமாக அல்லது கருணை காரணமாகத் தனி ஆட்களுக்கு வாங்கிக்கொடுக்கவும் முடியும். எனவே, முடிவுகளுக்கு வருவதற்கு முன்னர், இத்தகைய இடங்களைக் கவனமாக அவதானித்தல் உகந்ததாகும்.

ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பது இங்குள்ள பிரச்சினையாகும். செயற்பாடு, எவ்வளவிற்குப் பெரிதாக இருக்கின்றதோ, அவ்வளவிற்குக் காணி செல்வக்கொழிப்புள்ளதாகவும் பாதுகாப்பு மிக்கதாகவும் அமையும். அது, பெரும்பாலும் ஒதுக்குப்புறமாக இருப்பதுடன், உயர்ந்த சுவர்களாற் சூழப்பட்டதாகவும் காவல் நாய்களைக் கொண்டதாகவும் சிக்கார்ந்த பாதுகாப்பு

முறைமைகளுடன் கூடியதாகவும் இருக்கும். நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் இத்தகைய பல இடங்கள் உண்டு.

பிள்ளைத்துஷ்பிரயோகிகள், சிலர், பாடசாலை அதிகாரிகளை அணுகி, விளையாட்டில் முன்னேறுவதற்காகத் தாம் வறிய பிள்ளைகளுக்கு உதவ முன்வந்திருப்பதாகக் கூறுவர் என்பது, இலங்கையில் சிறுவர் விபச்சாரம் பற்றி மேற்கொள்ளப்பட்ட அளவாய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இவ்வாறு, உத்தியோகபூர்வமான விதத்தில் இவர்கள், சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், சிறுவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களையும் பொருட்களையும் வாங்குவதற்காக, சிறுவர்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பங்களை, பிள்ளைத் துஷ்பிரயோகிகள் உருவாக்கிக் கொள்வர். இச்சிறுவர்கள், அவர்களுடைய தற்காலிக வாசஸ்தலங்களுக்கு அல்லது தங்கக அறைகளுக்கு அழைக்கப்பட்டு, இயல்பல்லாத பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு, ஆசை காட்டி ஈர்க்கப்படுகின்றனர்.

பிள்ளைத் துஷ்பிரயோகிகள் இச்சிறுவர்களின் குடும்பங்கள் விடுமுறைகளைக் கழிப்பதற்காக வாடகை வீடுகளை எடுத்துக்கொடுத்தல் அல்லது வீடுகளைக் கட்டிக் கொடுத்தல் போன்ற சந்தர்ப்பங்களும் உண்டு. இவ்விதமாக, இவர்களின் தாராளத் தன்மைக்கு இவர்களுக்குக் கடமைப்படும் பெற்றோர்கள், தமது பிள்ளைகளின் பாலியல் நடவடிக்கைகளைக் கண்டும் காணாதது போல் இருந்துவிடுகிறார்கள். 'நமது புதல்வர்கள் கருத்தரிக்க மாட்டார்கள்' என்கிறார்கள் அவர்கள்.

இப்பாதுகாப்பான இல்லம், கடற்கரைப் பிரதேசத்தில் அல்லது கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் அல்லது மலைப்பிரதேசத்தில் கட்டப்பட்ட, சகல சொகுசுகளையும் கொண்ட ஓர் அழகிய பங்களாவாக இருக்கலாம். இது, உள்ளூர் பாதுகாவலர்களுடன் கூடிய உச்ச அளவு பாதுகாப்பையும் கடி நாய்களையும், சூழவும் பத்து அடி உயரமான சுவர்களையும் பாரிய நுழை கதவைக் கொண்டதாகவும் இருக்கலாம். நகரத்தில் அல்லது பட்டணத்தில் அல்லது கிராமத்தில் மக்கள் குடியிருக்கும் பிரதேசங்களில் அமைந்துள்ள டாம்பீகமற்ற ஓர் இல்லமாகவும் இருக்கலாம். அது, ஆதரவாளரினாற் கட்டப்பட்ட துணை வீடாக இருக்கலாம். இவர் இலங்கையில் 'ஆசை மாமா' என அழைக்கப்படுகிறார். இது, அவருக்கென்றே பிரத்தியேகமாகப் பேணப்படுதவதாக இருக்கலாம். அவர் தொடர்ந்து இலங்கையிலிருந்தவாறு சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தலாம். இது பற்றித் தற்போது (1994) சட்ட அமுலாக்க உயர்மட்ட அலுவலர் கூட,

எதையும் பெரிதாகச் சாதித்து விடமுடியாதிருந்தது. ஏனெனில், நமது நாட்டின் பொருளாதாரத்தில், மிக முக்கியமான துறைகளில், ஒன்றாகச் சுற்றுலாத் துறை திகழ்கின்றது. 'யார், ஒரு வெள்ளையரை – ஒரு சுற்றுலாப் பயணியை – முன்வந்து கைது செய்ய முடியும், என்று, இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு பொலீஸ்காரர் கேட்டார்.

பிரச்சாரம் செய்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை (*1991 – 1993*) அதிக அபாயமுள்ள சமுதாயங்களுக்கிடையில் நடத்துதல் என்பவற்றின் மூலம், நாம், எப்படியோ அசாத்தியம் என்றெண்ணக்கூடியதை எய்தியிருக்கிறோம். சுற்றுலாப் பயணிகள், (இவர்கள் நம் நாட்டிற்கு வந்து, சுற்றுலா 'வீஸா' வுடன் சில மாதங்கள் வரை நம் நாட்டில் தங்கியிருக்கின்றார்) பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்தமைக்காகக் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் (*1994*) நிறுத்தப்பட்டனர். தற்பொழுது, 'நடப்பவ'ற்றைக் கவனமாக அவதானிக்கும் மக்களும் இவற்றைக் கண்டு இவற்றை எதிர்க்கும் சில மக்களும், சட்ட அமுலாக்க அதிகாரிகளிடம் முறையீடுகளைச் செய்து வருகிறார்கள். இவற்றிற்காளாகின்ற, வயதில் சற்றுக்கூடிய சிறுவர்களும் சிறுமிகளும் கூட எதிர்த்து நிற்க ஆரம்பித்துள்ளார்கள்.

இருந்தபோதிலும், உள்ளூர்ப் பிள்ளைத் துஷ்பிரயோகக்காரர்களும் வெளிநாட்டு, பிள்ளைத் துஷ்பிரயோகக்காரர்களும், சமுதாயத்திலுள்ள ஏனையோரினால் பாதுகாக்கப்படும் வரை, இவர்களுடைய பலம் மிக்க தேசிய வலையமைப்புக்களும் சர்வதேச வலையமைப்புக்களும் அவர்களுக்கு ஆதரவு வழங்கும் வரை, பாதுகாப்பற்ற, எவ்விதப் பாவமும் அறியாத பிள்ளைகளுக்கெதிரான கொடிய செயற்பாடுகள் தொடரும்.

டெஸ்மன்ட் டி சில்வா,
'பீஸ்' தொண்டர்.

# பிள்ளை விபச்சாரம் இடம்பெறக்கூடிய பெரும் அபாயம் நிலவும் பிரதேசங்களில் வாழும் தாய்மாருக்கு ஆலோசனைக் கல்வி வழங்குதல்

சுற்றுலாக் கூட்டுத் தொகுதிகளை அண்டிய பகுதிகளில் வாழும் ஓர் ஏழைப் பெண்ணுக்குத் தனது பத்து வயது மகன் வெளி நாட்டவர் ஒருவருடன் சேர்ந்து செல்வது, அச்சமூட்டும் ஒரு விஷயமல்ல. ஏனெனில், அவருடன் செல்வதன் விளைவாகத் தன் மகன், பாலியல் ரீதியாகக் கடத்தப்படும் எச்ஐவி/ எயிட்ஸ் தொற்றைப் பெறக்கூடிய அபாயத்தை எதிர்நோக்குகின்றான் என்பது அவருக்குத் தெரியாது. நாள் முடிவில் தனது மகன் வீட்டிற்குக் கொண்டு வரும் 100 ரூபாவே அவருக்கு முக்கியம். அதை, அவன் எப்படிப் பெற்றான் என்பது பற்றி அவருக்குக் கவலை இல்லை. விபச்சாரத்திற்கு இடைவிடாது பிள்ளைகளை வழங்குவதற்கு மறைமுகமாக உதவும் பெற்றோரின் மரத்துப்போன மனப்பாங்கு காரணமாகவே, பிள்ளை விபச்சாரம் தொடர்பாகப் பெரும் அபாயம் நிலவும் பிரதேசங்களில் வாழும் தாய்மாருக்கு ஆலோசனைக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியது அவசியமென்றும் உண்மையில் தவிர்க்க முடியாததென்றும் கருதப்பட்டது.

பிள்ளைகள் எதிர்நோக்கும் சுகாதார இடையூறுகள் பற்றி மட்டுமன்றி, 'பிள்ளை விருத்தி' என்ற முக்கிய விஷயம் தொடர்பாக, மரபுவழிவந்த தப்பான எண்ணங்களால் ஏற்படக்கூடிய அபாயங்களைப் பற்றியும் மகிழ்வான, ஆரோக்கியமான இளைய பரம்பரை ஒன்றை உருவாக்கும் பொருட்டுப் பிள்ளைகளின் மனவெழுச்சித் தேவைகளையும் உடல் ரீதியான தேவைகளையும் பூர்த்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக்கூறுவதில், 'பீஸ்' இயக்கம், தான் ஆரம்பித்துள்ள ஆலோசனைக் கல்வி வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாகக் கவனஞ் செலுத்துகின்றது.

ஆரம்ப நடவடிக்கையாக, தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில், வீடு வீடாகச் சென்று சமூக–பொருளாதார அளவாய்வொன்றைத் தொண்டர்கள் நடத்துவர்.

இதற்காக வினாக்கொத்தொன்று பயன்படுத்தப்படும். இவ்வினாக்கொத்தின் உதவியுடன், மிக மிக வறியவர்கள், ஆலோசனைக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற் பங்குபற்றுவதற்காகத் தெரிவு செய்யப்படுவர். ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டமும் வாரத்திற்கு இரண்டு, இரண்டரை மணி நேர அமர்வுகளைக் கொண்டதாக அமையும். 30 முதல் 35 வரையான தாய்மாருக்குச் சனசமூக நிலையங்களிலோ ஒரு பௌத்த கோவில் மண்டபத்திலோ கிறிஸ்தவ தேவாலய மண்டபத்திலோ இப்பயிற்சி வழங்கப்படும். நிகழச்சித் திட்டத்தின் உள்ளடக்கம், பின்வருவன போன்ற விஷயங்களைக் கொண்டிருக்கும்: நிறை உணவும் போசணை, தாய்ப்பாலூட்டுவதன் நன்மைகள், தொற்று நோய்களுக்கெதிராகத் தடுப்பாற்றலைப் பெறுதல், நீரும் துப்புரவும், பற்களைப் பேணுதலும் அடிப்படைச் சுகாதாரத்தைப் பேணுதலும், குடும்பத் திட்டமிடல், போதை வஸ்துக்கள், மதுபானம் என்பவற்றின் பாதகமான தாக்கங்கள், ஒழுக்கமும் நன்னெறிகளும், பிள்ளைகள் மீது அன்பும் கவனிப்பும், குடும்ப வரவு செலவுத் திட்டத்தைத் திட்டமிடுதல், பாலுறவினாற் கடத்தப்படும் நோய்கள் (STD)/எச்ஐவி/ எயிட்ஸ், சுற்றுச் சூழலைப் பேணுதல், பிள்ளை விபச்சாரத்தைத் தடுப்பதற்கான பாதுகாப்பு வழிகள்.

மேலே குறிப்பிடப்பட்ட விஷயம் ஒன்றைப்பற்றி வள ஆளணியிலுள்ள ஒருவர் பேசுவதைக் கேட்பதில் மட்டுமன்றிச் தாய்மார் ஒருவருடனொருவர் சிநேகமாக உறவாடுதிலும் சிறிது நேரத்தைக் கழிக்கும் விதத்தில் இவ்வாராந்த அமர்வுகள் நடத்தப்படுகின்றன. பாடங்களை உரத்துக் கூறுதல், மேலே குறிப்பிடப்பட்ட விஷயங்கள் தொடர்பான பாத்திரங்களை ஏற்று நடித்தல், ஒரு சிறு நாடகத்தை நடித்துக்காட்டுதல் போன்றவற்றினூடாக, அவர்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகள் வெளிக் கொணரப்படுகின்றன. இச்செயற்பாடுகள், இத்தாய்மாரிடம் தம்மைப் பற்றிய சுய மதிப்பையும் தம்முடைய பெறுமானம் பற்றிய உணர்வையும் ஏற்படுத்துவதற்குச் சந்தேகமின்றி உதவுகின்றன. இவற்றினூடாக, இவர்கள் தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் சுதந்திரமாக இயங்குவதற்கு வேண்டிய சக்தியைப் பெறுகின்றார்கள்.

மனப்பான்மைகளில் மாற்றம், தத்தமது கணவருடனும் பிள்ளைகளுடனுமான தொடர்புகளிலும் உறவுகளிலும் மாற்றம், குடும்ப உறுப்பினர்களிடையே மேலும் சிறந்த புரிந்துணர்வு, பிள்ளைகள் மீது அதிகரித்த கவனமும் அக்கறையும், மேலும் சிறந்த சுகாதாரமான வாழ்க்கை, வறுமையினிடையேயும் கூட மேலும் சிறந்த வாழ்க்கைப் பண்பு என்பன போன்ற உடனடியான விளைவுகளை, இந்நிகழ்ச்சித் திட்டங்கள் முடிவடையும் போது, தாய்மார்களிடையே நாம்

காணக்கூடியதாக இருந்தது. இவற்றின் மூலம், அதிகரித்த பொறுப்புணர்ச்சி வளர்க்கப்படுவதுடன், தாய்மார், பிள்ளைகளின் செயல்களை மேலும் கவனமாகக் கண்காணிக்கும் இயல்பைப் பெற்றுத் தம் பிள்ளைகள், பிள்ளைத் துஷ்பிரயோகக்காரர்களுக்கு இரையாவதைத் தடுக்கின்றனர். தத்தமது அயலட்டைகளில் பிள்ளைத் துஷ்பிரயோகிகளின் நடமாட்டத்தையும் நடவடிக்கைகளையும் பற்றி விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருப்பதற்கும், தமது பாலியற் திருப்திக்காகப் பிள்ளைகளைப் பிடிப்பதற்கு அங்குமிங்கும் அலையும் சந்தேக நபர்களைப் பற்றிச் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்குத் தகவல்களை வழங்குவதற்கும் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் பெற்றோர் ஊக்குவிக்கப்படுகிறார்கள். பிள்ளைத் துஷ்பிரயோகிகளுக்கு வழங்குவதற்காகப் பிள்ளைகளைச் சேர்க்கும் அயலில் வாழும் ஆண்கள், பெண்கள், முகவர்கள் என்போர் பற்றியும் மிக அவதானமாக இருப்பதற்கு இவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

ஆலோசனைக் கல்வி வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றின் நீண்ட கால நன்மைகளைத் தாய்மாரிடம் உருவாகி வரும் சுய நெறிப்படுத்தப்பட்ட விருத்திச் செயன்முறையிற் காணலாம். இது, பங்குபற்றுநர்களின் சமூகப்பொருளாதார நிலையைச் சந்தேகமின்றி மேம்படுத்துகின்றது. இது, தமது பிள்ளைகளை, இவர்கள், பாலியற் சுரண்டலிலிருந்து பாதுகாப்பதற்கு இவர்களுக்கு உதவும். இந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படும் பிரதேசங்களில், பிள்ளை விபச்சாரத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, வலிமை மிக்க தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களாக இந்நிகழ்ச்சித் திட்டங்கள் அமைந்துள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'பீஸ்' இயக்கத்தின் முயற்சிகளின் மேலதிகப் பங்களிப்பாகவும் மேலும் நேர்நிலையான பங்களிப்பாகவும் அமையும் வண்ணம் இவை, 'பீஸ்' இயக்கத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இணைப்பு எட்டு

# பாலியல் ரீதியாகச் சுரண்டப்பட்ட பிள்ளைக்குப் புனர்வாழ்வளித்துப் பராமரிக்க வேண்டியதன் அவசியம்

'பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகச் சுரண்டுதல்' அல்லது 'விபச்சாரத்திற்காளாக்கப்பட்ட பிள்ளைகள்' என்ற விஷயங்கள், இன்று, வெளிப்படையாகவே ஆராயப்படுகின்றன. தற்பொழுது பிள்ளைத் துஷ்பிரயோகிகளின் புகலிடமென்று பலராலும் அழைக்கப்படும், இச்சுவர்க்கத் தீவின் கறைபட்ட நிலையை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் சுற்றுலாவிற்கான கௌரவ அமைச்சர், பணிப்படையொன்றை உருவாக்கியுள்ளார். இந்நவீன அடிமைத்தனமாகிய பிள்ளைப் பாலியற் துஷ்பிரயோகத்திற்குப் பிள்ளை இரையாவதைத் தடுப்பதற்கும் அதிலிருந்து பிள்ளைகளப் பாதுகாப்பதற்குமாக, மிகக் கஷ்டமான சூழ்நிலைகளில், அதி உயர் அபாயப் பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கருத்தரங்குகளை, 'பீஸ்' இயக்கம், கடந்த ஐந்தாண்டுகளாக நடத்தி வந்துள்ளது. சுகாதாரத் துறை அலுவலர்களும் கரிசனை கொண்ட ஏனைய குழுக்களைச் சேர்ந்தோரும் 'எயிட்ஸ்' பற்றிய கல்வியைத் தேசிய மட்டத்தில் வழங்குகின்றனர்.

விபச்சாரத்திற்குட்பட்ட பிள்ளை பற்றிய சமூகத்தின் மனப்பான்மை, இகழ்ச்சி, கண்டனம், அருவருப்பு என்றவாறாக இருந்து, அண்மைக்காலத்தில் அக்கறை, இரக்க உணர்ச்சி, புரிந்துணர்வு என்பவையாக மாற்றமடைந்துள்ளது. அக்கறை கொண்ட குழுக்களைச் சேர்ந்தோர், எப்பாவமுமறியாத, சூழ்நிலைப் பலியாடுகளை இவ்விடர்ப்பாட்டிலிருந்து காப்பாற்றும் முகமாக, காலத்திற்குக் காலம் ஒன்று திரண்டு, இவர்களை மீட்டுச் சமூகத்தில் இவர்களுக்கோர் இடத்தை வழங்குவதற்காகப் பாடுபடுகின்றனர். ஆனால், துரதிஷ்டவசமாக, இக்குழுக்கள் ஒரு சிலவே இருக்கின்றன.

1989 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 20 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் அமையத்தின் பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்ட பிள்ளைகளின் உரிமைகள்

பற்றிய ஐ.நா. சமவாயத்தின் 39 ஆம் உறுப்புரை பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "இச்சமவாயத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள், பலியான பிள்ளைகள், உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் குணமடைவதற்கும்; அலட்சியப்படுத்தப்படுதல், சுரண்டப்படுதல், துஷ்பிரயோகஞ் செய்யப்படுதல் என்பவற்றிலிருந்து விடுபட்டு சமூகத்துடன் மீளவும் ஒருங்கிணைவதற்கும்; சித்திரவதை அல்லது கொடுமைப்படுத்தப்படுதல், மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்தப்படுதல், கீழ்த்தரமாக நடத்தப்படுதல், தண்டிக்கப்படுதல் என்பவற்றிலிருந்து விடுவிக்கப்படுவதற்கும்; ஆயுதமேந்திய மோதல்களுக்காளாகாமலிருப்பதற்கும், பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு குணமடைதலும் சமூகத்துடன் மீள ஒன்றுதலும், பிள்ளையின் உடனலம், சுயமரியாதை, கௌரவம் என்பவற்றை வளர்க்கக்கூடிய சூழலில் இடம் பெற வேண்டும்." ஆகவே, பாலியல் ரீதியாகச் சுரண்டப்பட்ட பிள்ளைகள் குணமடைவதற்கும் சமூகத்துடன் மீள இணைவதற்கும் உதவுவதற்குகந்த விதத்தில் நடத்தப்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்தும் கடப்பாடு அரசிற்கு உண்டு. எனினும், இக்கடப்பாடு எவ்வளவு தூரத்திற்கு நிறைவேற்றப்படுகின்றது?

ஆயிரக் கணக்கான பிள்ளைகள், நாளாந்தம், பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதால், ஒவ்வொருவரும், அதாவது அரசாங்கத் துறை சார்ந்தோரும், அதைச் சாராதோரும் கைகோர்த்து, இப்பிள்ளைகளுக்கு மிகவும் வேண்டப்படும் 'புனர்வாழ்விற்கான கவனிப்'பை வழங்க வேண்டியது மேன்மேலும் கட்டாயமாகின்றது. பாலியற் துஷ்பிரயோகத்திற்காளாகும் கள்ளங்கபடமற்ற இப்பிள்ளைகள், பாதிப்பை ஏற்படுத்தும் உளரீதியான, அதிர்ச்சிக்கும் உள்ளாகி, சமூகத்தில் சேர்ந்து இயல்பாக வாழ முடியாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு விடப்பட்டால், குற்ற உணர்வு, இடைவிடாது, வாழ்நாள் முழுவதும் அவர்களை வாட்டும். சரியான தருணத்தில் இவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படாவிட்டால், இவர்கள் பெரும்பாலும் குற்றவாளிகளாகவோ போதை வஸ்துக்களுக்கு அடிமைப்பட்டவர்களாகவோ, கற்பழிப்போராகவோ மாறிவிடுகின்றனர்.

விபச்சாரத்திற்குட்பட்ட எந்தவொரு பிள்ளைக்கும் புனர்வாழ்வளிக்கும் எந்தவொரு முயற்சியும் வீணாவதில்லை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்திருத்தல் வேண்டும். இப்பிள்ளைகளை மறந்து, இப்பிள்ளைகளை ஒதுக்கப்பட்ட பிள்ளைகளாகக் கைவிடுவதிலுள்ள பெரும் அபாயத்தை முழுமையாக உணராதிருக்கின்றோம். சாதகமான தூண்டுதலை வழங்கி, கவனிப்பும் அக்கறையும் காட்டி, கௌரவ உணர்வையும் சுய மதிப்பையும் இப்பிள்ளைகளிடையே வளர்த்தால், இவர்கள் புனர்வாழ்வு பெற்றுச் சீராக்கப்பட்ட பயன் மிக்க பிரசைகளாகச் சமூகத்தில் வாழலாம்.

இப்பிள்ளைகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் வெவ்வேறு கட்டங்களில் மேற்கொள்ளப்படலாம். பிள்ளை விபச்சாரம் பெருமளவில் இடம்றெும் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள 'வருக' எனப்படும் மையங்கள், அம்மையங்களுக்குத் தாமாகவே வருகை தர விரும்பும் பிள்ளைகள் தமக்கு வசதியான நேரத்தில் அங்கு சென்று, அங்கு வழங்கப்படும் உணவையும் விளையாட்டு, கல்வி, ஓய்வு போன்றன தொடர்பான சேவைகளையும் பெறுவதற்கு வசதி செய்கின்றன.

நன்நடத்தைப் பாதுகாவற் சேவைகளினூடாக அல்லது ஏனைய முகவரகங்களினூடாக அனுப்பப்படும் பிள்ளைகளுக்கு 'வதிவு' மையங்கள் வசதி செய்து கொடுக்கின்றன. இப்பிள்ளைகள், வெவ்வேறு கால எல்லைகளுக்கு, இம்மையங்களில் தங்கியிருந்து தொழிற் திறன்களில் பயிற்சி பெறுகின்றனர். இத்தகைய புனர்வாழ்வுக் கவனிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று வெற்றி பெற வேண்டுமேயானால், முறையான 'பின் கவனிப்பு' அவசியம். இவ்வம்சம், பெரும்பாலும் அசட்டை செய்யப்படுகின்றது. பின் கவனிப்பு இடம்பெறாவிட்டால், புனர்வாழ்வு ஒரு பொழுதும் பூரணத்துவம் பெற மாட்டாது. ஏனெனில், வதியும் சூழ்நிலையை விட்டு விலகும் தருணத்திலேயே, சுதந்திரமாகத் தாம் வாழப்போகும் வாழ்க்கைக்கு ஈடு கொடுப்பதற்கு வேண்டிய அதிக அளவு ஊக்குவிப்பும் ஆதரவும் இப்பிள்ளைகளுக்குத் தேவைப்படுகின்றது.

பொருத்தமான ஒரு தொழிலைப் பெறுவதற்குப் பிள்ளைக்கு உதவுதல், பின் கவனிப்புச் சேவைகளுள் அடங்கும். தொழிலைப் பெற முடியாவிட்டால், பணம் சம்பாதிப்பதற்காக, மீண்டும் விபச்சாரத்தில் ஈடுபடும்படி பிள்ளை தூண்டப்படும். எனவே, இம்மையங்களில் இப்பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தொழிற் பயிற்சி, சமூகத்தின் தேவைகளுடன் தொடர்புபட்டதாகவும் பிள்ளைகள் உடனடியாகத் தொழிலைப் பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் தொழிற்சந்தையில் அவர்கள் இடம் பிடித்துக் கொள்ளக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும் என்பது முக்கியமாகும்.

புனர்வாழ்வுக் கவனிப்பே, பாலியற் சுரண்டலுக்குட்பட்ட பிள்ளையின் உடனடித் தேவையாகும். விபச்சாரத்திற்குட்பட்ட பிள்ளை, தனிமைப்படுத்தப்படலாகாது; அட்சியம் செய்யப்படலாகாது. பிள்ளை காத்திருக்க முடியாது; நாம் காத்திருக்கவும் கூடாது. சூழ்நிலைகளுக்காளாகிய, துர்ப்பாக்கியசாலிகளான இப்பிள்ளைகளைச் சமூக நீரோட்டத்தில் சேர்த்து விடும் நேரம் வந்துவிட்டது.

இணைப்பு ஒன்பது

# 'பீஸ்' இயக்கமும் இலங்கை நீதிபதிகளின் நிறுவகமும் நீதித்துறை அலுவலர்களுக்காகக் கூட்டாக ஒழுங்கு செய்த கருத்தரங்கு பற்றிய சிந்தனைகள்

1. பிள்ளையையும் அதன் உரிமைகளையும் பாதுகாப்பதற்காகத் தலையிட வேண்டிய மூன்றாவது சக்தியை, நீதிபதிகள் பிரதிநிதித்துவப்படுத்துவதனாலும் அதன் அடையாளமாக அவர்கள் திகழ்வதனாலும், நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படும் பிள்ளைகளின் அர்த்தபூர்வமான உயர்மட்டப் பாதுகாவலர்கள் நீதிமன்றங்களே என்பதை **உறுதிப்படுத்துதல்.**

2. பாலியல் நீதிமன்றம் அல்லது நீதவான் நீதி மன்றம் என்பன, பிள்ளைகள், இளைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ்ச் செயற்படும் போது, வயதுவந்த குற்றஞ்சாட்டப்பட்டவர் (சட்டத்தை மீறியவர்) இரண்டு அல்லது மூன்று நடவடிக்கைகளுக்குட்படுத்தப்படாமல் அதே நடவடிக்கைகளின் கீழ் தண்டிக்கப்படும் வண்ணம் அவரைப் பாலியல் நீதி மன்றத்தின் முன் நிறுத்தும் வகையில் பாலியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தைப் **பலப்படுத்துதல்.**

3. பிள்ளைகள் தொடர்பான பாலியற் துஷ்பிரயோகக் குற்றங்களை விசேட நியாயாதிக்கத்தின் கீழ்க் கையாளும் பொருட்டு, உயர்த்திய தண்டனைகள், குற்றப்பணம், நட்ட ஈடு என்பவற்றைப் பொறுத்தளவில், தண்டனைச் சட்டக்கோவையிற் செய்யப்பட்ட புதிய திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, நீதிவான் நீதி மன்றங்களின் நியாயாதிக்கத்தை **மீள நோக்குதல்.**

4. குறிப்பாக, பிள்ளைகளின் சாட்சியத்தை எடுக்கும் போது, பிள்ளைகளைப் பொறுத்தளவில், நீதி மன்றத்தின் சூழலைச் சிநேகபாவமுள்ளதாக்கும் நோக்கத்துடன், நீதி மன்றத்தின் நடவடிக்கை முறை, வழமை என்பவற்றின் மாற்றாணையைச் **சீர்திருத்துதல்.**

5. பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்தமை பற்றிய வழக்குகளின் போது, வெளிப்படும் சில கவலைகளும் அணுகி ஆராயப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, பாலியல் ரீதியாகப் பிள்ளைகளைச் சுரண்டுதல் தொடர்பாகப் பொருண்மைச் சட்டத்திற் செய்யப்பட்ட மாற்றங்களின் பின்னணியில் நடவடிக்கை முறைச் **சட்டத்தை மாற்றுதல்.**

6. பிள்ளைகளைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்தல் தொடர்பாக, விளக்க நீதி மன்றங்களிலும் மேன்முறையீட்டு நீதி மன்றங்களிலும் தண்டனைத் தீர்ப்புக் கொள்கை ஒன்றிற்காக **ஆதரவு திரட்டுதல்.**

7. பாலியல் தவறாளியைக் கவனித்தலும் அவருக்கு மறு வாழ்வு அளிக்கும் விதத்தில் அவரை இயல்பு வாழ்க்கையில் இணையச் செய்தலும் சமூகத்தின் கடமையாதலால், வெறுமனே தண்டனை விதிப்பதை விடுத்து, அதற்கு மாற்றீடாகப் புனர்வாழ்வளிக்கும் வழியைப் பின்பற்ற **முயலுதல்.**

8. ஒப்புறுதிப்படுத்தப்படாத சான்றுரை, விடியோ இணைப்புச் சாட்சியத்தின் ஏற்கத்தகுந்த தன்மை என்பவற்றின் அடிப்படையில் குற்றத் தீர்ப்பு வழங்கப்படலாம் என்ற நியதிச் சட்ட ஏற்பாடொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் சாட்சியம் பற்றிய சட்டத்தை **மாற்றுதல்.** (*1998 ஆம் 1990 ஆம்* ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்).

9. ஆலோசனை வழங்கும் சேவைகளுக்கான கீழ்க்கட்டமைப்பையும் தகாப் புணர்ச்சி தொடர்பான சந்தர்ப்பங்களில் தாய்க்கும் பிள்ளைக்குமான ஆதரவு முறைமை ஒன்றை **வழங்குதல்.**

10. தகாப் புணர்ச்சி உட்படப் பிள்ளையைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்த நிகழ்வுகள் பற்றிய தகவல்களை, நமது நவீன சமூகத்தில் வளர்ந்து வரும் இவ்விடயம் பற்றிய ஆய்விலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடக்கூடிய இலங்கை நீதிபதிகளின் நிறுவகம் போன்ற மத்திய குழுக்களிடம் **கொடுத்தல்.**

எஸ்.எல்.ஜே.ஐ. கொழும்பு
ஜே.எஃப்.ஏ. ஸோஸா
கருத்தரங்கு நடுவர்.

*'பீஸ்' இயக்கத்தின் பிரசுரங்களும் 'வீடியோ'க்களும் பிரசுரங்கள் :*

1. An Evil under the Sun - the sexual exploitation of children in Sri Lanka.
2. Wednesday's Children - some case studies of sexually exploited children.
3. Sinhala translation of 'Wednesday's Children'
4. The sexual exploitation of Children - some expert analyses in Sri Lanka.
5. Sinhala translation of 'Some expert analyses in Sri Lanka'
6. The sexual exploitation of Children - Some expert legal analysis.
7. The sexual exploitation of Children - Child maltreatment.
8. AIDS is Death.
9. AIDS is Death - Sinhala Translation
10. AIDS is Death - Tamil Translation
11. Sinhala translation of 'The Rape of the Innocent' by Ron O'Grady titled 'Sindulu Kekulu'
12. Studies on the commercial sexual exploitation of children in Sri Lanka.
13. A primer on the Penal Code (Amendment) Act No.22 of 1995 - An easy guide to the Amendments - Questions and Answers.
14. Sinhala translation of A primer on the Penal Code Amendments.
15. Tamil translation of A primer on the Penal Code Amendments.
16. A Synopsis of the World Congress Against Commercial Sexual Exploitation of Children, Stockholm August 1996
17. 'What everyone should know about the Sexual Abuse of Children'
18. Sinhala Translation of 'What everyone should know about the Sexual Abuse of Children'.
19. Tamil Translation of 'What everyone should know about the Sexual Abuse of Children'

20. Safety Code for Young 'Uns - Child 'scape'
21. Sinhala translation of Safety Code for Young 'Uns - Child 'scape'
22. Tamil translation of Safety Code for Younng 'Uns - Child 'scape'
23. Talking with children about AIDS
24. Sinhala translation of 'Talking with children about AIDS'
25. Tamil translation of 'Talking with children about AIDS'
26. Sexually transmitted diseases
27. Sinhala translation of 'Sexually transmitted diseases'
28. Tamil translation of 'Sexually transmitted diseases'
29. 'My Rights' - Ages 5-8 years in all three languages English, Sinhala and Tamil.
30. 'My Rights' - Ages 9-12 years in all three languages English, Sinhala and Tamil.
31. 'My Rights' - Ages 13-18 years in all three languages English, Sinhala and Tamil.

*1 முதல் 31 வரையான விஷயங்கள் யாவும் 'பீஸ்' பிரசுரங்களாகும்.*

32. Children under especially difficult circumstances and the law - An analysis published by The Human Rights Centre, Sri Lanka Foundation.
33. 'Let us uphold the Rights of the Child' - an interpretation of the UN Convention on the Rights of the Child, published by the YWCA of Sri Lanka.

'வீடியோ'க்கள்

1. Beach Boys of Sri Lanka (BBC)
2. Boymen (BBC)
3. Sindula Kekula (Sinhala)
4. AIDS is Death (Sinhala and English)
5. The Broken Buds (English)
6. P.E.A.C.E. : A Profile

PLAN INTERNATIONAL
SRI LANKA COUNTRY OFFICE

Published by
Protecting Environment And Children Everywhere
P.O. Box 58, Mount Lavinia

ISBN 955-8309-04-4